விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 30 சனிக்கிழமை (13.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 176

## 237 நாடாளுமன்ற உறுப்பினர்கள்

# 20 ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

**நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வரும்வகையில் அரசியல்யாப்பின் 20-வது திருத்தத்திற்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் அளித்துள்ளது. அதன்படி 237 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான அரசியலமைப் பின் 20-வது திருத்தச்சட்டம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த யோசனையை அமைச சரவை நேற்று வெள்ளிக்கிழமை அங்கீகரித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தை அமைக்கும் யோசனை சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி நாடாளுமன் 24 ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் பிரதமர்

**– சிங்களே ஜாதிக பெரமுன**

(கொழும்பு)

நாட்டின் தேசிய பாதுகாப்பு தற்போது பாரதூரமான நெருக்கடி நிலைக்கு உள்ளாகி இருப்பதாக சிங்களே ஜாதிக பெரமுன என்ற அமைப்பின் தேசிய அமைப்பாளர் அங்குலுகல்லே சிறி ஜீனானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பிரதமர் விடுதலைப் 02 ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்றம் கலைக்கப்படாது

### ஜனாதிபதி திட்டவட்டம்



(கொழும்பு)


பிரதியமைச்சர் பதவிகளை பயப்படாது ஏற்றுக்கொள்ளுங்கள், உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப் படமாட்டாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிதாக பதவியேற்றுக் கொண்ட பிரதியமைசசர்களிடம் கூறியுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட பிரதியமைச்சர்கள், நியமனங்களை பெறும் முன்னர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர்.

சுமார் ஒரு வார காலத்திற்கு தமக்கு அமைச்சு பதவிகள் அவசியமில்லை என அவர்கள் ஜனாதிபதியிடம் 24 ஆம் பக்கம் பார்க்க....

## அதிகாரம் கொண்ட பொறிமுறை அவசியம்

### அமெரிக்கா வலியுறுத்தல்



(கொழும்பு)

இலங்கையின் பொறுப்புக கூறும் உள்நாட்டுப் பொறிமுறை விசாரணை செய்யவும், குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிறுத்தி தண்டிக்கும் அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க செனடர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் நிலைவரம் தொடர்பில் அமெ 24 ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளுக்கு இந்தியா நிதி வழங்கியது !

### பாக். செனட்டில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இந்தியா, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி வழங்கியதாக பாகிஸ்தான் செனட் சபையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தொடர்பில் இந்திய அரசாங்கம் வெளியிட்ட அறிக்கைகளுக்கு கடுமையாக கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் செனட் சபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என செனட் சபையின் தலைவர் ராஜா மொஹ்முட் சபார் உல் ஹக் இந்த தீர்மானத்தை முன்வைத்திருந்தார்.

இந்தியாவின் இவ் மேலாதிக்க மனப்போக்கை பாகிஸ்தான் நிராகரித்துள்ளதாக பாகிஸ்தான் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய தலைமை அறிக்கைகளுக்கு எதிராக நடந்த விவாதத்தின் போது இந்தியா எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவித்தது என செனட் சபையின்தலைவர் ராஜா 24 ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றத் தாக்குதல் 14 பேருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத்தின் மீது கடந்த மே மாதம் 20ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் 14 பேருக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான பிணை முறியில் செல்ல அனுமதியளித்த யாழ்.நீத 24 ஆம் பக்கம் பார்க்க....

## 2 பில்லியன் டொலர்களை கடனாகப் பெற அரசு திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து 2 பில்லியன் டொலர்கள் வரை கடன் பெறத் திட்டமிட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த விபரத்தை வெளியிட்டார்.

அரசாங்கத்தின் ஐந்து வருட பதவிக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு மில்லியன் டொலர் கடனை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும், சந்தை பெறுமதியை பொறுத்து இரண்டு பில்லியன் வரை அதை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் 24 ஆம் பக்கம் பார்க்க....

## பாசையூரில் டைனமைட் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பாசையூர்பகுதியில ஒருகிலோடைனமைட்மருந்தையாழ் தலைமை பொலிஸ் நிலைய சட்ட விரோத செயல்கள் தடுப்பு பிரிவினர் நேற்று மாலை மீட்டுள்ளனர்.

பாசையூர் பகுதியில் நேற்றுமுன தினம் 24 ஆம் பக்கம் பார்க்க....

**நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளுக்கு...

புலிகள் அமைப்புக்கு ஆதரவான தோற்றத்தில் செயற்பட்டு வருகிறார்.

வடக்கு மாகாணத்தில் யுத்த ரீதியான விடுதலைப் புலிகளின் நினைவு கூரல்கள் நடத்தப்படுவதுடன் அவற்றுக்கு எதிராக பாதுகாப்பு தரப்பினர் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க திரிபுபட்ட மனநிலையிலும் வெறுக்கத்தக்க வகையிலும் செயற்படுகிறார்.

நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் அராஜக நிலைமைக்கு அவரே நேரடியாக பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அங்குலுகல்லே சிறி ஜீனானந்த தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதேவேளை சிங்கள பௌத்த மக்களுக்காக முன்னாள் ஜனாதிபதி அன்றும் போல் இன்றும் எதனையும் மேற்கொள்ளவதில்லை என சிங்களே ஜாதிக பெரமுன அமைப்பின் தலைவர் மெடில்லே பஞ்ஞாலோக்க தேரர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## அதிகாரம் கொண்ட...

இந்த சுதந்திரமான பொறிமுறை விசாரணை செய்யவும், குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிறுத்தவும், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு பொருத்தமான தண்டனைகளை வழங்கும் அதிகாரத்தை கொண்டதாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க செனட்டர் பற்றிக் லேஹி மேலும் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1543

# 5, 754 முன்னாள் போராளிகளுக்கு கடன் வழங்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பின் பல்வேறு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்த நிலையில் சமூகமயமாக்கப்பட்ட பயிலுநர்களுக்கான சுயதொழில் நிவாரணக் கடன் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன நேற்று தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பல்வேறு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்தநிலையில், மனித நேய நடவடிக்கைகளின் இறுதியில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டதன் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட்ட பயிலுநர்களுக்கான சுயதொழில் நிவாரணக் கடன் திட்டத்தினை நடை முறைப்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்த சுயதொழில் கடன் திட்டத்தின் கீழ் 2014.12.31 திகதி வரை 302 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மேலும் கடனைப் பெறுவதற்கான நோக்கில் 5,754 விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.

ஆகவே மேற்படி நிவாரணக் கடன் திட்டத்தின் நடைமுறை களில் அவசியமான மாற்றங்களுடன் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, லங்காபுத்ர வங்கி மற்றும் இலங்கை சேமிப்பு வங்கியின் மூலம் மேலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்களினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றார். (எ-11)

# மீள்குடியேற்றத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி மாயம்?

## வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் மீளக்குடியேறிய மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் இதுவரையில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த மீள்குடியேற்றத்திற்காக பல மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் அறிவித்துள்ள நிலையில், அந்த நிதிக்கு என்ன நடந்தது என வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழு கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன் வலி. வடக்கில் மீள்குடிய மர்ந்த மக்களிற்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் இக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 25 வருடங்களுக்குப் பின்னர் இவ்வாறு மீளக் குடியமரும் குடும்பங்களுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக பலரும் வாக்குறுதி வழங்கியிருந்த போதும் இதுவரையில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையே காணப்படுவதாக இக்குழுவின் தலைவர் சஜீவன் கவலை வெளியிட்டுள்ளார். (எ-11)

### தேவை

கொழும்பை அண்மித்த பகுதிகளில் 18-50 வயதினருக்கு பாதுகாப்பான உணவு, தங்குமிட வசதிகளுடன் வேலைவாய்ப்புக்கள். ஜேம்/பொபி/பிஸ்கட்/யோகட்/பால்மா/சோயா/Paint/Pvc/இறைச்சி/காமெண்ட்/டிபிடிபி போன்றவற்றுக்கு உற்பத்தி, லேபல், பொதியிடல், களஞ்சிய பிரிவுகளுக்கு தேவை. சம்பளம் 32,000/= (தொழில் அடிப்படையில்) நண்பர்கள், தம்பதியர் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்புக்கு:0776838231/0771116770

### டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

- பக்கவிளைவற்ற இலங்கை இந்திய மற்றும் தமது பரம்பரை சித்த ஆயுள்வேத மருந்துகளை மட்டும் உபயோகித்து மாற்ற முடியாதென கைவிடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் பிரபலமடைந்த விசேடமாக குழந்தையின்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி நீங்காப் பெயர் பெற்ற ஒரேயொரு தமிழ சித்த ஆயுள்வேத வைத்தியசாலையான யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலுக்கு அருகிலுள்ள சுஜீவா வைத்தியசாலை (சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)யின் பொறுப்பு வைத்தியரும் வைத்தியர் ஜெயசோதி ஜெயலன் அவர்களின் துணைவியாரும்
- அநுராதபுரம் மகாகளத்தாவ 25-வது நாகர் (அரச) பரம்பரைக்குரிய வைத்தியரும்
- லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளரும்
- வவுனிக்குளம் பாலிநகர் மகா வித்தியாலய பழைய மாணவியும்
- சிறந்த சமய சமூக சேவையாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் சமூகஜோதி, தாய்மைபபேற்று வைத்திய திலகம், சுதேச மருததுவ சக்கரவர்த்தினி முதலிய கௌரவங்களை பெற்றவருமான

**Dr.திருமதி . சந்திரமாலா ஜெயலன்**
சித்த ஆயுள்வேத சுதேச மருததுவர்

அவர்களுக்கு யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்திச்சங்கம், கொட்டடி ச.ச நிலையம், மலையக கலாச்சார சங்கம் என்பன இணைந்து 07-06-2015 அன்று நடாத்திய விழாவில் **இரத்தின தீபம்** என்ற விருதினை இந்திய துணைத்தூதுவர் கௌரவ A. நடராஜன் அவர்களும் யாழ பல்கலைக்கழக முகாமைத்துவத் துறைப் பீடாதிபதி பேராசிரியா தி.வேல்நம்பி அவாகளும் வழங்கி கௌரவித்தனர்.





இவர் மேன்மேலும் இவரது கணவருடன் இணைந்து சுதேச வைத்திய சமய சமூகப்பணிகளில் ஈடுபடுவதுடன் நீடூழி வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

திருமதி.ப.ஜெயசோதி
திருமதி.சி.பவானி
Dr.K.O.இராஜரட்ணம்
திருமதி.இ.சசிலா

C-1251

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லைநாதன் பரமேஸ்வரி

பிறப்பு
16 - 04 - 1937



இறப்பு
11 - 06 - 2015

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லைநாதன் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (11/06/2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு நல்லைநாதனின் (கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும், ஆனந்தி, சுகந்தி, பாமினி, சத்யநாதன், தாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சடாட்சரன், ஸ்ரீதாஸ், கருணாகரன், கல்யாணி, குமரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிலாஸ், சகானா, சுபாஸ், பிரகாஸ், நகீஸ், வர்ணன், சஞ்சய், நிவாஸ், திவேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

74, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு.
தொ.பே.இல.: 021-2226207

தகவல்:-
குடும்பத்தினர்

(740)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் மலையக கலை கலாசார சங்கமும் இணைந்து நடத்திய புத்தாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கலாநிதி லயன் கனகசபை சுந்தரலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் தொழிலதிபர் ந.சத்தியரூபன், இரத்தினதீபம் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் விழாத் தலைவர் கலாநிதி நா. தனேந்திரன் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

மேற்குறித்த போட்டிப் பரீட்சைக்கான எழுத்துப் பரீட்சையை 2015 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரமே நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதோடு பரீட்சை நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கான கல்வித் தகைமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டங்களை வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன் ஆகக் குறைந்தது 22 வயது தொடக்கம் ஆகக் கூடியது 28 வயது வரை இருத்தல் வேண்டும்.

உயரம் 5 அடி 6 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பணிப்பாளர் பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இலக்கம் 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு- 06 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இப்பரீட்சைகள் தொடர்பான மேலதிக விபரங்களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (3-7)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இலங்கை உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டம் ஒன்றினை பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

இவ் விண்ணப்பப்படிவமானது ஆணையாளர் நாயகம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 533, இல. 341, எல்விடிகல மாவத்தை, கொழும்பு- 05 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 12 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விபரங்களை நேற்றைய தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (3-7)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

கிராம அலுவலர் சேவையின் இரண்டாம் தரத்திலுள்ள கிராம அலுவலர்களை அச்சேவையின் முதலாம் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக விண்ணப்தாரிகளிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்தாரி 2006.01.01 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர் சேவையில் தரம் இரண்டிற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட அல்லது உள்ளீர்க்கப்பட்ட ஒரு அலுவலராக இருத்தல்வேண்டும். விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியில் கிராம அலுவலர் சேவையின் இரண்டாம் தரத்தில் 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இவ் விண்ணப்பப்படிவமானது பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத்திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் ஜூலை மாதம் 03 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பம் கோரல் தொடர்பாக நேற்றையதினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (3-7)

# முற்போக்கு போராட்டத்துக்கு முதற்கட்ட வெற்றியே- மனோ



125 தொகுதிகள் - 75 மாவட்ட விகிதாசாரம் - 25 தேசிய விகிதாசாரம் - மொத்தம் 225 என்று இருந்த தேர்தல் முறை திருத்த கணக்கு இப்போது மாறி 145 தொகுதிகள் - 55 மாவட்ட விகிதாசாரம் - 37 தேசிய விகிதாசாரம் - மொத்தம் 237 என அமைச்சரவையல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது 125 ஆக இருந்த தொகுதிகள் 145 ஆக அதிகரிக்கப்பட்டு 20 தொகுதிகள் கூடியுள்ளன. இது எங்கள் உறுதியான விட்டுக்கொடுக்கா போராட்டத்துக்கு கிடைத்துள்ள முதற்கட்ட வெற்றி.

மூன்று நாட்களுக்கு முன்னர் இருந்த நிலைமையை இது முற்போக்கான நிலைமை என்பது நிச்சயம். அடுத்த கட்டமாக பாராளுமன்றத்தில் இந்த மசோதா கொண்டு வரப்படும் போது அவசியமானால் இன்னமும் தொகுதிகளை கூட்டுவோம்.

அதேவேளை இரட்டை வாக்கு முறைமை இன்னமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது தொடர்பான சிறு மற்றும் சிறுபான்மை கட்சிகளின் போராட்டம் தொடரும் என ஜம்மு மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் இன, அரசியல், பொருளாதார, சமூக பன்மை தன்மை யதார்த்தத்தை பிரதிபலிக்கும் முகமாக தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழு செயற்படவேண்டும் எனவும், ஒரு மாவட்டத்தில் வாழும் மக்கள் மத்தியில் பெரும்பான்மை இனத்தைவிட மாற்று இன, மத ரீதியான சிறுபான்மை மக்கள் வாழும் பட்சத்தில் அவர்களது பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தும் முகமாக எல்லை நிர்ணய ஆணைக்குழு புதிய தொகுதிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சரவை ஆவணம் உறுதிப்படுத்தியுள்ளது.

தென்னிலங்கையில் பெரும்பான்மை இனத்துடன் கலந்து வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் சார்பாக, இவற்றையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

தேர்தல் திருத்த செயற்பாடுகளில் தொடர்ச்சியாக அனைத்து தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை கட்சிகளும் ஒன்றுபட்டு செயலாற்றிய காரணத்தாலேயே இந்த முதற்கட்ட வெற்றி கிடைத்துள்ளது என நான் நினைக்கின்றேன்.

முழு வெற்றி கிடைக்க நாம் தொடர்ந்தும் இலக்கை நோக்கி செயற்பட தயாராக உள்ளோம். தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி நிகழ்ச்சி நிரல்கள் காரணமாக எமது ஐக்கிய முற்போக்கு முயற்சிகளை குழப்ப முயல வேண்டாம் என அனைவரையும் நான் கோருகிறேன். எங்களுடன் இந்த தேர்தல் முறை சீர்திருத்த போராட்டத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் மட்டுமல்ல, ஜேவிபி, ஜனநாயக கட்சி, ஐக்கிய சமவுடமை கட்சி, நவசமசமாஜ கட்சி, ஹெல உறுமய ஆகியவையும் இணைந்து கொண்டுள்ளன.

இவற்றையும் இணைத்துக் கொள்ள நாம் அதிகம் சிரத்தைகள் எடுத்துக்கொண்டோம். அந்த முயற்சிகள் நற்பலன்களை அளித்து வருகின்றன. தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் நானும், எங்கள் பிரதி தலைவர்களான அமைச்சரவை அமைச்சர் பழனி திகாம்பரமும், இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணனும் கடந்த மூன்று நாட்களில் பத்துக்கும் மேற்பட்ட இரகசிய கலந்துரையாடல்களில் கலந்து கொண்டு ஆளும் மற்றும் எதிரணி அரசியல் கட்சி தலைவர்களையும், ஜனாதிபதியின் தேர்தல் திருத்த வரைபை தயாரிக்கும் விற்பன்னர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோம்.

அந்த பேச்சுவார்த்தைகளின் முழு விபரங்களையும் பகிரங்கமாக வெளியிட முடியாது என்றாலும், அவை சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவ அவசியங்களை பெரும்பான்மை தலைவர்களுக்கு புரிய வைக்க மிக சிறப்பாக வழி செய்து வருகின்றன என்பதை மட்டும் இப்போது கூறி வைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இராசி பலன்

13.06.2015

(வைகாசி 30, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55மணிக்கு

துவாதசி முன்னிரவு 11.46 மணிவரை

அச்சுவினி முற்பகல் 8.34 மணிவரை

இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

சுபநேரம் 2.52-4.22 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | செவ், சூரி, புதன் | |
| | கிரகநிலை | | குரு சுக் |
| | | | |
| | | சனி | ராகு |

வளவன்

**மீனம்:** பொது வாழ்வில் பாராட்டும், புகழும் கூடும், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்கும் எண்ணம் உருவாகும்.

**மேடம்:** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வேலைச்சுமை கூடும், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்:** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது குறைகள் கேட்கும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மைதரும், கௌரவமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எந்த நி நிலையிலும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலனில் உற்சாகம் பெறுவீர்கள்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடு நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், எதிர்பாராத பயணங்கள் இடம்பெறலாம், மறைமுக போட்டிகள் மாறும்.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** பணத்தோவைகள் பூர்த்தியாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், நண்பர்கள் சந்திப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒருவகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 218**

...அது எப்பொழுதும் ஒரு பிரார்த்தனையான மற்றும் நன்றி யுணர்வுடனான மன நிலையுடன் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் வழிகளை ஏற்றுக்கொள்ளும் மனோ பாவத்துடன் இருக்கக் கற்றுக் கொடுக்கிறது.

அது, வெளியுலக உணர்ச்சிகளால்; அலைக்கழிக்கப்படாமல், ஒவ்வொரு கணத்தையும் உங்கள் உள் மையத்தில் இருந்து அனுபவிக்கக் கற்றுக் கொடுக்கிறது.

அது கொண்டாடுவதற்குக் காரணங்களைத் தேடிக் கொண்டிராமல், வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் கொண்டாடுவதற்குக் கற்றுக் கொடுக்கிறது.

அது உங்கள் உள் அறிவுக் கூர்மையைத் தூண்டி, வெளியுலகச் செயல் திறனை வேகப்படுத்துகிறது.

அது உங்கள் விழிப் புணர்வை எழுப்பி ஆழமான விழிப்புணர்வை நோக்கி எடுத்துச் செல்கிறது.

அது உங்களை இச்சையிலிருந்து அன்புக்கும், கவலையிலிருந்து ஆச்சரியத்திற்கும், பொய்யிலிருந்து உண்மைக்கும், வேதனையிலிருந்து ஆனந்தத்திற்கும், பொறாமையிலிருந்து கொண்டாட்டத்திற்கும் எடுத்துச் செல்கிறது.

இப்பொழுது சொல்லுங்கள். இவற்றிலெல்லாம் துறவு எங்கு வருகிறதென்று?


மேலும் இன்னொரு விடயம்.... மக்கள் ஆன்மீகத்திற்கென தனியான நேரம் ஒதுக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்; நிச்சயமாக அவ்வாறு இல்லை. நான் அது தேவையில்லையென்று எதைக் கொண்டு சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். தனியாக நேரம் ஒதுக்க வேண்டும் என்று சொல்பவர்கள் ஆன்மீகவாதிகள் அல்ல; அவர்கள் மதவாதிகள்.

சடங்குகளும் சம்பிரதாயங்களும் இருப்பதால் மதத்திற்கு நேரம் தேவை. ஆன்மீகத்திற்கு அளவுடனோ அல்லது நேரத்துடனோ எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. ஆனால், ஆன்மீகத்திற்கும் உங்கள் வாழ்க்கைத் தரத்திற்கும் சம்பந்தம் உண்டு.

உங்களுக்கு உண்மையைத் தேடும் சிரத்தை இருந்தால் போதுமானது. பிறகு எப்பொழுதும் நீங்கள் செய்யும் எல்லாவற்றையும் தியானமாகச் செய்ய முடியும்; உங்கள் நோக்கத்தையும் அடைந்துவிடுவீர்கள். பிறகு நீங்கள் தானாகவே வேலையிலும் வீட்டிலும் மனிதர்களுக்கிடையேயான உறவிலும் பொறாமை மற்றும் ஒப்பிடுதல் போன்ற எந்த விதமான சக்தித் துணைகளும் இல்லாமல் பிரகாசிப்பீர்கள்.

எந்தவிதமான சூழ்நிலைக்கும் ஏற்றவாறு உங்களால் சுலபமாக உங்களைத் தகவமைத்துக் கொள்ள முடியும். உங்களால் எந்த இடத்திலும் எவருடனும் இயல்பாக இருக்க முடியும்.

## பொறாமையிலிருந்து விடுதலை!



வீடு என்பது வெறுமனே நீங்கள் வசிக்கும் இடம் மட்டுமே என்பதல்லாமல் முழு பிரபஞ்ச இருப்புத் தன்மையுமே உங்கள் வீடாகி விடும்.

நீங்கள் மன மற்றும் உடல் ரீதியான நெறிப்படுத்தல்களை உடைத்துக்கொண்டு விடுதலை பெற்று, உயர்ந்த பிர பஞ்ச இருப்புத் தன்மையுடன் கலந்து ஒன்றாகி விடுவீர்கள்.

பிரச்சினை என்னவென்றால், மக்கள் வெறுமனே சடங்குகளைச் செய்வதிலேயே திருப்தியடைந்து விடுகிறார்கள். இதைச் செய்வதில் ஏதோ ஒரு பாதுகாப்பை உணருகிறார்கள். மக்களுக்கு சடங்குகளுக்குப் பின்னால், இருக்கும் அறிவியல் தெரிவதில்லை; ஆனால், சடங்குகள் சிக்கல் நிறைந்தவை; சிக்கல் நிறைந்த விடயங்களில் ஈடுபடுவதை நாம் எப்பொழுதும் ஒரு சவாலாகவே கருதுகிறோம்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

## ஓமம்



மலைப்பிரதேசங்களில் பயிராகும் மணம் உள்ள தாவரங்களின் விதைகள்தான் ஓமம். ஓம விதைகள் மருத்துவத்தில் பயன்படுகின்றன. அசமோதம், திப்பியம், ஆகிய பெயர்களும் ஓமத்திற்கு உண்டு. தமிழ் மருந்துக்கடைகளில், ஒரு சில பெரிய வர்த்தக கடைகளிலும் பெறலாம்.

பசியைத் தூண்டவும், வாயுவை கலைக்கவும், உடலை பலமாக்கவும், உமிழ்நீரை பெருக்கவும் ஓமம் பயன்படுகிறது.

இதை உணவில் தகுந்தபடி சேர்த்துக்கொண்டால் அஜீரணம், வயிறு உப்புசம் ஆகியவை ஏற்படும் வாய்ப்பு குறையும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிறு உபாதைகளுக்கு ஓமம் முக்கிய மருந்துப் பொருளாகும். ஓமத்தை லேசாக வறுத்து இடித்து தூள் ஆக்கிக்கொள்ள வேண்டும். இதில் 5 கிராம் அளவு தூளுடன் கொஞ்சம் பச்சை கற்பூரம் சேர்த்து வெள்ளை துணியில் வைத்து நன்றாக நசுக்க வேண்டும். பின்னர் பந்துபோல் துணியை கட்டி மூக்கால் நுகர்ந்தால் சளி ஒழுகுதல், மூக்கடைப்பு குணமமாகும்.

வாயு உபாதை குணமாக ஓமத்தை வறுத்து பொடியாக்கி 1/4 தேக்கரண்டி அளவில் வெந்நீருடன் கலந்து இரவில் உட்கொள்ள வேண்டும். வயிறு மந்தம் சரியாக ஓமம், சுக்கு, கடுக்காய் தோல் ஆகியவற்றை சம அளவாக கொள்ள வேண்டும். இதில் 1/2 தேக்கரண்டி அளவு எடுத்து ஒரு கிளாஸ் மோருடன் கலந்து குடிக்க வேண்டும்.




## சிக்கன் ட்ரை ப்ரை



**தே.பொருட்கள்:**

சிக்கன் - 1/2 கிலோ
பெரிய வெங்காயம் - 1
பூண்டு - 10 பற்கள் (பொடியாக நறுக்கியது)
இஞ்சி - 1 இன்ச் (பொடியாக நறுக்கியது)
பச்சை மிளகாய் - 8 (அரைத்தது)
உப்பு - தே.அளவு
எண்ணெய் - தே.அளவு

அரைப்பதற்கு... பட்டை - 2, கிராம்பு - 4, மல்லி - 1 டேபிள் ஸ்பூன், வெந்தயம் - 1/4 டீஸ்பூன், சீரகம் - 1/2 டீஸ்பூன் , சோம்பு - 1/2 டீஸ்பூன்

**செய்முறை**

முதலில் சிக்கனை நன்கு சுத்தமாக கழுவி, நீரை வடித்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் மிக்ஸியில் அரைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை போட்டு அரைத்து பொடி செய்து கொள்ள வேண்டும். பின்பு ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதக்க வேண்டும். பிறகு அதில் சிக்கனை போட்டு சிறிது நேரம் வதக்கி, பின் பச்சை மிளகாய் பேஸ்ட் சேர்த்து சிறிது நேரம் வதக்க வேண்டும். பின் அதில் பூண்டு, இஞ்சி சேர்த்து வதக்கி, உப்பு தூவி அரைத்து வைத்துள்ள பொடி சேர்த்து, சிறிது தண்ணீர் ஊற்றி, மூடி வைத்து சிக்கனை [illegible] வைக்க வேண்டும். சிக்கன் நன்கு வெந்து, தண்ணீர் வற்றியதும் [illegible] இறக்கி பரிமாறினால், காக்கிநாடா சிக்கன் ட்ரை ப்ரை ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய வரலாறு

இறைமகன் இயேசுக் கிறிஸ் துவோடு அந்நியோன்னிய நேச பந்தமாய் இரண்டறக் கலந்த புனித அந்தோனியார் அன்றும் இன்றும் என்றும் பிரகாசித்துக் கொண்டே இருப்பதோடு அவருடைய திட்டத்தை நிறைவேற்ற அகில உலகத்துக்கும் கிறிஸ்து வின் நற்செய்தியை பிரசங்கித்து புதுமைகள் பல புரிந்து சொல் லொணாத் துன்பங்களையும் துய ரங்களையும் இன்பங்களையும் ஏற்று ஆன்மாக்களை இறைய ரசில் சேர்க்க அரும் பாடுபட்ட புனித அந்தோனியார் சுன்னாகத்தையும் மக்களையும் மறந் தாரில்லை.

அதன் பிரகாரம் சுன்னாகம் மத்திய பகுதியிலே கந்தரோடை வீதியில் சந்தைக்கு அருகாமை யில் 1837 ஆம் ஆண்டு வேலு அந்தோனி என்பவரால் ஒரு சிறிய கொட்டில் கோயில் அமைக்கப் பட்டது.

ஆனால் அன்றைய ஆண்டுகளிலே விரோதிகளால் தீ மூட்டி எரிக்கப்பட்டது. ஆலயம் முழுவதும் எரிந்து சாம்பலாகி விட்டது.



ஆனால் அன்றும் இன்றும் எழுந் தருளி இருக்கும் புனித அந்தோனியாரின் சுரூபமும் கூடும் அற்புத மான விதமாக ஒரு சேதமுமின்றி பிரகாசித்துக் கொண்டே இருந்தது.

கோயில் முற்றாக எரிந்து சாம் பாலாகியும் அதன் நடுவிலே இருந்த அந்தோனியாரின் சுரூபமும் கூடும் எந்தவித சேதமோ மறுவோ இல்லா மல் அற்புதமாய் காப்பாற்றப்பட்டது தான் புனித அந்தோனியார் சுன் னாகத்தில் செய்த அற்புதம். அதன் பின்பு அந்த இடத்தில் ஸ்தீரமாய் ஒரு ஆலயத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமென மக்கள் மன உறுதி கொண்டிருக்கும் வேளையில் அந் தோனி மரியான் என்பவர் மேலதிக மாகக் காணியை அவ் ஆலயத்து க்கு அன்பளிப்பு வழங்கினார்.

ஞானத் தந்தையர்களே ஆங்கி லம் சமயம் போன்ற பாடங்களைக் கற்பித்து வந்தார்கள். வேறு பாட சாலைகள் அயலில் இல்லாதத லும் வண பெஞ்சமீன்அடிகள் வண. ஆபிரகாம் அடிகள் கல்வியைக் கற்பித்து வந்ததாலும் சகல இன,மத பிள்ளைகளும் அயல் ஊர்களில் இருந்து இங்கு வந்து கல்வி பயின் றார்கள். பாடசாலை இடம்போதா மையால் மரியாம்பிள்ளை, வரோணிக்கா என்பவர்கள் மேலதிக காணியை அன்பளிப்பாக வழங்கி னார்கள்.

தற்போதைய மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இப்ப ங்கில் குருவாக இருந்த காலத்தில் ஆலயம் பூர்த்தியாக்கப்படாமல் இரு ந்த துயரங்களை மக்கள் எடுத்துச் கூறிய போது அதைக் கட்டி முடி க்க அனுமதியளித்து ஆலயமும் சில மாற்றங் களுடன் பங்கு மக்களின் பூரண ஒத்து ழைப்புடன் முடிக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் அபிஷேகமும் செய்யப்ப ட்டது.

**M.யோண்பற்றிக்**
**சுன்னாகம்.**

---

## கடற்றொலில் மற்றும் கடலோட்டுத்துறையில்

# கற்கைநெறிகளை பயில்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

சமுத்திர பல்கலைக்கழகத்தின் கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி பின்வரும் பாடநெறிகளுக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது. டிப்ளோமா டெக் உதவி அலுவலர் பயிற்சி நெறி, கரையோர வளங்களின் முகாமைத்துவம், மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடி முகாமைத்துவம், சுழியோடிப் பயிற்சி நெறி, படகு உற்பத்தி செய்தலும் திருத்துதலும், மீன்பிடி தொழில்நுட்பம், வெளி இணைப்பு இயந்திர தொழில்நுட்பம், கடலக ஓட்டுநர் பயிற்சி நெறி, கடலக மாலுமி பயிற்சி நெறி, வெளி இணைப்பு இயந்திர பொறி வலர் உயிர் பாதுகாப்பு பயிற்சி நெறி, கடலக வரை படம் வாசித்தலும், செய்மதி தொடர் பாடலும்.

இப்பாட நெறிகளை பயில விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 30 திகதிக்கு முன்னர் குருநகர் 2 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு நேரடி யாகவோ அல்லது தபா லிலோ அனுப்பி வைக்க முடி யும். இக்கற்கை நெறிகள் தொடர்பான மேலதிக விபரங் களை பெற விரும்புபவர்கள் பின்வரும் எமது அலுவலக தொலைபேசி 021 222 6251 இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்ப்பாண கடல் தொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியின் உதவிப் பணிப் பாளர் அறி வித்துள்ளார். (இ

---

# ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மீது மாலினி பொன்சேகா பாரியகுற்றச்சாட்டு

(கொழும்பு)

மகிந்த ஆட்சிக் காலத்தில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் கப்பம் கோரப்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மாலினி பொனசேகா தெரிவித் துள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தில் காணப்பட்ட கப்பம் கோரல்கள் மற்றும் இலஞ்ச ஊழல் மோசடிகள் காரணமாகவே நான் தொலைக்காட்சி நாடகங்களை இயக்க வில்லை.கப்பம் வழங்க விருப்பமின்மையே இவ்வாறு நாடகங்களை இயக்காமைக்கான காரணமாகும். கடந்த காலத்தில் ஒரு சிலர் இயக்கிய தொலைக்காட்சி நாடகங்கள் ஓரிரு நாட்களில் ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

எனது கோரிக்கைக்கு உடன்படாது பணத்திற்காக தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. இதனால் கடந்த காலங்களில் மிகவும் தரம் குறைந்த தொலைக்காட்சி நாடகங்களே தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இந்த நிலையில் நான் நடித்த தொலைக்காட்சி நாடகங்களைக் கூட ஒளிபரப்புச் செய்ய ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. அநீதிக்கு எதிராக நான் போராடியதனாலும் என்னிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ள முடியாது என்பதாலும் எனது நாடகங்கள் ஒளிபரப்புச் செய்யப் படவில்லை என மாலினி பொன்சேகா சிங்கள ஊடகமொன றுக்குத் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நாடகங்களை ஒளி பரப்புச் செய்வதற் காக பணம் மற்றும் பாலியல் ரீதியான இலஞ்சம் வழங்கப் படுவதாக அண்மை யில் குற்றம் சுமத்தப் பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (இ-5)

---


**தங்கத்தேர் ஏறிவரும் சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் அருள்வேண்டி நிற்கும்...**

கோவில் பொருட்கள்
பித்தளைச் சாமான்கள்
திரைச்சீலை வகைகள்
போன்ற பொருட்களைப்
பெற்றுக் கொள்ள...

**ஸ்ரீ சக்தி படமாடம்,**
**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**



**யாழ்.வண் வடகிழக்கு கலட்டி**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**

**இன்று நான்காம் நாள்**



விக்னவிநாயகனே வினை தீர்க்கும் கணபதியே!
வீரகத்தி விநாயகனாய் கலட்டியில் உறைபவனே!
சக்தி கணபதியே சங்கடங்கள் போக்கிடும் மூக்ஷிக வாகனனே!
பாமாலை பாடியே உனக்குப் பூமாலை சாத்தினோம்
பக்தியுடன் வணங்கி நின்றுன் திருவீதி வலம் வந்தோம்!
பானை வயிற்றோனே பரமசிவனின் திருமகனே!
முக்தி தர வேண்டியே முழுமனதாய்ப்பாதம் பணிந்தோம்
மூலப்பரம்பொருளே கஜமுகனே சரணம்! சரணம்!!

(C-1238)

நாச்சிமார் கோவிலடி
கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)



**இவர்களுக்கு மணமகள் தேவை** — **கல்யாண மாலை** — **இவர்களுக்கு மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 34 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: B/4601 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 18 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC, MSC USA<br>தொ.இ: G/4605 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 4 3/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/4602 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 14 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4606 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 55 1/4 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4603 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 45 1/2 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4608 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 19 1/2 செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSC, MSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4604 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 28 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ பெர்றியியலாளர்<br>தொ.இ: G/4612 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது கடமையாகும்

## யாழ். அரச அதிபர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**வீதி விபத்தை தடுப்பதும் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதும் நம் ஒவ்வொருவருடைய கடமையாக இருப்பதால் அனைவரும் போக்குவரத்து பொலிஸாருக்கும் மோட்டார் வாகன திணைக்களத்தினருக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்தில் பாதுகாப்பை பேணும் நோக்குடன் யாழ். மாவட்டச் செயலகமும் யாழ். மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவினரும் இணைந்து புதிய நடவடிக்கை ஒன்றினை யாழ்.முற்றவெளிப் பகுதியில் நேற்றைய தினம் ஆரம்பித்திருந்தனர்.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பேருந்துகள், ஆட் டோக்கள் தொடர்பாக அதிகமான முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன.

பாடசாலை சேவையை மேற்கொள்பவர்கள் கூடுதலான மாணவர்களை ஏற்றிச் செல்வதால் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதை தடுக்கும் நோக்குடன் போக்குவரத்து பொலிஸாரும் யாழ். மாவட்ட செயலக போக்குவரத்து திணைக்களத்தினரும் இணைந்து வாகனங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கை ஒன்றினை ஆரம்பித்துள்ளோம்.

மாணவர்களை ஏற்றிச் செல்லும் போது கவனமாக கொண்டு செல்ல வேண்டும். அத்துடன் வாகனங்களின் தரத்தினை உரியமுறையில் பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும். இதன்மூலம் விபத்துக்களை தடுத்துக்கொள்ளமுடியும்.

இந்த நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெறும். இது அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பொலிஸ் பிரிவின் உதவி பொலிஸ் பரிசோதகர் ஐ.சி.ஏ.கெ. ஜெயவம்ச கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களை பேருந்துகள், ஆட்டோக்களில் பெற்றோர் அனுப்பும்போது சாரதிகளை நம்பித்தான் தமது பிள்ளைகளை அனுப்புகின்றார்கள்.

எனவே நீங்கள் பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் ஒழுங்குமுறையில் இருக்க வேண்டும். பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் கட்டாயமாக மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு பிரிவினால் அனுமதி பெற்றிருக்கவேண்டும்.

இலங்கையில் மிக அண்மையில் 84 பேர் வீதி விபத்துக்கள் மூலம் இறந்துள்ளார்கள். ஆகவே வாகன சாரதிகளின் பிழைகளுக்கு வழக்கு தாக்கல் செய்வது மட்டுமல்லாது இது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும் எமது கடமை.

நீங்கள் கொண்டு செல்லும் பாடசாலை மாணவர்களை உங்கள் பிள்ளைகள் போல் கருதிக் கொண்டு செல்லவேண்டும். இன்றைய தினத்திற்கு பின்னர் பாடசாலை சேவையை மேற்கொள்ளும் வாகனங்கள் அனைத்திலும் விசேடமாக கவனம் செலுத்தப்படும். மீறி செயற்படுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் கே.மதிவண்ணன் கருத்து தெரிவிக்கையில், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய மான நோக்கம் பாடசாலை செல்லும் மாணவர்களின் பாதுகாப்பை பேணுவதே.

ஒவ்வொரு மாதமும் இந்த நடவடிக்கையை நாம் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளோம். இந்த நடவடிக்கையின் போது மோட்டார் வாகன பரிசோதகர்களால் பிழைகள் திருத்தம் செய்யப்பட வேண்டிய வாகனங்களுக்கு கட்டளைகள் வழங்கப்படும்.

கட்டளை வழங்கப்பட்ட நாளில் இருந்து 10நாட்களுக்குள் வாகனம் சரி செய்யப்படவேண்டும். அதன் பின்னர் மாவட்டச் செயலகத்தில் உள்ள மோட்டார் வாகன பரிசோதகரிடம் வருமான வரி பத்திரத்தையும் பொலிஸாரிடம் சாரதி அனுமதிப்பத்திரத்தையும்பெற்றுக்கொள்ளமுடியும்.

அத்துடன் மாணவர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களில் அநாவசியமற்ற படங்கள், மாலைகள் என்பன பொருத்தப்படக் கூடாது, வாகனத்தின் முன்பக்கமும் பின்பக்கமும் பாடசாலை சேவை என பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

இச் செயற்பாடுகளை கடைப்பிடிக்கத்தவறும் பட்சத்தில் வாகன சாரதிகள், உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இசையின் முகங்கள் இறுவெட்டு வெளியீடு



(மல்லாகம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் காண்பிய ஊடகக் கழகத்தினரால் இசையின் முகங்கள் இசைப்பாடல் இறுவெட்டு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

உயர்தர மாணவர் மன்றத்தலைவர் அ.ஜீசஸ் றொக்கின்சன் தலைமையில் நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலைகால வாழ்வினை நினைவுபடுத்துகின்ற வகையில் விடைபெறும் நேரம் என்னும் தொனிப்பொருளில் பாடல்கள் அடங்கிய இசையின் முகங்கள் இறுவெட்டு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இறுவெட்டினை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் ஜெ.ரஜீவன் வெளியிட்டு வைக்க சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சம்பத்வங்கி முகாமையாளர் ச.பரமநாதன், கல்லூரி அதிபர் எஸ்.சிவநேஸ்வரன், காண்பிய ஊடகக் கழக பொறுப்பாசிரிது எஸ்.ரி.அருள்குமரன், காண்பிய ஊடகக் கழக மாணவர்கள் இணைந்து பெற்றுக்கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-21)

# பெயர் பட்டியல் மக்கள் பார்வைக்கு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்கத்தவர்களின் பெயர் பட்டியல் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 19ஆம் திகதி வரை வழிபடுவோர் சங்கத்தின் உறுப்பினர்களின் பெயர் பட்டியலை யாழ். மாவட்ட செயலகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மற்றும் மருதடி ஆலய அலுவலகத்திலும் இந்த வழிபடுவோர் சங்க உறுப்பினர்களின் பெயர் பட்டியலை பார்வையிட முடியும்.

இதில் ஆட்சேபனைகள் மற்றும் பெயர் மாற்றங்கள், திருத்தங்கள் செய்ய வேண்டுமாக இருந்தால் அதனை எதிர்வரும் 19ஆம் திகதி வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளருக்கு எழுத்த மூலம் செய்யலாம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-5)




### 17 கிராம சேவையாளர் பிரிவிலிருந்தே மத்தியஸ்தர் சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுகளில் 17 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்தே மத்தியஸ்தர் சபைக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


மிகுதி 14 கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் எந்தவொரு உறுப்பினரும் தெரிவாகவில்லை எனத் தெரிய வருகின்றது.


அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு மூன்று உறுப்பினர்களும் கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு 2 உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்தியஸ்தர் சபைக்கு 21 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் கருத்தில் கொள்ளாது தெரிவு இடம் பெற்றுள்ளமை குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது. (இ-3-134)

# காடுகளைப் பாதுகாப்பதில் புலிகளின் பங்களிப்பு அதிகம்

## அமைச்சர் ஐங்கரநேசன் சுட்டிக்கட்டு



இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் வடமாகாணத்திலேயே காடுகள் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவித்த வடமாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கில் காடுகளைப் பாதுகாப்பதில் விடுதலைப்புலிகளின் பங்களிப்புப் பெரிதாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

வலி.மேற்கு பிரதேசசபையும் உலக தரிசனம் நிறுவனமும் இணைந்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றினை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்திருந்தன. வலி.மேற்கு பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர்மேற்கண்டவாறு தெரிவித்தார். உலக சுற்றாடல் தினத்தன்று இலங்கை ஜனாதிபதி ஆற்றிய உரையில் வடக்கின் காடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

தான் வானூர்தியில் யாழ்ப்பாணத்துக்குப் பயணித்துக் கொண்டிருந்தபோது வில்பத்துக்காட்டின் ரம்மியமான சூழல் சிதைக்கப்பட்டிருப்பதைத் தனது இரண்டு கண்களாலும் பார்த்து வேதனையுற்றதாகவும், அதேசமயம் யுத்தம் நடைபெற்ற வடக்கிலும் கிழக்கிலும் காடுகள் அதிக அளவில் இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் என்னுடன் ஒருதடவை உரையாடியபோது இதே கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். சமாதான காலப்பகுதியில் உலங்கு வானூர்தியில் அவர் பயணித்த போது, தென் இலங்கையில் காடுகள் அழிக்கப்பட்டிருப்பதையும் வடக்கில் காடுகள் செழித்து வளர்ந்திருப்பதையும தான் கண்ணுற்றதாகத் தெரிவித்தார். அந்த அளவுக்கு, எமது காடுகள் யுத்தம் நிலவிய போதும் காப்பாற்றப்பட்டிருப்பதையிட்டு நாம் பெருமை கொள்ளலாம்.

இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் ஏறத்தாழ 29 வீதம் அளவுக்குக் காடுகள் இருக்கின்றன. ஆனால், மாகாண ரீதியாகப் பார்த்தால், இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் வடக்கு மாகாணத்திலேயே காடுகள் அதிகமாக உள்ளன. வடமாகாணத்தின் நிலப் பரப்பில் தற்போது 49 வீதம் அளவுக்குக் காடுகள் மூடிக்காணப்படுகின்றன. வடக்கிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அடர்ந்த காடுகள் அதிகமாக உள்ளன.

எமது காடுகள் காப்பாற்றப்பட்டதில் விடுதலைப் புலிகளுக்குப் பெரும் பங்கு இருக்கிறது. உலகின் போராட்ட அமைப்புகள் பலவும் தமது நிதி மூலமாகக் காட்டு வளத்தையே பயன்படுத்தி வந்துள்ளன. மரங்களை வெட்டி விற்றும், யானைகளை வேட்டையாடித் தந்தங்களை விற்றும் பணத் தேவையைப் பூர்த்தி செய்திருக்கின்றன. ஆனால், விடுதலைப் புலிகள் வனவளப் பாதுகாப்புப் பிரிவு என்று தனியான ஒரு நிர்வாக அலகையே உருவாக்கிக் காடுகளைப் பாதுகாத்து வந்துள்ளார்கள். ஒரு மரத்தைத் தறிக்க நேர்ந்தால் பத்து மரங்களையாவது நட்டுவளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின்போது பிரதேசசபையால் பாடசாலைகளில் நடத்தப்பட்ட சூழல தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையருக்கு ஆதரவாக பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்


பிரிட்டனில் இருந்து நாடு கடத்தலை எதிர்நோக்கியுள்ள இலங்கையருக்கு தமது ஆதரவை வெளியிடும் முகமாக நேறறு தொழிற் சங்கத்தினரும் மனித உரிமை நடவடிக்கையாளர்களும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

தென்யோக்செயாரில் வசிக்கும் ஜனகன் சிவாநந்தன் என்பவரே நாடு கடத்தலை எதிர்நோக்கியுள்ளவராவார். இவர், 2009 ஆம் ஆண்டு பாடசாலை மாணவராக இருந்த போது இலங்கைப்படையினரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக அவரின் உடம்பில் அடிகாயங்களுக்கான அடையாளங்களும் உள்ளன. அத்துடன் ஜனகன் 10 நாட்கள் வரை படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பிரிட்டனுக்கு சென்று அரசியல் அடைக்கலம் கோரியுள்ள இவர், தற்போது அந்நாட்டு குடிவரவு தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பான விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது. இதன்போது அவரின் தடுத்து வைத்தல் காலம் நீடிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக தமிழ் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (இ-5)





# மோசடிக்காரர்கள் பாராளுமன்றத்திற்கு செல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும்

## சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றால் புதிய முறையில் தேர்தல் நடத்தப்படுதல் மற்றும் மோசடி காரர்களுக்கு எதிராக தண்டனை வழங்கப்பட வேண்டும். அவர்கள் பாராளுமன்றம் செல்வதை தடுக்க வேண்டும் என மாதுலுவாவே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.**



பிலியந்தலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படாவிட்டால் போதை பொருள் விற்பனைக்காரன், திருடன், மோசடிக்காரன், சூதாட்டக்காரன மாத்திரமே எதிர்வரும் காலத்தில் நாடாளுமன்றில் செயற்படுவார்கள்.

சாதாரண ஒரு மனிதனால் நாடாளுமன்றில் செயற்பட முடியாத நிலை தோன்றி விடும். எனவே தேர்தல் முறையில் மாற்றம் என்பது கட்டாயமானது.

கட்சி மாறுதல் முறை மாற்றப்படல் வேண்டும், தேர்தல் செலவினை கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறான ஒரு பயணத்தை வெற்றிக் கொண்டால் அது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியல்ல. மக்களின் வெற்றியாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# திடீர் விபத்துக்களினால் உயிரிழக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி

(கொழும்பு)

தெற்காசியாவில் எதிர்பாராத திடீர் விபத்துக்களால் உயிரிழக்கும் சிறுவர்களின் தொகை வருடாந்தம் 389ஆயிரம் வரை அதிகரித்துள்ளாக யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கெரொலின் பெக்கர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கல்வி பணியகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,சூழல் பாதுகாப்பு, எதிர்பாராத விபத்துக்களிலிருந்து பாதுகாப்பு என்பன சிறுவர்களுக்கான உரிமைகளாகும். வருடாந்தம் விபத்துக்களில் மட்டும் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மில்லியன் கணக்கில் உயிரிழக்கின்றனர்.

இது குறித்து பெற்றோர் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும். பெற்றோரின் அறியாமையின் நிமிர்த்தமும் பொறுப்புணர்வற்ற காரணங்களினாலுமே சிறார்களின் உயிர்கள் பரிதாபகரமாக காவு கொள்ளப்படுகின்றது. குறிப்பாக மூச்சுத்திணறல்,நீரில் மூழ்குதல், வீதி விபத்துக்கள், எரிகாயங்கள், விலங்குகளால் தாக்கப்படல் போன்ற பல்வேறு காரணங்களினால் சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர்

சிறந்த முறையில் அமைக்கப்பட்ட தொடர்பாடல் முறையினை பயன்படுத்துவதன் மூலம் சிறுவர்களுக்கு ஏற்படும் விபத்துக்களை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும். அத்தோடு முன்னெச்சரிக்கைகளை முன்னெடுக்கவும் பாதுகாப்பையும் பெறமுடியும்.

பொதுவாக சிறுவர்கள் உடல் அளவு, வளர்ச்சி, அனுபவக்குறைவு, அறியாமை போன்ற காரணங்களினால் இலகுவில் காயங்களுக்குட்படுகின்றனர்.

இலங்கையில் 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளின் மரணத்தில் 4 ஆவது பெருங்காரணியாக சிறுவர் காயங்கள் அமைந்துள்ளன. 2009 ஆம் ஆண்டு சீமாட்டி வைத்தியசாலையின் அறிக்கையின் படி, சிறுவர் மரணவீதம் அதிகரித்துள்ளது. அத்தோடு ஐ.நா. சபையின்சிறுவர் உரிமைகளுக்கான பிரிவு சிறுவர் பாதுகாப்பினையும் சிறுவர் உரிமையாக்கியுள்ளது. அதன் பிரகாரம் சிறுவர்களை பாதுகாப்பது சமூகத்தவரின் கடமையாகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜே.வி.பி.முடிவுக்கு வரவேண்டிய அரசியல் அமைப்பாக ஆகிவிட்டது

"மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) முடிவுக்கு வர வேண்டிய அரசியல் அமைப்பு ஆகிவிட்டது. ஏனெனில் அது இன்று தவறான அரசியல் இயக்கமாக மாறி விட்டது. கடந்த ஜனவரி 9 ஆம் திகதி நாட்டில் சதி முயற்சி செய்ய முயன்றவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு அவ்விடயத்தில் கண்டும் காணாதது போன்று செயற்படுகின்றது.இவ்வாறு நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்த அக்கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். ஜே.வி.பி. இயக்கம் ஜனநாயகத்தையும் சமூக நீதியையும் கட்டிக்காக்க உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதற்காக ஒரு இலட்சம் போராளிகளை இழந்தோம்.. ஆனால் இப்போது இந்தக் கொள்கைகளை ஜே.வி.பி. கைவிட்டு விட்டது. எனவே இந்த அமைப்பு இயற்கையாகவே இறக்க வேண்டிய அமைப்பு ஜே.வி.பி. முன்னர் பெற்ற வெற்றிகளுக்கு சூத்திரதாரியாக விளங்கியவன் நானே. எனக்குப் பின்னர் அந்த அமைப்பை தந்திரோபாயங்களை வகுத்து முன்னேற்றக் கூடியவர்கள் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை பி.ப.1.30 மணிமுதல் பி.ப.2.30மணிவரை யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-3)

# பவளவிழா மலர் அறிமுகமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

(கொழும்பு)

காரைநகர் மணிவாசகர் சபையின் பவளவிழா மலர் (1940-2015) அறிமுக விழாவும் கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு விவேகானந்த சபை, நாவலர் சபையின் உப தலைவரான க. ஜெகதீசன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக நிதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசனும் சிறப்பு விருந்தினர்களாக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் இரகுபதி பாலஸ்ரீதரன் தம்பதியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மங்கல விளக்கினை மேல் மாகாண சபை உறுப்பினர் சண்குகவரதன் தம்பதியினர் ஏற்றிவைப்பர். திருமுறையினை சங்கீதபூஷணம் திருமதி. ஹம்சானந்தி தர்மபாலன் ஓதுவார். வரவேற்புரையினை காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளையும் ஆசியுரையினை இந்து குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வரக்குருக்களும் ஆத்ம சாந்தி உரையினை அருள்மொழியரசி திருமதி.வசந்தா வைத்தியநாதனும் அறிமுகவுரையினை சைவப்புலவர் சு.செல்லத்துரையும் நிகழ்த்துவர்.

பவளவிழா மலருக்கான நயவுரையினை காரைநகர் கம்பன் கழகத்தின் அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரன் வழங்குவார். சிறப்பு விருந்தினர், பிரதம விருந்தினர் உரைகளையடுத்து முதன்மைப் பிரதிகளை தொழிலதிபர்களான த.அருட்சோதி, ச.சிவஞானம் ஆகியோர் பெற்றுக் கொள்வர். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்படும். திருவாசக இன்னி [illegible] நிகழ்த்தப்படும். (இ-5)

# தேரேறி வரந்தா அப்பா!

ஆதவன் போல் லிஸ்பனிலே எழுந்த அமுதே!
இத்தாலியின் பதுவையிலே இறந்த புனிதா!
மாதவப்பொன் மணிவிளக்கே!
கசந்து போகா மறைக்கரும்பே!
மாந்தருள்க்காய் விரித்து வைத்த வேதநூலே!
பிறரன்பு தாழ்ச்சி நிறைந்த
விசுவாசத் தேன்பிழியும் பூவே!
உலகின் ஓதரிய புகழ் முத்தே!
உன்னை நாடி ஓடி வரும்
எளியோர்க்கு இரங்கும் ஐயா!
சங்கீதம் கடல்பாடத் தென்றல் தாளம்
சொல்லி வீசச் கண்துயிலும் பாஷையூரில்
துங்கமூறு எழிற்கோயில் கொண்ட அழகா!
தூய அன்பே!அந்தோனி! ஆலை வாயில்
செங்கரும்பாய் கிடந்தவலம் காணுகின்ற
சிறியருக்காய் யேசுவிடம் பரிந்து பேசி
வெங்கொடிய துன்பமெமை விட்டு அகல
வண்ண மணித் தேரேறி வரந்தா அப்பா!

**இன்று சனிக்கிழமை நிகழும் பாஷையூர் அந்தோனியார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவை ஒட்டிய கவிதை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுத்திருத்தல ஆடித்திருவிழா குறித்து நடைபெற்ற விசேட கலந்துரையாடல்

## மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது

மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஆடித் திருவிழா தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ். தேசப்பிரிய தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெறவிருக்கும் மடுத்திருத்தலத்தின் திருவிழாவுக்கு தேவையான முன்னேற்பாடுகள் குறித்து இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக, தேவாலய சூழலின் பாதுகாப்பு, வீதி ஒழுங்கமைப்பு, போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் மற்றும் சுகாதாரம் உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன், மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஆடித் திருவிழாவுக்கான முன்னாயத்தங்கள் தொடர்பான மீளாய்வு கலந்துரையாடல் சில தினங்களில் மடு தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குரு முதலவர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மடுத்திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எமிலியானஸ் பிள்ளை, மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மதவிவகார அமைச்சின் கீழ் இயங்கும் கிறிஸ்தவ விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட ஏனைய அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மன்னார் அரச, தனியார் போக்குவரத்து துறையினரும் இதில் கலந்து கொண்டனர்.

உடல் நலக்குறைவு காரணமாக கொழும்பில் சிகிச்சை பெற்று வரும் மன்னார் ஆயர் அருட்கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகைக்காக விசேட பிராத்தனையும் இதன் போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஆட்டோவில் அழைத்து செல்லப்பட்ட குடும்பப்பெண் வீடு திரும்பவில்லை

## கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையீடு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தின் திருநகர் வடக்கு கிராமத்தில் முச்சக்கர வண்டியொன்றில் வந்தவர்களால் வீட்டிலிருந்த குடும்பப்பெண் ஒருவர் அழைத்து செல்லப்பட்டுள்ளார். அழைத்து செல்லப்பட்ட பெண் நான்கு நாட்கள் கடந்த நிலையிலும் வீடு திரும்பவில்லையென குடும்பத்தினரால் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 9ஆம் திகதி காலை கிளிநொச்சியிலுள்ள திருநகர் வடக்கு கிராமத்தில் வீடொன்றிற்கு முச்சக்கரவண்டியில் சென்ற இனந்தெரியாத குழுவினர் அவ்வீட்டிலிருந்த குடும்பப்பெண்ணை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றிற்கு வழக்கு ஒன்றிற்கு வருமாறு கூறி அழைத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் திருநகர் வடக்கு இல.126 எனும் முகவரியைச் சேர்ந்த கணேசமூர்த்தி சாந்திமலர் (வயது -48) என்ற குடும்பப்பெண்ணே இன்றுவரை வீடு திரும்பவில்லையென கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (2-15)




# அனுமதியின்றி கடலட்டை பிடித்த மீனவர்களுக்குத் தண்டம் விதிப்பு

யாழ்.மாவட்டத்துக்குரிய அனுமதிப்பத்திரம் இன்றி வடமராட்சி கட்டைக்காடு பிரதேசத்தில் சிலிண்டர் மூலமாக கடல் அட்டைகள் பிடித்த திருகோணமலையை சேர்ந்த 3 மீனவர்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எம். ஐ.வகாப்தீன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பிரதேசத்தில் யாழ்.மாவட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ள சிலிண்டர் மூலமாக கடல் அட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த திருகோணமலையை சேர்ந்த 3 மீனவர்களை அப்பகுதி மீனவர்கள் பிடித்து யாழ். கடற்றொழில் நீரியல்வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

2 ஆம் திகதி 3 மீனவர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் வழக்கு தவணையிடப்பட்டது.

நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மூவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதி குறித்த மூவருக்கும் தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தார். (2-9)

# ஐயங்கன்குளம் கிராமத்தின் அடிப்படை தேவைகள் இதுவரை பூர்த்தியாகவில்லை

## கிராம மக்கள் கவலை

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள ஐயன்கன்குளம் கிராமத்தில் அடிப்படைத் தேவைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையால் சுமார் 361 குடும்பங்களைச் சேர்ந்த 750 இற்கு மேற்பட்டோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதி முதற்கொண்டு ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை எந்தவித புனரமைப்பு பணிகளுமின்றிக் காணப்படுகின்றன.

அத்துடன், போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் இக்கிராமங்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனைவிட மருத்துவ வசதி, மேலதிக கல்வி ,வசதி என்பவற்றைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை விடுத்து வந்தபோதும் தமது கோரிக்கை எதனையும் உரிய அதிகாரிகள் செவிசாய்க்கவில்லை.

தொடர்ந்தும் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக கிராம மக்கள் தெரிவித்தனர். (2)



சட்டவிரோதமாக கடத்த முயன்ற முப்பது முதிரைக் குற்றிகளை கிளிநொச்சி பொலிஸார் கடந்த 10 ஆம் திகதி பரந்தன் சந்திக்கு அருகாமையில் வைத்து மடக்கி பிடித்த போது... (படம்:- கிளிநொச்சி-1 செய்தியாளர்)

150 மில்லியன் ரூபா செலவில்

# பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்படவுள்ளது

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் நாட்டில் இடம்பெற்ற யுத்த கால பகுதியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பாதுகாப்புக் கருதி இடம் பெயர்ந்து இம் முகாமில் தங்கியிருந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வந்த நிலையில் ஞானம் மன்றம் எனும் நிறுவனத்தின் 150 குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா செலவில் புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்ற 150 குடும்பங்களுக்கு ஞானம் மன்றத்தின் ஸ்தாபகர் சுபாஸ்கரன் அல்லிராஜாவினால் தலா 10 இலட்சம் ரூபா செலவில் 150 வீடுகளுக்கும் 150 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திருமதி. ரஞ்சினி நடராஜபிள்ளைக்கும் ஞானம் மன்றத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த 10 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நலன்புரி நிலையத்தில் உள்ளவர்களுக்கான வீட்டுத்திட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தின் கண்காணிப்பின் கீழ் வவுனியா சின்னடம்பன் கிராம சேவையாளர் பிரிவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு ஜூலைமாதம்பயனாளிகளிடம்வீடுகள் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வீட்டுத்திட்டத்துடன் இக் குடியிருப்பிற்கான வீதிகள், குடிநீர் வசதிகள், மலசல கூட வசதிகள் உட்பட பல அத்தியாவசிய தேவைகளையும் ஞானம் மன்றத்தினர் செய்து கொடுக்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# புல்வெளியில் கவிதை நூல் வெளியீடு

வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் வெளியிடும் விசுவமடு ஹரிஸ் எழுதிய முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய் எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுண்டிக்குளம் சந்தி, விசுவமடுவிலுள்ள புல்வெளியில் இடம்பெறவுள்ளது.

தொங்கும் பனைமரக்குடில்களான வித்தியாசமான ஒழுங்கமைப்புகளுடன் கூடிய இந்நிகழ்வை, பண்பலை வேந்தன் ரி.எஸ்.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நூலினை வெளியிட்டு வைப்பார்.

வரவேற்புரையினை யோ. புரட்சி, வாழ்த்துக் கவியினை பிள்ளைக் கவி ஜொய்சி மற்றும் முல்லைத்தீபன் ஆகியோர் வழங்கவுள்ளனர். ஆய்வுரை, விமர்சன உரை ஆகியவற்றை கம்பீரக்குரலோன் நாகேந்திரராசா, கவிஞர் சமரபாகு சி.உதயகுமார் ஆகியோர் வழங்குவார்கள். அத்துடன் கவியரங்கம், பட்டிமன்றம் என்பன கவிஞர்களால் நிகழ்த்தப்படவுள்ளன.

இவ்வெளியீடானது வன்னிப்பகுதியில் புதுமையான முறையில் வெளியிடப்படும் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# வவுனியாவில் சிறுவன் கடத்தப்பட்டு தந்தையிடம் கப்பம் பெறப்பட்டு விடுவிப்பு

(மல்லாவி)

வவுனியாவில் பிரபல வர்த்தகர் ஒருவரின் மகன் இனந்தெரியாத குழுவொன்றினரால் கடத்தப்பட்டு 10 இலட்சம் ரூபா பணம் கப்பமாகப் பெறப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

முன்பள்ளிக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த குறித்த சிறுவன் இனந்தெரியாத குழுவினரால் கடத்தப்பட்டு வவுனியா நகரின் பிரபல வர்த்தகரான சிறுவனின் தந்தையிடம் 30 இலட்சம் ரூபாவை கப்பமாக வழங்கினால் சிறுவனை விடுவிப்பதாகவும் இல்லையேல் சிறுவனை கொலை செய்து விடுவதாகவும் அச்சுறுத்தியுள்ளனர்.

குறித்த சிறுவனின் தந்தை தன்னிடம் மகனை மீட்பதற்கு போதிய அளவு பணம் இல்லையென கூறியதை அடுத்து கடத்திய குழுவினர் 10 இலட்சம் ரூபாவை வழங்குமாறும் அப்பணத்தை வவுனியா பூவரசன்குளம் பகுதியில் கழிவுகள் கொட்டப்படும் இடம் ஒன்றில் வைக்குமாறும் கூறியுள்ளனர்.

இதற்கு உடன்பட்ட பிரபல வர்த்தகர் அவ்விடத்தில் பணத்தை வைத்ததன் பிரகாரம் தனது மகன் விடுவிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் அவர் பதிவு செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் கருத்து தெரிவிக்கையில்,

சிறுவன் கடத்தி செல்லப்பட்டவுடன் தங்களுக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டு இருப்பின் குறித்த குழுவினரை கைது செய்து இருக்க முடியும்.

இக்கடத்தல் தொடர்பாக விசேட பொலிஸ்குழு நியமிக்கப்பட்டு புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/முருகானந்தா கல்லூரி மாணவர்கள் கவனயீர்ப்புப் போர்

(முக்கொம்பன்)

புகைத்தல் மற்றும் மதுபான ஒழிப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து, கிளிநொச்சியில் கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி மாணவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் பாடசாலை சமூகத்தினர் இணைந்துகொண்டனர்.

குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கை காலை 9 மணியளவில் புகைத்தல் மற்றும் மதுபானபாவனையை கட்டுப்படுத்தும் வகையில் மாணவர்களால் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் முன்னெடுக்கப்பட்டது.

கவனயீர்ப்பு நடவடிக்கையினை தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் பாடசாலை சுற்றிலும் உள்ளவீடுகளிற்கு சென்று புகைத்தல் மற்றும் மதுபானபாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பிலும், அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் சந்திப்புக்களை மேற்கொண்டனர். (2-281)

# போலித்துப்பாக்கிகள் சகிதம் உள்நுழைந்த கொள்ளையர்களின் முயற்சி கைகூடவில்லை

(கிளிநொச்சி-1)

**வீடொன்றினுள் கத்திகள்,போலித்துப்பாக்கிகள் சகிதம் உள்நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டதுடன் தங்கக் காப்பினையும் பறித்து தப்பிச் சென்றுள்ளனர்.**

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் கிளிநொச்சி புளியம்பொக்கனை சந்திக்கு அருகாமையில் உள்ள கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம் என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

நான்குபேர் கொண்ட குழுவின் பிரஸ்தாப நபரின் வீட்டின் முன்வாயிலின் ஊடாக கத்திகள்,பொய்த்துப்பாக்கிகள் சகிதம் உள்நுழைந்து அறையினுள் சென்று கொள்ளையிட முற்பட்டவேளை வீட்டிலிருந்தவர்கள் எழுந்து கூக்குரலிட்டனர்.

இதனையடுத்து கொள்ளையர்களின் நோக்கம் நிறைவேறாமையால் வீட்டில் இருந்தவர் களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது பெண்ணொருவரின் கையில் அணிந்திருந்த தங்கக்காப்பினை பறித்தெடுத்து தம்முடன் எடுத்துக்கொண்டு தப்பிச்சென்றனர்.

வீட்டில் இருந்தவர்கள் கைகலப்பில் ஈடுபட்டதையடுத்து சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

வீட்டின் உரிமையாளரினால் தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து விடியற்காலையில் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆலயங்கள், வீடுகள் ஆகியவற்றில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-277)




## பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி

(கிளிநொச்சி-1)

றோட்டறி மாவட்டங்கள் 3230 மற்றும் 3202 ஆகியவற்றுடன் றோட்டறி மாவட்டம் 3220 யாழ்ப்பாணம் றோட்டறி கழகம் இணைந்து நடத்தும் போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு மு/முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினரர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களாக ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன் எஸ். வினோநோதராதலிங்கம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர், நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-277)

## வலுவூட்டலுக்கான பத்து நாட்கள் கொண்ட வதிவிடப் பயிற்சி செயலமர்வு

(மல்லாவி)

மத்திய கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய கல்வி நிறுவனத்தினால் எதிர்காலத்தில் இரண்டாம் நிலை பாடசாலைகளின் பிரதி அதிபர்களை வலுவூட்டுவதற்கான 10 நாடகள் கொண்ட வதிவிடப்பயிற்சி செயலமர்வு ஒன்று இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளதாக தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வி தலைமைத்துவ பணிப்பாளர் என்.ஏ.யு.சி. முனசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், தெரிவு செய்யப்பட்டுள்ள 2ஆம் நிலை பாடசாலைகளின் பிரதி அதிபர்களுக்கான 10நாட்கள் கொண்ட வதிவிட செயலமர்வு தேசிய கல்வி நிறுவனத்தின் மீபேயில் அமைந்துள்ள கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

செயலமர்வில் பங்கு பெறுவோருக்கான உணவு, வதிவிட வசதி இலவசமாக வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 077 402 8469 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறமுடியுமென அவர் தெரிவித்தார்.

செயலமர்விற்கு வருகை தரும் பிரதி அதிபர்கள் தமது பாடசாலை சுய விபரக்கோவை மற்றும் பாடசாலைத்திட்டம் என்பவற்றை தம்முடன் எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# திருட்டு மணல் கொண்டு செல்லப்பட்ட டிப்பர்கள் பொலிஸாரால் பறிமுதல்

(மன்னார்)

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் சட்ட விரோதமான முறையில் மணல் கொண்டு செல்லப்பட்ட 5 டிப்பர்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு அதன் சாரதிகள் ஐவரையும் கைது செய்துள்ளதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அலகக்கோனின் பணிப்புரைக்கு அமைவாக முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஐ. அபேயரத்தின தலைமையிலான பொலிஸ் குழுவினர் மணல் கொண்டு செல்லப்பட்ட டிப்பர்களை கைப்பற்றியுள்ளனர்.

அரிப்பு மற்றும் சிலாபத்துறை பகுதிகளுக்கு குறித்த மணல் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவற்றில் ஒரு டிப்பர் நானாட்டான் பகுதியில் வைத்து கைப்பற்றியுள்ளதோடு ஏனைய 4 டிப்பர்களும் முருங்கன் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.



மணலுடன் 5 டிப்பர்களும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதோடு சாரதிகள் ஐவரும் கைது செய்யப்பட்டு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஐவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டவுடன் அவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் முருங்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-4)

## நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல்

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கிணங்க பக்கதர்களின் நலன் கருதி பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. (2)

# சுழற்சி முறையிலான வாழ்வாதார ஊக்குவிப்பிற்கு ஐந்து இலட்சம் ரூபா நிதி வழங்கி வைக்கப்பட்டது



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐந்து பனை,தென்னை வள சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஐந்து இலட்சம் ரூபாயை வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் வழங்கியிருந்தார்

இது தொடர்பில் மேலும் அறியவருகையில்,

2015ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஐந்து இலட்சம் ரூபாயினை சுழற்சி முறையிலான வாழ்வாதார ஊக்குவிப்புக்காக வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஒதுக்கியிருந்தார்.

பனை ,தென்னை வள சங்கங்கள் ஐந்து தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு குறித்த நிதியினை வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் புதுக்குடியிருப்பு பனை, தென்னைவள கூட்டுறவுச்சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்றது

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

துணுக்காய்-பாண்டியன்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லை வடக்கு மற்றும் முல்லை தெற்கு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களுக்கு தலா ஒரு இலட்ச நிதி வழங்கப்பட்டதோடு அத்தினமே அச்சங்கங்களைச்சார்ந்த 45 பயனாளிகளுக்கு சுழற்சி முறையிலான கடனும் வழங்கப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து உரையாற்றிய வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் , இவ்வாறான ஊக்குவிப்புகளை வழங்கும் ஒவ்வொருமுறையும் பயன்பெறும் ஒவ்வொருவரும் அதில் பலனைப்பெற்று தங்களின் குடும்ப வாழ்வாதாரத்தை பலப்படுத்தவேண்டும் என்றெண்ணியே அவை முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இம்முறையும் இவ்வுதவியைப்பெற்ற 45 பயனாளிகளின் குடும்ப வாழ்வாதாரம் இன்னும் பலமடையவேண்டும் சுழற்சி முறையின் அடிப்படையில் இந்த ஐந்து சங்கங்களை சேர்ந்த ஏனைய பயனாளிகளும் இதன் ஊடாக உள்வாங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரமும் சிறக்கவேண்டும் என்றகனவோடே இவ்வாறான ஊக்குவிப்புகள் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

இம்முறை உள்வாங்கப்பட்ட ஐந்து சங்கங்களைப்போல இனிவரும் காலத்தில் ஏனைய சங்கங்களும் இவ்வாறான சுழற் சி முறை பயன்பாட்டு திட்டத்துள் உள்வாங்கப்படுவர் என்று கூறியதோடு ஒவ்வொரு சங்கத்திலும் உள்ள ஒவ்வொரு பயனாளியின் வாழ்வாதார கட்டமைப்பும் பலம்பெறட்டும் என்றும் கூறினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1165

பள்ளியின் கடைசி மணி அடிச்சது. டீச்சர் வேற க்ளாஸ்ல இல்லை... சொல்லணுமா? ஆறாம் வகுப்பு "சி" செக்ஷன் பசங்க அத்தனைப் பேரும் அடுத்த நிமிடமே சிட்டாகப் பறந்துட்டாங்க. மகேஷ் மட்டும் மெதுவா எழுந்து கணக்குப் புததகத்தைப் பைக்குள்ளே வைக்க ஆரம்பிச்சான். இத்தனைக்கும் ஆசிரியர் இருந்தாலே முதல் ஆளா வெளியே போறவன் மகேஷ்.

அதுக்காக மகேஷை கடைசி பெஞ்சு கேஸ்னு நினைச்சுடாதீங்க. படிப்புல அவன்தான் எப்பவும் முதல் ஆள். மணி வீட்டுக்கு வந்த நாளில் இருந்துதான் மாறிட்டான்.

இங்கே இருந்து 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கிற பொன்னுப்பட்டி கிராமத்தில்தான் அவன் வீடு. அவனோட அப்பாவும் அம்மாவும் கட்டடக் கூலி வேலை செய்றவங்க. அவங்க பரம்பரையிலே ஆறாம் வகுப்புக்குப் போய் இருக்கிற முதல் ஆளு மகேஷ்தான். அதனால, அவன் அப்பாவுக்கு ரொம்ப சந்தோஷம். மகேஷ் என்ன கேட்டாலும் கஷ்டப்பட்டு வாங்கிக் கொடுத்துருவார்.



# விருந்தாளி வர்றாங்க!



அப்படித்தான் ஒருமுறை மகேஷ் தன் அப்பாவோடு சந்தைக்குப் போனப்ப, ஒரு ஆட்டுக்குட்டியைப் பார்த்தான். 'அப்பா ஆட்டுக் குட்டி ரொம்ப நல்லா இருக்கு. நாம வாங்கலாமா?'னு கேட்டான்.

'அதை வாங்கி என்னடா செய்றது? நானும அம்மாவும் விடிஞ்சதும் டவுன் வேலைக்குக் கிளம்பினா ராத்திரிதான் வருவோம். நீயும் பள்ளிக்கூடம் போயிருவே. அதை யாரு பார்த்துப்பா?'னு கேட்டார் அப்பா.

'நான் காலையிலே சீக்கிரமா எழுந்து கவனிச்சுக்கிறேன். சாயந்திரமும் ஸ்கூல்விட்டு வந்ததும் பார்த்துக்கிறேன். மத்த நேரத்துல வீட்டு வாசலுல கட்டிப் போட்டுட்டு, பக்கத்து வீட்டுப் பாட்டியைப் பார்த்துக்கச் சொன்னாப்போச்சு' என்றான் மகேஷ்.

'ஆட்டையே கவனிச்சுக்கிட்டா எப்போ படிப்பே. நீ நல்லாப் படிச்சு பெரிய வேலைக்குப் போகணும்' [illegible] சொன்னார் அப்பா.

'அது எல்லாம் நான் நல்லாவே படிப்பேன். ஆட்டுக்குட்டியை வாங்கலாம்ப்பா'னு கெஞ்சினான் மகேஷ்.

அப்பாவும் மகனோட ஆசையை நிறைவேத்த ஆட்டுக்குட்டியை வாங்கிக் கொடுத்தார். மகேஷ் ரொம்ப குஷி ஆயிட்டான். அதுக்கு மணினு பேர் வெச்சான். தினமும் காலையில் எழுந்ததும் அதைக் குளிப்பாட்டுவான். புல்லைப் பிடுங்கி வந்து போடுவான். சாயந்திரம் பள்ளிக்கூடம் முடிஞ்சு வந்ததும் ஒரு கையில் புததகத்தை எடுத்துக்கிட்டு, இன்னொரு கையில் ஆட்டுக்குட்டியைப் புடிச்சுக்கிடடு காட்டுப் பக்கம் போயிருவான். கொஞ்சம் நேரம் அதோடு ஓடிப்புடிச்சு விளையாடுவான். அப்புறம் குட்டியை மேய விட்டுட்டு படிச்சுக்கிட்டிருப்பான்.

கொஞ்ச நாளில் அந்த ஆட்டுக்குட்டியும் மகேஷும் நண்பர்கள் ஆயிட்டாங்க. மகேஷ் என்ன சொன்னாலும் அதை ஆட்டுக்குட்டி புரிஞ்சுக்கிட்டு செய்யும். இப்போ அதை ஆட்டுக்குட்டின்னு சொல்றதுகூட தப்பு. ஏன்னா அது வளர்ந்துருச்சு. கொம்புகூட வந்துருச்சு.

நேத்து மகேஷ் பள்ளிக்கூடம்விட்டு வீட்டுக்கு வந்தப்ப, அப்பாவும் அம்மாவும் இருந்தாங்க. 'என்னப்பா சீக்கிரம் வந்துட்டீங்க?'னு கேட்டான் மகேஷ்.

'நாளைக்கு நம்ம வீட்டுக்கு விருந்தாளிங்க வரப்போறாங்க. அவங்க நம்மை மாதிரி ரேஷன் அரிசி சாப்பிட மாட்டாங்க. அதான் அரை நாளுல வேலையை முடிச்சுக்கிட்டு மார்க்கெட்டுக்குப் போய் அரிசி, பருப்பு, காய்கறி வாங்கிட்டு வந்தோம்' - இதைச் சொல்றப்ப அப்பா முகத்துல அவ்வளவு சந்தோஷம்!

'யாருப்பா விருந்தாளிங்க?'னு கேட்டான் மகேஷ்.

(தொடரும்)

06.2015
13

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1881 - ஜெனட் என்ற அமெரிக்கக் கப்பல் ஆர்க்டிக் பெருங்கடலில் மூழ்கியது.
- 1886 - பிரித்தானியக் கொலம்பியாவின் வான்கூவர் நகரத்தின் பெரும் பகுதி தீயினால் சேதமடைந்தது.
- 1886 - பாவாரியாப் பேரரசன் இரண்டாம் லுட்விக் மியூனிக்கின் ஸ்டார்ன்பேர்க் ஆற்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டான்.
- 1925 - சார்ல்ஸ் ஜென்கின்ஸ் படங்களையும் ஒலியையும் ஒரே நேரத்தில் அனுப்பும் முறையை முதன்முறையாக வெற்றிகரமாகப் பரிசோதித்தார். 10-நிமிட அசையும் படத்தை 5 மைல் கள் தூரத்திற்கு அனுப்பினார்.
- 1934 - ஹிட்லரும் முசோலினியும் வெனிசில் சந்தித்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி பறக்கும் குண்டுகளை இங்கிலாந்து மீது வீசியது. மொத்தம் 11 குண்டுகளில் 4 குண்டுகள் இலக்கு களைத் தாக்கின.
- 1948 - ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948 - மலாயா தொழிற்சங்கங்களின் சம்மேளனம் மலேசியாவில் தடை செய்யப்பட்டது.
- 1952 - சோவியத்தின் மிக்-15 போர் விமானம் சுவீடனின் டிசி-3 ரக விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது.
- 1955 - சோவியத் ஒன்றியத்தில் முதலாவது வைரச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1978 -ஷ்ரேலின் பாதுகாப்புப் படையினர் லெப னானை விட்டு விலகினர்.
- 1981 - லண்டனில் இடம்பெற்ற அணிவகுப்பு நிகழ்வு ஒன்றில் சிறுவன் ஒருவன் இரண்டாம் எலிசபெத் மகாராணியை நோக்கி வெற்றுத் துப்பாக்கிக் குண்டுகளைத் தீர்த்தான்.
- 1983 - பயனியர் 10 சூரியக் குடும்பத்தைத் தாண்டிய முதலாவது விண்கப்பல் ஆனது.
- 2006 - நியூ ஹறைசன்ஸ் தனது பயண வழியில் 101,867 கி.மீ தூரத்தில் 132524 APL என்ற சிறுகோளை சந்தித்து அதன் படத்தைப் பூமிக்கு அனுப்பியது.

### பிறப்புகள்

- 1831 - ஜேம்ஸ் மாக்ஸ்வெல், ஸ்கொட்லாந்து இயற்பியலாளர் (இ. 1879)
- 1933 - யாழ்வாணன், ஈழத்து எழுத்தாளர் (இ. 1996)
- 1944- பான் கி மூன், ஐக்கிய நாடுகள் அவையின் எட்டாவது பொதுச் செயலாளர்
- 1966 - கிரிகோரி பெரல்மான், ரஷ்யக் கணிதவியலா ளர்
- 1987 - ஜி. வி. பிரகாஷ் குமார், தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்

### இறப்புகள்

- 1972 - [illegible] நோபல் பரிசு பெற்றவர் (பி. 1899)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...'கதையின் கதை

கோவிலுக்கு வந்த நல்ல செய்தி

இதை என்னிடம் விவரித்த ரஜினி, 'நீங்களே டைரக்ட் பண்ணனும்னு ஆசைப்பட்டதுக்கு இதுவும் முக்கிய காரணம்' என்றார்.

'தமிழுக்கு ஏற்ப சில மாற்றங்கள் செய்து கொள்வோம்' என்றும் கூறினார்.

அதன் பிறகு மளமளவென பட வேலைகள் தொடங்கின. நான் சில காட்சிகளை மாற்றம் செய்தேன்.

கன்னடத்தில் வடிவேலு கேரக்டர் கிடையாது. தமிழுக்காக அதை சேர்த்தேன். 'தேவுடா தேவுடா' பாட்டு கிடையாது. அதை சேர்த்தேன். இதைவிடவும் முக்கியம், கன்னடத்தில் வேட்டையன் கேரக்டரே கிடையாது. தமிழுக்காக உருவானவன்தான் வேட்டையன்.'

இவ்வாறு கூறிய வாசு, மேலும் பல சுவையான தகவல்களை தெரிவித்தார்.


'சந்திரமுகி'யில் சிம்ரன் நடிப்பதாக இருந்த சந்திரமுகி வேடத்தில், ஜோதிகா நடித்தார். இதற்கான காரணத்தை டைரக்டர் பி.வாசு வெளியிட்டார்.

'சந்திரமுகி' அனுபவங்கள் பற்றி பி.வாசு தொடர்ந்து கூறியதாவது:-

'சந்திரமுகி'யில் ரஜினி சார் நடிக்கிறார் என்றதும், அடுத்து 2 விடயங்கள் முக்கியமாகப்பட்டது.

ஒன்று: கதாநாயகி. அடுத்து: இசை.

சவுந்தர்யா கன்னடத்தில் சவுந்தர்யா நடித்திருந்தார். 100 சதவீதம் சந்திரமுகியாகவே மாறிப் போனார். சவுந்தர்யா மட்டும் உயிரோடு இருந்திருந்தால் 'சந்திரமுகி' கேரக்டருக்கு வேறு ஒரு நடிகையை யோசித்திருக்கவே மாட்டோம். துரதிர்ஷ்டவசமாக, அவர் விமான விபத்தில் இறந்துவிட்டார்.



154

சந்திரமுகியாக யாரைப் போடலாம் என்று யோசித்தேன். இப்போது என் மனதுக்குள் சந்திரமுகியாக வந்து போனவர் நடிகை சிம்ரன்.

சிம்ரன் சிறந்த நடனக்கலைஞர். அவர் நாயகி என்று முடிவானதும் இசைக்கு என் மனதில் வந்து போனவர் வித்யாசாகர். வித்தியாசமான இசையை கதைக்கு தேவையான விதத்தில் தருபவர் என்பதால் என் விருப்பத்தில் அவர் இருந்தார். தெலுங்கில் வரும் 'ராரா' பாட்டு ரொம்பப் பிரபலம். அதுபற்றி வித்யாசாகரிடம் பேசிய போது, 'அதே டியூன் வேண்டாம். நான் ஒரு டியூன் போடுகிறேன். பிடித்திருந்தால் வைத்துக்கொள்ளுங்கள்' என்றார்.

அப்படி அவர் புதிதாக டியூன் போட்டு ஹிட்டானதுதான் சந்திரமுகியில் வரும் 'ராரா' பாட்டு.


புதிய சந்திரமுகி ஜோதிகா

'சந்திரமுகி' கேரக்டரில் நடிக்க சிம்ரன் ஆர்வத்துடன் ஒப்புக்கொண்டார். திருமணமாகி அவர் கருவுற்றிருந்த நேரம் அது.

படத்தில் 'ராரா' பாட்டில் சந்திரமுகி குதித்துக் குதித்து சுழன்றாடியபடி நடனமாட வேண்டும்.

அப்படி சிம்ரன் ஆடும்போது நிச்சயம் கருவில் வளரும் குழந்தையின் உயிருக்கு ஆபத்தாக முடியும் வாய்ப்பு அதிகம்.

இதை சிம்ரனிடம் சொல்லி 'சந்திர முகி வாய்ப்பா? குழந்தையா?' என்ற முடிவை அவரிடமே விட்டோம். சிம்ரனின் தாய்மை யுணர்வு வென்றது. அதனால் அவர் விலகிக்கொள்ள 'சந்திரமுகி'யாக என் மனதில் அடுத்த கணமே வந்து போனவர்தான் ஜோதிகா. *(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

வைரமுத்து—163

...எம் மகன் பட்டினி கெடந்தா எனக்கு ஒறக்கம் வராதுன்னு ஒங்க நல்லாத்தா குடுத்துவிட்டுச்சு. சாப்பிட்டுச் சட்டியக்குடு; நான் இங்கயே இருக்கேன்.

தொறந்து பாத்தா சட்டி கொள்ளாம அமுக்கி அடச்ச நெல்லுச் சோறு; அது மேல ரெண்டு அவிச்ச முட்ட. அவன் ஆவலாதியாக் கை விட்டு அள்ளப்போனா கால் சட்டிச் சோத்துக்குக் கீழ கறியா அடைஞ்சு வச்சிருக்கா திம்சு.

அவன் அள்ளித் திங்கத் திங்க-

சோறு மாதிரி நெஞ்சுக்குள்ள போறா திம்சு; அவன் விட்ட ஏப்பம் மாதிரி அவனுக்குள்ளயிருந்து வெளியே ர்றா கருவாச்சி.

லட்சுமிபுரத்துல பத்திர காளியம்மன் கோயில் திருவிழா. இந்த வருசம் கரகாட்டமாம். அம்புலிப்புத்தூர் கனகு ஆடவாராளாம். பத்துப் பதனஞ்சு பஞ்சாயத்து எல்லைக்குள்ள அம்புலிப்புத்தூர் கனகு பேரச் சொன்னா வளஞ்சு வாழத் தண்டும் பத்திக்கிரும்; அவ கரகம் சுத்துனான்னா பல பேருக்கு ஒலகம் சுத்தும்.

அம்புலிப் புத்தூர் அண்டான்னு வயசுப்பயக அவளுக்குச் செல்லமா வச்ச பேரு செல்லுபடியாகிப் போச்சு. தலையில தூக்கிவச்சதையும் சேத்து மொத்தம் அவளுக்கு மூணு கரகம்ன்னு சீட்டுக் கிழுஞ்ச சில பெருசுக சிரிச்சுச் சிருச்சுப் பேசிக்கிருவாக.

அம்புலிப்புத்தூர்க்காரி கரகம் பாக்கணும்ன்னு ஆச வந்திருச்சு அழகுசிங்கத்துக்கு.

சும்மா வெறுங் கைய வீசிப் போய் வந்திர முடியுமா? வழிச் செலவுக்கும் வாங்கித் திங்கவும் காசு வேணாமா? அடக்குப் பானைய உருட்டிப் பாத்தான்; அஞ்சறைப் பெட்டியப் புரட்டிப் பாத்தான்; கொண்ணவாயன உருட்டிப் பாத்தான்; ஒண்ணும் கதைக்காகல.

மலட்டுப் பொம்பள அரச மரத்தச் சுத்திச் சுத்தி வார மாதிரி ஆத்தாளச் சுத்திச்சுத்தி வாரான்.

காய்ச்சல்லன்னு நெத்தியில பத்துப் போட்டுக் கட்டில்ல படுத்துக்கெடக்கா கருவாச்சி.



எப்படிக் கேக்குறது?

கையேந்தி நின்னாக் கேவலம்; களவாண்டுட்டுப் போனா வீரம்ன்னு அவன் புத்தி சொல்லுது. அவ முந்தானையில எப்பவும் காசு முடிஞ்சு வச்சிருப்பா. முந்தான எங்க இருக்குன்னு மோப்பம் புடிச்சுப்புடிச்சுப் பாக்குறான்; கண்ணுக்குச் சிக்கல.

புத்துக்குள்ள இருக்கிற புதையலப் பாம்பு பாதுகாத்துப் படுத்துக்கெடக்கிற மாதிரி முந்தானையச் சுருட்டித் தலயணைக்குக் கீழவச்சு அதுக்கு மேல தலய வச்சுப் படுத்திருக்கா கருவாச்சி. கண்ணுக்குச் சிக்காதது கைக்கு எங்க சிக்கப்போகுது? இப்பப் பெரண்டு படுப்பா அப்பறம் பெரண்டு படுப்பான்னு பயமருகி மருகி நிக்கிறான். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்- 49

## பட்டினியை ஒழிப்பதில் சத்துணவு பாதுகாப்பினதும் காலநிலை மாற்றத்தினதும் பங்கு



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

உலக உணவு தாபனத்தினது தொடர் கருத்தரங்கின் 39 ஆவது அமர்வு 6 ஆம் திகதி தொடங்கி இன்றுடன் முடிவடைகின்றது. இக்கருத்தரங்கில் உலக உணவு தாபனத்தின் முக்கிய செயலூாபக்கமாக பட்டினியை ஒழிப்பதில் சத்துணவு பாதுகாப்பிற்கும் காலநிலை மாற்றத்தினது பங்கிற்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்கும் மேலாக பாப்பரசர் பிரான்சிஸ் இக்கருத்தரங்கில் பங்குபற்றிக் கொண்டிருக்கும் மக்களைப் பார்த்து பட்டினியை ஒழிப்பதில் எங்களுக்குள்ள கடமையிலிருந்து நாம் தவறிவிடக் கூடாது என கூறியிருக்கின்றார்.

கருத்தரங்கு வெறுமனே முடிவுகளோடு முடியாது அதற்கான விளைச்சலை நாம் பெறறாக வேண்டும் என்பதில் எமது கருத்தும் ஒன்றிப்போயிருக்கின்றது.

பட்டினியாக இருப்பது ஒருபக்கம் மாறாக உணவு உண்டும் நோய்வாய்ப்பட்டிருப்பது இன்னோருபக்கம். நாம் சுகதேகியாக இருக்க வேண்டும். சுகநலத்தில் முக்கிய பங்கெடுப்பது நாம் உண்ணும் உணவும், அருந்தும் நீரும், சுவாசிக்கும் காற்றும், மனதில் நினைக்கும் நல்லெண்ணங்களும் தான். உண்ணும் உணவு நிறையுணவாக இருக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. நிறையுணவு என்னும் போது அனைத்து வகையான சத்துக்களும் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாவுச்சத்து, புரதச்சத்து, நார்ச்சத்து இன்னும் விற்றமின்கள், கனியுப்புக்கள் என பல வகையானவை உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

எமது உடலின் தேவைக்கேற்ப நிறைக்கேற்ப இவற்றின் அளவு நிர்ணயிக்கப்பட்டிக்கும்.


சுகநலமான வாழ்க்கைக்கு அவரவர் உடலுக்கேற்ப நிறையுணவை இன்னும் எண்ணிக்கூட பார்க்க முடியாதவர்களாகி விட்டோம். அனைத்தும் எமது பழக்க வழக்கத்தினால் என்பதனை இவ்விடத்திலேனும் நாம் எண்ணிப்பார்க்க தவறக்கூடாது.


நிறையுணவைப் பற்றியும் சத்துணவினைப்பற்றியும் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போது நாம் உட்கொள்ளும் அன்றாட உணவு இவ்விரண்டு சொற்களுக்கும் எவ்வளவு பொருத்தப்பாடாயிருக்கும் எனவும் நாம் கவனிக்க வேண்டும்.


இதற்கு முதல் நஞ்சற்ற உணவு என்பதும் முக்கியமானது. சமகால முக்கியமான பிரச்சினைகளுள் நஞ்சற்ற உணவு என்பது அனைவரும் ஒத்துக்கொள்ளக் கூடிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதற்கு நாம் பயன்படுத்திய இன்னும் பயன்படுத்துகின்ற பீடைநாசினிகள் மற்றும் அசேதன இரசாயனங்கள் காரணமாகும். வாங்கும் போது கூடவே அதில் விசிறியிருக்கின்ற நஞ்சிற்கும் சேர்த்து பணம் கொடுத்தே வாங்குகின்றோம். பணம் கொடுத்து நஞ்சினை வாங்கி அதனாலேயே உயிரிழக்கும் நிலையேற்படுகின்றது.

இதற்கு தீர்வு கிடைக்குமா என பலரும் வினவுவதுண்டு. ஒவ்வொருவரும் தங்களது வாழ்க்கை பற்றி நிறைந்த கவனத்துடனே இருக்கின்றார்கள் என்னும் போது மகிழ்ச்சியாக இருந்தாலும் மற்றையவரைப்பற்றி எந்த விதமான கவனத்தையுமே கொண்டிருக்கவில்லை எனும் போது மனதில் ஏதோ நெருடுவதைப்போல உணர்கின்றோம்.

நாமே உணவுற்பத்தி செய்து உண்பது என்பது இங்கே சாலப்பொருந்துவதாக அமைந்தாலும் அது அனைவருக்கும் சாத்தியமா எனவும் கவனித்துக்கொள்ள









## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XXXVI

சத்துணவாக உள்ளெடுக்க வேண்டும். பொதுவாகவே நாம் கிடைக்கின்ற உணவை விரைந்து திணிக்கும் வாழ்க்கைக்கு எம்மை பழக்கிக்கொண்டிருக்கின்றோம். திட்டமிட்ட உணவுப்பழக்கத்திலிருந்தும் விடுபட்டு விரைந்த உணவுக்குள் நம்மை நாமே திணித்திருக்கின்றோம். இதனால் எமக்குத்தேவையான அனைத்தையும் நாம் உணவினுள் உள்ளெடுக்க முடியாதிருக்கின் றது.

நாளொன்றுக்கு ஒரு பழத்தை உண்பதற்கே முடியாதிருக்கும் போது எப்படி மலச்சிக்கலுக்கு வழிதேடப்போகின்றோம். அதுவே வழக்கமாக வைத்தியரிடம் விரைந்து போய் மருந்தினை விழுங்கி உடனடி தீர்வும் காண விழைகின்றோம். அனைத்தையும் விரைந்து பெறும் கலாசாரத்தினுள் நாம் வர எத்தனிப்பதனால் என்னவோ இப்பூமியையும் விட்டு விரைந்து செல்வதற்கு எமக்குஎன நோய்களும் வந்துவிடுகின்றன.

மூதாதையர் வாழ்ந்த வயதை நாம் தேவையற்ற முறையில் பரிந்துரைக்கப்பட்ட அளவினை விட அதிகமாக இவற்றை பயன்படுத்தியதால் பயன்படுத்துவதால் இப்பிரச்சனை உருவெடுத்துள்ளது. ஆனால் இதற்கு விடைகாண வேண் டிய நிர்ப்பந்தத்தில் நாம் இப்போது உள் ளோம்.

தற்போதுள்ள சூழ்நிலையில் எமக்கருகில் உள்ள சந்தையில் விற்கப்படுகின்ற மரக்கறிவகைகளை உற்று நோக்கினால் அவை பொதுவாகவே பீடைநாசினி விசிறப்பட்ட பொருட்களாகவே இருக்கின்றன. அதிலும் அறுவடைக்கு முந்திய தினம் இவை விசிறப்பட்ட நிலையில் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்காக தயார்படுத்தப்பட்டிருக்கும்.

உலக உணவு நிறுவனத்தின் வரையறையின்படி அசேதன இரசாயனம் விசிறி 14 நாட்களின் பின்னரேயே அவற்றை சந்தைப்படுத்த வேண்டும்.

மாறாக இந்த விதியை எவருமே கடைப்பிடிப்பதில்லை இன்னும் கண்டு கொள்வதில்லை.

நாம் பணம்கொடுத்து மரக்கறிகளை வேண்டும்.

இருக்கின்ற வசதியை வைத்துக் கொண்டு சிறியளவில் திட்டமிட்டுக்கொள்ளலாம். சிறிய வீட்டுத்தோட்டமொன்றை உருவாக்க முயற்சிசெய்யலாம். நாம் வாழும் இடத்தில் சிறிய வீட்டுத்தோட்டம் ஒன்றினை திட்டமிட்டு நாம் உருவாக்க முடியும் என்பார்கள். அதற்கு செவிசாய்க்க முடிந்தால் அதுவே எமது திட்டமிடலுக்கு கிடைத்த முதல் வெற்றியாகும். அனைவரும் நினைப்பதைப்போல வீட்டுத்தோட்டத்திற்கு என ஒரு வடிவமில்லை. எப்படியும் அதனை உருவாக்கலாம். வீட்டுத்தோட்டத்தில் என்ன என்ன வைத்திருக்கப்போகின்றோம், எப்படி வைத்திருக்கப் போகின்றோம் என்பதுதான் இங்கே ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டியனவாகும்.

வீட்டுத்தோட்டத்தில் பலவகையான பயிர்களை வளர்க்கலாம். நாளொன்றுக்கு உணவாக கிடைக்கக்கூடிய பழ வகைகளை வளர்க்கலாம்.

குறிப்பாக பப்பாசி, வாழை, என்பன திட்டமிடப்பட்டு வளர்க் கப்பட்டால் இப் பழங்களை நாம் கிழமைக்கேனும் உண்ண வாய்ப்புண்டாகும். இவற்றுடன் ஜம்பு, கொய்யா, அன்னமுண்ணா, பலா, மாதுளை, கொடிமுந்திரி என பல வகை பழங்களை உற்பத்தி செய்ய வழிகளுண்டு. இடவசதியைப் பொறுத்து இவற்றை நடவுசெய்து தேவைப்படுகின்ற பழங்களை பெற்றுக்கொள்ளலாம். இவற்றுடன் சேர்த்து இலைக்கறி வகைகளையும் கவனத்திற்கொள்ளலாம்.

ஒரு கிழமைக்கென ஏழு இலைக் கறிவகைகளை நாம் நடவுசெய்து பயன் பெறலாம். குறிப்பாக சிறுகீரை, வல்லாரை, பொன்னாங்காணி, பொதினா, பசளி ஆகியனவற்றை கொள்கலன்களிலும் அகத்தியிலை, முருங்கையிலை, தவசிமுருங்கை, ஆகியனவற்றை உயிர் வேலிகளிலும் நடவுசெய்து தேவையானவற்றை ஒருகிழமைக்கென பெற்றுக் கொள்ளலாம். இலைக்கறிவகைகளில் பெறப்படும் சத்துக்கள் மலிவானதும் சிறந்ததுமாக இருப்பதனால் ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத்தோட்டமமைத்து அதில் இவ்விலைக்கறிவகைகளை உற்பத்தி செய்து பயனடையலாம். வீட்டுத் தோட்டத்திற்கென பலவகை யான தாவரங்களை உற்பத்தி செய்யமுடியும். ஈவினைப்பகுதியிலுள்ள அரைப்பரப்பில் அமைக்கப்பட்ட வீட்டுத்தோட்டத்தில் 67 வகையான தாவரங்கள் வளர்க்கப்பட்டதை உதாரணமாக இங்கே குறிப்பிடலாம். பல்வகைமையை உங்கள் வீட்டுத்தோட்டத்திலேயே உருவாக்கு வதற்கு இதுவொரு சிறந்த உதாரணமாகும்.

வீட்டிலுள்ள வயதானவர்களுக்கு மலச்சிக்கல் பொதுவான பிரச்சினையாகும். அவர்களுக்கு மரக்கறிவகைகள் எப்போதும் அவர்களது உணவில் இருக்கவேண்டும். அதனுடன் பழ வகைகளும் மிகவும் அவசியமாகும். இவற்றை நஞ்சற்றதாக நாம் கொடுக்க முயற்சிக்க வேண்டும். வீடுகளில் அசேதன இரசாயனங்கள் பயன்படுத்தாமல் உற்பத்தி செய் யும் பழவகைகளை நாம் வாங்கி பயன்படுத்தலாம். இதற்காக உற்பத்தி செய்பவர்களை இனங்கண்டு அவர்களிடம நேரடியாகவே வாங்கி பயன்படுத்தலாம்.

முயன்றால் எது நடக்காது. நாமே சோர்வாக இருக்கக்கூடாது. எப்போதும் சக்தியுள்ளவர்களாக ஆளுமை யுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதற்கு சத்துணவும் நிறையுணவும் அனைவருக்கும் அவசியமாகும். வாருங்கள் எம்மால் முடியாதது எதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்தடை வருட இறுதிக்குள் நீங்கும்

## அமைச்சர் அமரவீர நம்பிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கை மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை இவ்வருட இறுதிக்குள் நீக்குவதற்குரிய சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



ஆழ் கடல் மீன் பிடித்தல் செயற்பாடு தொடர்பான செய்தியாளர் மாநாடு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இச் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கை மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையை நீக்குவதற்கு ஜனாதிபதியும். பிரதமரும், வெளிவிவகார அமைச்சும் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. அவர்களது பணிகளுக்குத் தாம் முழுமையான ஒத்துழைப்புக்களையும் பங்களிப்புக்களையும் நல்கி வருகின்றோம்.

இந்த வகையில் ஆழ்கடலில் மீன் பிடித்தலில் ஈடுபடும் படகுகளுக்கு படகு கண்காணிப்பு கட்டமைப்புக்களைப் பொருத்தும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் செப்டெம்பருக்குள் 1500 படகுகளுக்கு இக்கட்டமைப்பு பொருத்தப்படும். இக்கட்டமைப்பு பொருத்தப்படுவதன் மூலம் ஐரோப்பிய சங்கத்தின் தடைக்கான காரணத்தின் பெரும்பகுதி நீங்கிவிடும்.

செய்மதி தொழில்நுட்பத்தின் மூலம் இக்கட்டமைப்பு இயங்குகின்றது. அதனால் இக்கட்டமைப்பைக் கொணட படகுகள் இருக்கும் இடங்களை துல்லியமாக அறிந்து கொள்ள முடியும். அதனால் கடல் எல்லைகளை மீறுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்குரிய ஒழுங்கு விதிகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இத்தடையை இவ்வருட இறுதிக்குள் நீக்கிடவே நாம் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

இதேவேளை மீனவர்கள் வீடுகளை அமைத்துக் கொள்ளவென இலங்கை வங்கி ஊடாக குறைந்த வட்டி வீதத்தில்கடன்திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

இத் திட்டத்திற்கென இரண்டு பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தோடு மீன்பிடி, உபகரணங்களை மானிய அடிப்படையில் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.கடற்றொழில் திணைக்களத்தை மறுசீரமைக்கவும் திட்டமிட்டுள்ளோம். காரைநகர், சிலாவத்துறை, கந்தரை மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். இச்செய்தியாளர் மாநாட்டில் அமைச்சின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 80 | 90 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 120 | 90 | 120 | 80 | 100 |
| தக்காளி | 60 | 80 | 80 | 100 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 120 | 40 | 90 | 120 | 80 | 120 |
| கரட் | 220 | 200 | 180 | 300 | 200 | 200 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30 | 30 |
| புடோல் | 100 | 120 | 80 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 110 | 160 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 90 | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 160 | 120 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 150 | 150 | 110 | 120 | 80 | 180 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 90 | 120 | 80 | 100 |
| பயற்றங்காய் | 160 | 140 | 110 | 120 | 120 | 180 |
| லீக்ஸ் | 250 | 160 | 280 | 200 | 160 | 120 |
| பீற்றூட் | 120 | 120 | 140 | 160 | — | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 170 | 200 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120-200 | 250 | 300 | 300 | 200 | 300 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 240 | 130 | 180 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 60 | 80 | — | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 | 30 | 20-40 | 15 |
| தேசிக்காய் | 160 | 140 | 150 | 200 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 140 | 130 | 150 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 80 | 100 | 120 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |




சாகி சாகித்தியா




மோகன் ராஜ்




பவானி சங்கர்




ரகு ரகுராம்




தனு தனுசன்




மாது மாதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் யூதர்கள் அல்லர் தமிழர்கள்





உலகம் பூராவும் பரந்திருக்கின்ற ஈழத்தமிழர்கள் தங்களை யூதர்களோடு ஒப்பிட்டு பெருமைப்படுகின்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதுண்டு. அழிவுகளிலிருந்து மீண்டெழுந்த சமூகம் என்கிற அளவில் 'யூதர்கள்' முன்னோடியாக கொள்ளப்படக் கூடியவர்கள். அதில் மாற்றுக் கருத்துக்கள் பெரிதாக இல்லை.

ஆயினும், யூதர்கள் (வெளிச்சக்திகளின் ஆதரவோடு) கட்டியமைத்த இஸ்ரேலின் பலஸ்தீனத்தின் மீதான ஆக்கிரமிப்பு என்பது, சிங்கள பௌத்த தேசியம், தமிழ்த் தேசியத் தளத்தில் செய்யும் ஆக்கிரமிப்புக்கு ஒப்பானது. பல நேரங்களில அதனையும் தாண்டியது.

'ஈழத்தமிழர்கள்- யூதர்கள்' ஒப்பீடு எப்படி, எவரினால ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால, இந்த ஒப்பீட்டினை முதலில் செய்தவர், ஈழத்தமிழர்களும் உலகம் பூராவும் பரந்து வாழும இனக்குழுமம் அல்லது சமூகம் என்கிற அடிப்படையில் அதனை முன்வைத்திருக்கலாம்.

அல்லது, பரந்து வாழ்தலினூடு கிடைக்கும் பொருளாதார, சமூக, இராஜதந்திர அறிவு மற்றும் தொடர்புகளினூடு இஸ்ரேல் போன்றதொரு தேசததை இலங்கையில் கட்டமைத்துக் கொள்ள முடியும் என்கிற குறுகிய புரிதலின் போக்கில் உருவாகியிருக்கலாம்.

இந்த ஒப்பீடு எப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தாலும், ஈழத்தமிழர்கள் தளத்தில் அது, திரும்பத்திருப்ப உச்சரிக்கப்படுகின்றது. அதனை, போலியாகவேனும் திருப்தி கொள்வதற்கான வெற்றிப் புள்ளியாகவும் பலரும் கருதுகின்றார்கள்.

பேரழிவுகளுக்குப் பின்னரும் யூதர்கள் எப்படி தங்களை வெற்றிக்கான புள்ளியில் ஒருங்கிணைத்தார்கள் என்பதை புரிந்து கொள்தல் என்பது ஈழத்தமிழர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பெரும் பாடம். ஆனால், அதனைப் புரிந்து கொள்வதில் ஈழத்தமிழர்கள் அக்கறை கொள்வதில்லை. மாறாக, போலி பெருமைப் பீத்தல்களில் அக்கறையாக இருந்து காலத்தை வீணடிக்கின்றனர்.

ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலுக்குள் வைத்து முடக்கப்பட்டு 6 ஆண்டுகள் கடந்துவிட்டது.

யார் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கான இறுதித் தருணம் அது. மீண்டுவருவார்கள், ஆயுத ரீதியில் மீண்டெழுவோம் என்று நம்பிக்கை (?) கொள்வது இன்னும் இன்னும் பேரிழப்பையே கொடுக்கும்.

ஆக, அது தொடர்பில் இப்போது பேசிக் [illegible]ருப்பது வீணானது. சுமார் மூன்று தசாப்தங்களாக ஆயுதப் போராட்டம் மாத்திரம் கூர்மைப்படுத்தப்பட்டிருந்த சமூகம் என்கிற ரீதியில் ஈழத்தமிழ்ச் சமூகம் இப்போது, உள்ளக முரண்பாடுகள், சமூகப் பிறழ்வுகளின் போக்கிலான சமநிலையற்ற தன்மை, கல்வியிழப்பு, பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது.

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுக்குப் பின் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் போர் ஆட்கொண்டிருந்த சமூகமொன்று எதிர்கொள்ளும் உள்ளக முரண்பாடுகளின் போக்கிலும் அணுகப்பட வேண்டியது. வித்தியா படுகொலையோடு நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவதோடு அந்தப் பிரச்சினை முடிந்து போவதில்லை. அத்தோடு நாம் திருப்திப்பட்டுக் கொள்கின்றோம் என்றால், எமக்குள் இருக்கும் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தயங்குகின்றோம் என்று அர்த்தம்.

வித்தியா மீதான வன்புணர்வுக்கு ஒப்பான சம்பவங்கள் எமது சமூகத்துக்குள் நாளாந்தம் இடம்பெறுகின்றன. அதில், வெளியில் தெரிவன சொற்பமானவை. பெண்கள்- சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறைகளும், வன்புணர்வுகளும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்து நீண்ட நாட்களாகிறது.

வித்தியா மீதான வன்புணர்வுப் படுகொலையை பெண்களுக்கு எதிரான பிரச்சினை என்கிற அளவில் மாத்திரம் அடையாளப்படுத்துவதிலும், நாம் பாரிய தட்டிக் கழிப்பினைச் செய்கின்றோம். ஏனெனில், போருக்குப் பின்னரான சமூகமொன்றைப் பீடித்துள்ள பெரும்நோயின் வெளித்தெரியும் ஒரு கூறாக வன்புணர்வு, பாலியல் வன்முறைகளைக் கொள்ள முடியும்.

வெளித்தெரியும் ஒரு நோய்க்கூறினை மாத்திரம் குணப்படுத்துவதுடன் நோயினை முழுமையாக குணப்படுத்திவிட்டதாக கற்பிதம் கொள்ளமுடியாது. நோயினை அதன் ஆணிவேர் வரை சென்று அழித்து, சமூகத்தை குணப்படுத்த வேண்டும். அதுதான், எதிர்காலத்தில் வித்தியாக்களைக் காப்பாற்றும்.

தாழ்ந்து விடாத தீரமும், யதார்த்தங்களை அதிகம் உள்வாங்காத அர்ப்பணிப்புமே ஈழத்தமிழர்களின் பலமும் பலவீனமும். ஆனால், அந்த அர்ப்பணிப்பு என்பது சில தருணங்களில் அடுத்தவர்களினால் செய்யப் படவேண்டும் என்கிற சுயநலவாதம் ஈழத்தமிழனை பேரழிவின் பக்கத்தில் கொண்டு சேர்த்தது. தமிழ்ச் சமூகம் கல்வி மற்றும் பொருளாதார ரீதியில் சீராக ஒருங்கிணைக்கப்பட்ட சமூகம் அல்ல. வர்க்க ரீதியிலான போக்கிலேயே அதனை அணுகி வந்திருக்கின்றது.

இது, உலகம் பூராவுமுள்ள பிரச்சினைதான். ஆனால், யூதர்களோடு தங்களை ஒப்பிடும் ஈழத்தமிழர்கள் முதலில் கல்வி- பொருளாதாரம் ஆகிய புள்ளிகளில் ஒருங்கிணைய வேண்டும். அது, சமூக ரீதியிலான முன்னேற்றத்துக்கு அவசியமானது.

கல்வி என்பது எமக்கிடையில் அந்தஸ்து மற்றும் பணமீட்டலுக்கான கருவி என்கிற அளவிலேயே ஆரம்பம் தொட்டு கையாளப்பட்டு வந்திருக்கின்றது. அதன் விளைவுதான் எங்களை வெற்றிகரமான சமூகமாக முன்னிறுத்துவதில் பிரச்சினைகளை ஏற்படுத்தியது.

ஏனெனில், எம்முடைய கல்வி முறைமை வைத்தியர்கள், பொறியாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள் என்கிற தனி மனித தர நிலையின் போக்கிலேயே அணுகப்பட்டது. அப்படியான நிலையில், அதனை சமூகத்தின் வெற்றிக்கான புள்ளியாக ஒருங்கிணைக்கின்ற போது பாரிய சிக்கல் தோன்றும். இன்னொரு பக்கம் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கையாள்வதற்கான புரிதலை இந்த கல்வி முறை கொடுக்கவில்லை.

உலகம் பூராவும் பாரிய ஆயுத மோதல்கள்- போரினை எதிர்கொண்ட சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிக தருணங்களில் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. ஆனால், அதனை வெற்றி கொள்வதற்கான வாய்ப்புக்களும், வளங்களும் வேறுபடுகின்றன.

அந்த வகையில், ஈழத்தமிழர்கள் போருக்குப் பின்னரான பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், தனிமனிதன் முன்னிலைப்படுத்தப்படும் கல்வியும், அதன் வழிவரும் பொருளாதாரமும் அந்த வெற்றியை நிறைவே தள்ளி வைத்திருக்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையென்பது தீர்க்கப்பட வேண்டியது. அதற்கான முயற்சிகளை யாரும் கைவிடவும் முடியாது.

ஈழத்தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் வரட்டுத்தனமான சிந்தனைகளில், தாம் கற்றறிந்தவர்கள் என்பதும் சமூக ஒழுக்கத்தில் மேலானவர்கள் என்பதுவும் முக்கியமானவை.

எமது கல்வியை வைத்துக் கொண்டு எங்கு சென்றாலும் நாம் பிழைத்துக் கொள்வோம் என்பது பெரும் இறுமாப்பாகவே வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால். அதன் உண்மை நிலை எவ்வாறு இருக்கின்றது என்பது கேள்விக்குரியது.

இன்னொரு பக்கம் சமூக ஒழுக்கத்தில் மேலானவர்கள் என்கிற வரட்டு வாதம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. ஏனெனில், தங்களை எவ்வளவு புலமையாளர்களாக கருதிக் கொண்டாலும், செய்திகளை அறிவதற்காக இன்னமும் இரண்டாம் தர இணையத் தளங்களில் காத்திருப்பவர்கள் எம்மத்தியில் அதிகம். இதில், கற்றவர்கள், கல்லாதவர் என்கிற வேறுபாடுகள் எல்லாம் கிடையாது.

ஈழத்தமிழ்ச் சூழலில் மஞ்சள் பத்திரிகைகளுக்கு ஒப்பான இணையத்தளங்களில் கோலொச்சுகை அதிகம். அடுத்தவனின் அந்தரங்கத்தைப் படம் பிடித்து சமூக ஒழுக்கத்தைக் காக்கின்றோம் என்கிற ரீதியில் பதிவுகளைச் செய்யும் இணையத் தளங்களையே நம்மவர்கள் மொய்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்தத் தளங்களில் வழிவரும் செய்திகளை நம்பிக் கொண்டு சமூகத்தைப் புரிந்து கொண்டால், அவர்களின் புரிதல் எப்படியிருக்கும் என்று நாம் விளங்கிக் கொள்ள முடியும். சமூகத்தைப் அப்பட்டமாக புரிந்து கொள்ளுதல் என்கிற நிலையை எம்மவர்களில் அதிகமானோர் இப்படித்தான் உணர்ந்து வைத்திருக்கின்றார்கள்.

இதனைவிட இன்னொரு பாரிய பிரச்சினை பொருளாதாரம். ஈழத்தமிழர்களின் பொருளாதாரம் என்பது புலம்பெயர் வாழ்வினை பிரதானப்படுத்தி நீண்ட காலமாகின்றது. ஆனால், அதற்கான வாய்ப்புக்களும், வழிகளும் அடைக்கப்பட்ட பின்னரும் அதனையே முன்னிறுத்திக் கொண்டிருப்பவர்களே இங்கு அதிகம். இந்த நிலை, இங்கு வேலையற்றவர்களை நாளாந்தம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

ஏற்கனவே போருக்குப் பின்னரான பிரச்சினைகளோடு இருக்கின்ற சமூகத்தின் பெரும் பிரச்சினையாக வேலையற்ற பிரச்சினைகளையும் கொள்ள முடியும். புலம்பெயர் தேசங்களிலிருந்து அனுப்பப்படுகின்ற பணத்தில் இங்கு அதிகமான தொகை விரயமாக்கப்படுகின்றது. அவை, சரியான பொருளாதார முதலீடுகளாகவே, முன்னேற்றத்துக்கான வழிகளாகவே கையாளப்படுவதில்லை. அது தொடர்பில் யாரும் அக்கறை கொள்வதும் இல்லை.

ஆனால், ஈழத்தமிழர்களின் மீள் எழுச்சியில் புலம்பெயர் சமூகம் பொருளாதார ரீதியில் பங்களிக்க வேண்டிய பாரிய கடப்பாடு இருக்கின்றது. அது, பெற்றோருக்கு அல்லது உறவினர்களுக்கு பணம் அனுப்புதல் என்கிற நிலையிலிருந்து அடுத்த கட்டம் நோக்கி நகர வேண்டும்.

அது, நலிந்து போயிருக்கின்ற உள்ளக பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதுடன், வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கான சாத்தியங்களை உருவாக்கப்பட வேண்டும். அதுவே, [illegible] தலைவர்கள் இன்றி நாளாந்தம் அல்லாடும் ஒரு இலட்சத்துக்கும் அண்மித்த பெண்களையும், வேலை வாய்ப்புக்களின்றி தொடர்ந்தும் பிரச்சினைகளாகவும், பிரச்சினைக்குள்ளும் சிக்கும் இளைஞர்களையும் மீட்டெடுக்க உதவும்.

அப்படியான, முயற்சி என்பது எமது அடுத்த கட்டத்துக்கான அவசரமான நகர்வாகவும் கொள்ளப்பட வேண்டியது. மாறாக, அந்தப் பொறுப்பினை புலம்பெயர் சமூகமும், இங்குள்ளவர்களும் தட்டிக்கழித்தால் தோற்றுப் போன சமூகமொன்றின் அசலான உதாரணமாக ஈழத்தமிழர்கள் அடையாளப்படுத்தப் படுவார்கள்.

போருக்குப் பின்னரான சமூகமாக நாம் தொடர்ந்தும் எம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக்க முடியாது. ஏற்கனவே உலக வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அல்லாடும் நாம், இன்னும் இன்னும் வீழ்ச்சிக்கான பாதையில் செல்ல வேண்டியிருக்கும்.

அப்படியான நிலையில், கல்வியும்- பொருளாதாரமும் ஒருங்கிணைக்கப்பட்டு முழு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அதனூடு சமூக சமநிலையற்ற [illegible] மீட்டெடுத்து சமூக ஒழுக்கத்தின் பக்கமும் நாம் நகரலாம். அதுதான் உண்மையான வெற்றியாகவும் இருக்கும்!

(இணையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்காக செய்யக்கூடிய ஒரேசெயல் நாடாளுமன்றைக் கலைத்து விடுவதே!

## கே.டி.லால்காந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாட்டுக்காக செய்யக் கூடிய ஒரே செயல் என்றால் நாடாளுமன்றத்தை கலைத்து, புதிய மக்கள் ஆதரவுக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதென மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.**

மாத்தறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆதரவு தற்போதைய நாடாளுமன்றினால் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எப்படியிருப்பினும் மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசிய கடசி, முஸ்லிம் காங்கிரஸ், தோல்வியுற்ற மகிந்த தரப்பு ஆகியன நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இருக்கும் தரப்பினர் மாத்திரம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜனாதிபதியும் பிரதமரும் ஆட்சி நடத்த வேண்டும்!

## அஸ்கிரிய பீடாதிபதி வேண்டுகோள்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆட்சி நடத்த இடமளிக்க வேண்டுமென கண்டி அஸ்கிரி பீடாதிபதி கலகம ஸ்ரீஅத்தாதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டி நகர உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியும் பிரதமரும் சிறந்த அரசியல்வாதிகளாவார்கள்.

அவர்கள் சுதந்திரமான முறையில் செயற்படுவதற்கு தேவையான அவகாசத்தை வழங்க வேண்டும்.

நாட்டுக்கு வலுவான ஓர் எதிர்க் கட்சி அவசியமானது.

எனினும், நாட்டுக்கு பயனுள்ள செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்க வேண்டும். குற்றத்தை கண்டால் அதனைச் சுட்டிக்காட்டி விமர்சனம் செய்ய வேண்டும். எனினும் இன்று நிலைமை மாறியுள்ளது.

19 ஆம் திருத்தச் சட்டம் பற்றி பேசுகின்றார்கள், 20 ஆம் திருத்தச் சட்டம் பற்றி பேசுகின்றார்கள், நாடாளுமன்றத்தை கலைக்குமாறு கோருகின்றார்கள், நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவதாக கூறுகின்றார்கள். இவ்வாறு அனைத்தையும் 100 நாட்களுக்குள் செய்ய முடியுமா?

அனைத்தையும் 100 நாட்களுக்குள் செய்து முடிக்க முடியாது.

உலக உரிமைகளில் ஒன்றான கண்டி நகரை பாதுகாக்க வேண்டும், தலதாமாளிகையின் புனிதத் தன்மையை உறுதி செய்ய வேண்டுமென அஸ்கிரி பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# நாடாளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்த அமைச்சுப் பதவிகள் வழங்கப்படல் வேண்டும்

## குமார் வெல்கம கூறுகிறார்



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் அல்ல, வேறு எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்த அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட வேண்டியது கட்டாயமானது என முன்னாள் அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்கு அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர் என ஏதாவது ஓர் வழியில் அமைச்சுப் பதவியொன்று வழங்கப்பட வேண்டும்.

அமைச்சுப் பதவிகளை எதிர்பார்க்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருமில்லை.

தற்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிரதி அமைச்சர் பதவிகளை அரசியல் இலாபத்திற்காக நான் பயன்படுத்திக் கொள்ளப் போவதில்லை.எனது மனச்சாட்சிக்கு விரோதமின்றியே இதனைக் குறிப்பிடுகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன நாடாளுமன்ற உறுப்பினர்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்தார்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டது முதல் அமைச்சுப் பதவிகளை எதிர்பார்க்கின்றனர்.

ஆறு ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த தன் பின்னரே நான் அமைச்சுப் பதவி பெற்றுக்கொண்டேன் என குமார் வெல்கம மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## படிப்பு வேறு அறிவு வேறு

குடியிருக்கும் வீட்டுக்குப் படி, நடை, கூடம், முற்றம், வெளி என்று ஐந்து உறுப்புகள் இருக்கின்றன. வீடு என்றால் மோட்சம் என்ற பொருளும் உண்டு. அதற்கும் இதே ஐந்து பிரிவுகள்தாம். முதலில் படி, அதாவது நல்ல நூல்களைப் படி. அது முதல் நிலை. படித்தால் போதாது படித்த வழியில் நட. அதுதான் நடை. இது இரண்டாவது நிலை. நடப்பது கஷ்டம் என்றால் அப்படி நடப்பவர்கள் உடன் கூடி இரு. சத் சங்கம் செய்... அதுதான் கூடம். இப்படி வாழ்வு முற்றும் என்றால் (நான்காவது முற்றம்) வெளி – வெளியாகிய இறைவன் உடன் கலக்கலாம். இந்த வீடு, அந்த வீடு பற்ற விளக்கம் சரிதானே? சில பேர் நிறையப் படிப்பார்கள். எந்த நூல்படியும் நடக்க மாட்டார்கள். திருக்குறளைத் தலைகீழாக ஒப்புவிப்பார்கள். ஒரு குறளையும் பின்பற்ற மாட்டார்கள்.

டாக்டரிடம் போகிறோம். வயிற்று வலி என்று புலம்பியதும் ஒரு காகிதத்தை எடுத்து மருந்து எழுதி "இதை மூன்று வேளை சாப்பிடு..." என்கிறார் டாக்டர். எழுதிக் கொடுத்த காகிதத்தையே மூன்று வேளை சாப்பிட்டால் வலி குறையுமா? கூடுமா?

இன்றைய படிப்பில் புத்தகங்கள் விழுங்கப்படுகின்றன. மனப்பாடங்கள் பட்டம் பெறுகின்றன. மனித டேப் ரிகார்டர்கள் டிப்ளமாக்களுடன் படிக்கட்டுப் படிக்கட்டாக ஏறி இறங்குகின்றன! சொற்பொழிவாளர்கள் ஒலிக் குப்பைகளால் காதுகளையும் மனங்களையும் நிரப்புகிறார்கள்.

படிப்பு நடைமுறைக்கு வரவில்லை. கேள்வி ஞானம் வாழ்க்கை ஞானம் ஆகவில்லை. எங்கு பார்த்தாலும் ஏட்டுச் சுரைக்காய்கள் என்பதால் உலகம் பசியோடு உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது.

**அது ஒரு பொற்காலம்**

ஸ்ரீரங்கத்தின் துளசி மணம் கமழும் தெருக்களினூடே, இரவுவேளையில் அந்தப் பெரியவர் வேக வேகமாக நடக்கிறார். அவரது சீடர்கள் பதுங்கிப் பதுங்கி அவரைப் பின் தொடர்ந்தார்கள். ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒரு குடிசை. அதற்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்.

இரவு நேரத்தில், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு வந்து, ஊருக்கு ஒதுக்குப்புறமான குடிசைக்கு வந்து கதவைச் சாற்றிக் கொண்டார் குருநாதர் என்றால், சீடர்களுக்கு மனம் எப்படி இருக்கும்? பரபரப்பான கற்பனைகள்... ஓலைகளின் இடுக்குவழியாக உள்ளே பார்க்க...

மங்கலான வெளிச்சத்தில், கட்டிலில் கிடக்கும் மெலிந்த உருவத்தை மெல்லத் தாங்கி எடுத்து உடலைத் துடைத்துச் சுத்தப்படுத்தி, பணிவிடைகள் செய்கிறார் குருநாதர். மாறனேரி நம்பிகள் என்ற நோயுற்ற ஹரிஜன வைணவர் ஒருவருக்கு பெரிய நம்பிகள் என்ற அந்தண வைணவர்தான் இந்த அரும்பணி செய்த அன்பர். செய்தி காட்டுத் தீ போல ஸ்ரீரங்கம் முழுவதும் பரவியது.

ஹரிஜனரைத் தொட்டுப் பணி செய்யும் அந்தண நம்பிகளை என்ன செய்வது? ஜாதிப்ரஷ்டம் செய்வதா? விசாரணை நடத்துவதா? ஸ்ரீரங்கத்தில் தேர்த் திருவிழா வேறு....

"ரங்கனின் தேர் பெரியநம்பிகள் வீட்டு வாசலில் நிற்கலாகாது, இடைக்கால அவமானமாக இது போதும்" என்று தீர்மானம் ஆயிற்று.

கருணைக் கடல் தேர் ஊர்ந்து வந்த சமயம், பெரிய நம்பிகளின் திருமகள் அத்துழாய், கண்களில் நீர்மல்க, கதவைப் பிடித்தபடி வெளியிலே பார்த்தவள், வாய் திறந்து புலம்பினாள்! "எல்லோரும் எம்மை விலக்கினர்.... ரங்கா! நீயும் எமக்கு விலக்கோ!" என்றாள்.

அச்சு முறிந்து தேர் வீட்டு வாசலிலேயே நின்று விட்டது! பத்து நிமிடம் அல்ல... பல மணி நேரம் பகவான் நின்றார்.

இதற்கும் மேலே ஒரு படி.... மாறனேரி நம்பிகள் திரு நாடு அலங்கரித்தார். மரணம் என்ற அவலநிலை கடந்து அமர நிலையாகப் பரமபதம் பெற்றார். அந்த ஹரிஜனப் பெரியவருக்குப் பிரேத ஸம்ஸ்காரம் என்னும் இறுதிக் கடன் வழிபாட்டை அந்தணராகிய பெரிய நம்பிகள் தாமே செய்தார். புனிதமான ஒரு புரட்சி அமைதியாக நடந்தேறியது.

பரம்பரையான நெறிமுறைகளுக்கு இது விரோதம் என்று பழைமைவாதிகள் வருத்தம் காட்டினர். சபையைக் கூட்டி பெரிய நம்பிகளை விலக்கி வைப்பது என்று முடிவு கட்டினர். அவரோ அவர்களுக்கு உண்மையை விளக்கி வைப்பது என்று முடிவு கட்டினார்.

நம்பிகள் உருக்கமாக சொன்னார்:

"ஆளவந்தார் நம் ஆசிரியர். அவர் ஆழ்வார் பாசுரங்களை அனுபவித்து விளக்குவதை, ஹரிஜன மரபில் பிறந்ததால் கோவிலுக்கு வெளியே நின்று மாறனேரி நம்பிகள் கேட்பார்."

"உடல்நலம் குறைந்து பிளவை நோய்வாட்ட, ஆளவந்தார் பலம் குறைந்து உரைத்தார். கோவிலுக்கு வெளியே நின்ற மாறனேரி நம்பிக்குக் கேட்கவில்லை.

ஒருநாள் உபந்யாஸம் செய்ய வரும் சமயம் கால்களில் விழுந்தார். கண்ணீர் மல்க "சுவாமி காலட்சேபம் செய்யும் இந்தக் குறைந்த நேரம் தேவரீர் நோயை எனக்குத் தந்து விட்டுப் போய் ஆனந்தமாகக் காலட்சேபம் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ஆளவந்தார் "அப்படியே ஆகட்டும்" என்று தம் நோயை மாறனேரி நம்பிக்கு வழங்கி விட்டுக் காலட்சேபம் செய்யப் போனார். உடல் உபாதை இன்றி ஆனந்தமாகப் பேசினார். திரும்பி வந்ததும் நோயைத் திருப்பிக் கேட்க, "குரு பிரசாதமாக என்னிடமே இருக்கட்டும்" என்று தர மறுத்தார். குருபக்தியைக் கண்ட ஆளவந்தார், தம் நோயைப் பெற்றுக் கொண்ட மாறனேரி நம்பிகளைத் தம்மைப் போலவே பாவிக்க வேண்டும் என்று எனக்குக் கட்டளையிட்டார். ஆகவே மாறனேரி நம்பிகளை மதித்துப் பிரேத ஸம்ஸ்காரம் செய்ததில் குற்றமில்லை."

இந்த வாதத்தைச் சபை ஏற்கவில்லை! "ஹரிஜன மரபில் வந்த ஒருவருக்கு அந்தணர் ஈமக்கிரியை செய்ய என்ன அனுமதி உள்ளது?" என்றனர். பெரியநம்பிகள் கேட்டார்: "நம்மைவிடப் பட்சி பறவைகள் தாழ்ந்தவையா. உயர்ந்தவையா?"

"தாழ்ந்தவை" என்றனர் சபையோர்.

"ஸ்ரீமந் நாராயணன் இராமனாக அவதாரம் செய்தாரே, நம்மை விட உயர்ந்தவரா? தாழ்ந்தவரா?"

"அபசாரம்... அபசாரம்... இது என்ன கேள்வி! இராமர் நம்மைவிட பன்மடங்கு உயர்ந்தவர்"

நம்மைவிட உயர்ந்த இராமர், நம்மை விடத் தாழ்ந்த பட்சிக்கு, அதாவது ஜடாயுவுக்கு ஈமக்கிரியை செய்ததாகச் சொல்கிறோம். மனிதன் மனிதனுக்குச் செய்ததில் என்ன குற்றம்?"

சபை ஸ்தம்பித்தது. இராமாயணம் படிக்க மட்டுமல்ல, பின்பற்ற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஐ விடவும் கலைப்பதே நல்லது



போகிற போக்கைப் பார்த்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டுத்தான் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை எதிர்நோக்கும் என்று தோன்றுகிறது.

ஜனாதிபதி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஸ்ரீ.ல.சு.க.வின் கீழோ அல்லது ஸ்ரீ.ல.சு.க. உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழோ பொதுத் தேர்தலில் போட்டியிட மைத்திரிபால சிறிசேன சந்தர்ப்பம் வழங்க மறுத்ததை அடுத்தே இந்த நிலைமை உருவாகியிருக்கிறது.

இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமான நிலைமை என்பதில் சந்தேகமே இல்லை. அதேவேளை, நாட்டில் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை விரும்புவோரும் சிறுபான்மையினரும் தற்போதைய நிலையில் அதனை விரும்புவார்கள்.

இதற்கு முன்னர் எந்தவொரு ஜனாதிபதியும் பதவியிலிருந்து விலகிய பின் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக வர ஆசைப்படவில்லை.

பதவியில் இருக்கும் போதே விடுதலைப் புலிகளால் ரணசிங்க பிரேமதாஸ கொல்லப்பட்டதோடு, ஜே.ஆர். ஜயவர்தன, டி.பி. விஜேதுங்க மற்றும் சந்திரிகா குமாரதுங்க போன்ற ஏனைய முன்னாள் ஜனாதிபதிகள் பதவியை விட்டு விலகியதன் பின்னர் அரசியல் பதவிகளை நாடவில்லை.

ஆனால் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகும் ஆசை அல்லது தேவை மஹிந்தவுக்கு ஏற்பட்டுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த ஒருவர், மற்றொரு நிறைவேற்று ஜனாதிபதியின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினராவதில் தன்மானப் பிரச்சினையொன்று இருந்த போதிலும் மஹிந்த அதனை பொருட்படுத்துவதாக தெரியவில்லை.

அவர் தாமாக மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வரும் விருப்பத்தை பகிரங்கமாக தெரிவிக்காத போதிலும் அதற்கான அவரது ஆதரவாளர்களின் போராட்டத்தை அவர் ஊக்குவித்தே வருகிறார். அதுவே ஸ்ரீ.ல.சு.க பிளவுபடும் அபாயத்தை தோற்றுவித்துள்ளது.

ஸ்ரீ.ல.சு.க.வின் ஆதரவாளர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி மைத்திரிபாலவைவிட மஹிந்தவையே விரும்புகிறார்கள் என்பதே உண்மை.

அவர்கள் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி வரை மஹிந்தவை ஆதரித்தார்கள் என்பதுடன் அவரை வணங்கிக் கொண்டே இருந்தார்கள். எனவே, அவர்கள் மீண்டும் மஹிந்த பதவிக்கு வருவதை விரும்பாமல் இருக்க காரணம் இல்லை.

மஹிந்தவுக்கு எதிராகவும் அவரது குடும்பத்தினருக்கு எதிராகவும் அவரது ஆட்சிக்கு எதிராகவும் பாரதூரமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்ற போதிலும் அது அந்த ஆதரவாளர்களுக்கு ஒரு பிரச்சினையாக தெரியவில்லை. எந்தக் கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்களும் தமது கட்சித் தலைவர்கள் என்ன ஊழலில் ஈடுபட்டாலும் அவர்களையே ஆதரிப்பார்கள்.

இந்த நிலைமை 2005 ஆம் ஆண்டு, மஹிந்த பதவிக்கு வரும்போதும் நிலவியது. அப்போதும் ஸ்ரீ.ல.சு.க., சந்திரிகா அணி, மஹிந்த அணி என்று இரண்டாக பிளவுபட்டுத்தான் இருந்தது. அப்போதும் ஸ்ரீ.ல.சு.க ஆதரவாளர்களில் பெரும்பாலானவர்கள் புதியவரை (மஹிந்தவை) விட பதவியில் இருக்கும் பழையவரையே (சந்திரிகாவையே) விரும்பினர்.

ஆனால், இரண்டு முறைக்கு மேல் பதவியில் இருக்க முடியாததனால் சந்திரிகா பதவியிலிருந்து விலகி மஹிந்த, கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் குதித்தபோது முழுக் கட்சியும் மஹிந்தவின் பின்னால் அணி திரண்டது.

இம் முறையும் ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ஒதுங்கியிருந்தால் முழுக் கட்சியும் மைத்திரியின் பின் அணி திரண்டிருக்கும். அல்லது தேர்தலில் தோல்வியடைந்த பின்னராவது மஹிந்த ஒதுங்கிக் கொண்டிருந்தால் கட்சி ஐக்கியப்பட்டிருக்கும். ஆனால், நாடாளுமன்ற தேர்தலில் மஹிந்த குதிக்க முற்படும் நிலையில் கட்சி பிளவுபட்டுள்ளது.

மஹிந்த மீண்டும் அரசியலில் குதிக்க மூன்று காரணங்கள் இருக்கின்றன. முதலாவது அவரை விட்டகலாத பதவி ஆசை.

இரண்டாவது அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள். அந்த குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்க அரசியல்வாதிகளுக்கு கிடைக்கும் சிறப்புரிமைகளை பயன்படுத்த அவர் நினைக்கிறார்.

மூன்றாவதாக தனியே போட்டியிட்டால் கபளீகரமாகிவிடும் நிலையில் உள்ள நான்கு சிறு கட்சிகள், மஹிந்தவின் கழுத்தில் தொற்றி சில ஆசனங்களையாவது பெற்றுக் கொள்ளலாம் என்ற நோக்கில் "மஹிந்த வேண்டும்' என்று நடத்திய கோஷத்தால் மஹிந்த கவரப்பட்டுள்ளார்.

அந்த நான்கு கட்சிகளின் தலைவர்களையும் ஜனாதிபதி மைத்திரிபால நன்றாக கவனித்திருந்தால் அல்லது அந்தக் கட்சிகளுக்கும் தனியாக போட்டியிட்டு சில ஆசனங்களையாவது பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருந்திருந்தால், அவர்களும் இவ்வாறு மஹிந்த வேண்டும் என்று கோஷமெழுப்பிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

அதேவேளை, இரண்டு முறைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதி பதவியை வகிக்க முடியாது என்ற சட்டம் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கின்ற போதிலும் பிரதமராக பதவிக்கு வந்து குறுக்கு வழியில் மீண்டும் ஜனாதிபதியாகலாம் என்ற எண்ணமும் மஹிந்தவிடம் இருக்கலாம்.

"சிலர் பலட் மூலமாக செய்து கொள்ள முடியாமல் போனதை புலட் மூலமாக செய்து கொள்ள முயற்சிக்கிறார்கள்' என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதைத்தான் அண்மையில் குறிப்பிட்டாரோ என்ற சந்தேகமும் எழுகிறது.

இறுதியில், இதுபோன்ற பல காரணங்களால் தூண்டப்பட்டு மஹிந்த மீண்டும் களமிறங்கியதன் நேரடி விளைவாக ஏற்பட்டுள்ள இப் பிளவை சரிசெய்வதாக இருந்தால் ஒன்றில் மஹிந்த அரசியலிலிருந்து ஓய்வு பெற வேண்டும்.

அல்லது மைத்திரிபால, ஸ்ரீ.ல.சு.க. யாப்பை மாற்றி அக் கட்சித் தலைமை பதவியிலிருந்து விலகி மஹிந்தவின் தலைமையில் அக் கட்சி இயங்க இடமளிக்க வேண்டும். அதுவும் இல்லாவிட்டால் கடந்த அரசாங்கத்துக்கு எதிரான சகல ஊழல் குற்றச்சாட்டுகளையும் அரசாங்கம் வாபஸ் பெறும் வகையில் மைத்திரிபால மஹிந்தவுடன் ஓர் இணக்கத்துக்கு வர வேண்டும். இவற்றில் எதுவும் நடக்கப் போவதில்லை. எனவே ஸ்ரீ.ல.சு.க பெரும் நெருக்கடியை எதிர நோக்கப் போகிறது என்பது தெளிவாகிறது.

கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால, ஸ்ரீ.ல.சு.க.வின் மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டமொன்றை கூட்டியபோதே இந்த நிலைமை உறுதியாகியது. அந்தக் கூட்டத்தின் போது சிலர், மஹிந்தவுக்கு தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்க வேண்டும் என்றும் ஸ்ரீ.ல.சு.க. வெற்றிபெறும் பட்சத்தில் அவரை பிரதமராக நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

அப்போது மஹிந்த, ஏற்கனவே எம்.பியாக, எதிர்க்கட்சித் தலைவராக, பிரதமராக இருந்து இரண்டு முறை ஜனாதிபதியாகவும் இருந்துள்ளதாலும் அவருடன் கடமையாற்ற முடியாததனாலும் தாம் அதற்கு சம்மதிக்க முடியாது என ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

தமக்கு மஹிந்தவுடன் கடமையாற்றுவது கடினமாகும் என ஜனாதிபதி கூறிய கருத்து உண்மையே. மஹிந்த அரசியலில் ஒரு பலவீனமான நபர் அல்ல.

அதன் காரணமாகவும் அவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான தற்போதைய பகை உறவின் காரணமாகவும் மஹிந்த பிரதமரானால் ஜனாதிபதி பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

மஹிந்தவும் உட்பட இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகள் தமக்கு கட்டுப்பட்டு, பணிந்து நடக்கக்கூடியவர்களையே பிரதமர்களாக நியமித்தனர்.

ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்தனவும் டி.பி. விஜேதுங்கவும் மட்டுமே விதிவிலக்காக நடந்து கொண்டனர். நடந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இவ்வாறு பிரதமராகும் மஹிந்தவின் கனவை ஜனாதிபதி பாழாக்கியதை அடுத்து, மஹிந்த வேறு வழியைப் பார்த்துக் கொள்வதே ஒரே தீர்வாக உள்ளது.

மஹிந்த வேண்டும் என்று கூக்குரலிட்ட தினேஷ் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியும் வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணியும் உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உறுமயவும் ஜனாதிபதியின் முடிவையிட்டு மகிழ்ச்சியடைந்து இருக்கவும் கூடும்.

ஏனெனில், மஹிந்தவுக்கு, ஐ.ம.சு. கூட்டமைப்பின் கீழ் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்தாலும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லை. இப்போது மஹிந்த அவர்களது கட்சிகளில் ஒன்றின் கீழ் போட்டியிடக்கூடும்.

அதேவேளை, மஹிந்தவுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறி ஸ்ரீ.ல.சு.க. வாக்குகளையும் அவர்கள் தம்பக்கம் இழுக்கவும் முடியும்.

எனவே, தனியாக போட்டியிட்டு [illegible] சபை ஆசனமொன்றையாவது பெற முடியாத சில கட்சிகளுக்கு இப்போது மஹிந்தவின் பெயரால் ஒருசில நாடாளுமன்ற ஆசனங்களை பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஸ்ரீ.ல.சு.க. பிளவுபடுகிறது என்பது மற்றுமொரு விதத்திலும் தெரிகிறது. அக் கட்சியினர், ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு கட்டுப்படாத நிலைமை நாளுக்கு நாள் அதிகரிப்பதன் மூலம் அதுவே தெளிவாகிறது.

நான்கு அமைச்சர்கள் பதவிகளை துறந்து மஹிந்தவை நேரடியாகவே பாராட்டுதல் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை (07.06.2015) நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை சபாநாயகரிடம் கையளித்தமை ஆகியன ஸ்ரீ.ல.சு.க.வுக்குள் மைத்திரியின் பிடி தளர்வதையே காட்டுகிறது. அதேவேளை, ஜனாதிபதிக்கும் அவரது கட்சியான ஸ்ரீ.[illegible]யஸ்தர்களில் நம்பிக்கையான எவரும் இல்லை போல்தான் தெரிகிறது.

அவருக்கு தமது கட்சியில் நம்பிக்கையான ஒருவராவது இருந்தால் அவர் அரசியலமைப்புப் பேரவைக்கு தமது பிரதிநிதியாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவை நியமிக்கத் தேவையில்லை. இந்த நியமனம் நிச்சயமாக சிறுபான்மை மக்களுக்கு ஏமாற்றத்தையே கொடுத்திருக்கும்.

(தொடரும்)

எம்.எஸ்.எம்.ஐயூப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாள நிலச்சரிவில் 41 பேர் உயிரிழப்பு !

## 6 கிராமங்கள் நிலத்தில் புதையுண்டன

(காத்மண்டு)

**நேபாளத்தின் மலைப்பாங்கான வடகிழக்குப் பகுதியில், தொடர் மழை காரணமாக கடந்த புதன்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் 41 பேர் உயிரிழந்தனர். 12 பேரைக் காணவில்லை. அந்த நாட்டின் தாப்லேஜுங் மாவட்டத்தில் ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் 6 கிராமங்கள் மண்ணுக்குள் புதையுண்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**



இதுகுறித்து மாவட்ட தாற்காலிக தலைமை அதிகாரி சுரேந்திர பட்டாராய் தெரிவிக்கையில்,

தாப்லேஜுங் மாவட்டத்தில், வீடுகளில் மக்கள் உறங்கிக் கொண்டிருந்த இரவு நேரத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு கிராமங்கள் புதையுண்டன.

இதில் 30 பேர் உயிரிழந்தனர். 10 பேர் படுகாயமடைந்தனர். 12 பேரைத் காணவில்லை என அஞ்சப்படுகிறது. காயமடைந்தவர்களை மீட்க, நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிக்கு ஹெலிகொப்டரை அனுப்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றார் அவர்.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிக்கு அனுப்பப்பட்ட காவலர் குழு, சரிவுகளுக்கு இடையே சிக்கிக்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏராளமான வீடுகள் மணலில் புதையுண்டதால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் சாந்தி ராஜ் கொய்ராலா தெரிவித்தார்.

இதுவரை அந்தப் பகுதிகளில் இருந்து 12 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மழைக் காலங்களில் நேபாள நாட்டின் மலைப் பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்படுவது சகஜம். எனினும், கடந்த ஏப்ரல், மே மாதங்களில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தாலும், அதன் பின்னதிர்வுகளாலும் 8,700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த அதிர்ச்சியிலிருந்து அந்த நாடு மீள்வதற்குள், இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### இரு நில அதிர்வுகள்

கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் இரண்டு பின்னதிர்வுகள் நேபாளத்தின் சிந்துபால்செக் மாவட்டத்திலும், தோலாகா மாவட்டத்திலும் நேற்று முன்தினம் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரிக்டர் அளவுகோலில் இந்தப் பின்னதிர்வுகள் முறையே 4.6, 4.1 அலகுகளாகப் பதிவானதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-5)

# ஐ.நா. அமைதிப்படை மீது பாலியல் குற்றச்சாட்டு

பாலியல் உறவுக்கு ஒப்புக்கொண்டால் மட்டுமே உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வோம் என்று கூறி, ஹைத்தி பெண்களிடம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப் படை வீரர்கள் "பண்டமாற்றுப் பாலியல் உறவுக்கு" நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

வட அமெரிக்க நாடான ஹைததியில் வாழும் ஏழை மக்களுக்கான உதவிகளை கடந்த 2004-லிருந்து ஐ.நா. அமைதிப்படை வீரர்கள் அளித்து வந்தனர்.

இந்த நிலையில், தங்களது அமைதிக் குழு வீரர்கள் "பண்டமாற்றுப் பாலியல் உறவு" செயல்களில் ஈடுப்பட்டதை ஐ.நா. கண்காணிப்புக் குழு கண்டுபிடித்ததாகவும், அதன் விபரம் தங்களுக்கு தெரியவந்ததாகவும் "தி அசோசியேட் பிரஸ்" செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.நா. அமைதிப் படைக் குழுவில் உலகெங்கும் சுமார் 125 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றனர். இவர்கள் உலக நாடுகளில் நடக்கும் மோசமான சூழல்களில் அதன் மக்களுக்காக சேவை செய்யும் பணிகளில் ஈடுபடுகின்றனர். அவர்களது பணியை கண்காணிக்கும் பொறுப்பில் ஐ.நா. மேற்பார்வைக் குழு செயற்பட்டு வருகிறது.

மேற்பார்வைக் குழுவின் ஆய்வின்படி, வட அமெரிக்க நாடுகளில் மிகவும் ஏழ்மையான நாடான ஹைத்தியில், அமைதிக் குழு பணியாற்றியபோது அங்கிருக்கும் பெண்களுக்கு உணவு, உடை, தண்ணீர், குழந்தைகளுக்கான வசதிகள் என அத்தியாவசிய தேவைகளை பெறுவதற்கு கைமாறாக தங்களுடன் பாலியல் உறவு கொள்ள வலியுறுத்தியதை மேற்பார்வை குழு கண்டறிந்துள்ளது.

"கிராமப்புற பெண்களுக்கு பசி, வாழும் இடம், குழந்தைகளுக்கான தேவைகள், மருத்துவப் பொருட்கள், வீட்டு உபயோக பொருட்கள் என எதுவும் இல்லை. இது போன்ற தேவைகளை அளிப்பதற்கு மாறாக அந்தப் பெண்களிடம் உறவுகொள்ளும் வழக்கத்தை அமைதிக் குழுவினர் வைத்துள்ளனர்.

அவை மட்டுமல்லாமல், செல்போன், லப்டொப், பணம் உள்ளிட்ட பொருட்களையும் அந்தப் பெண்களுக்கு குழுவினர் அளித்தனர்" என்று மேற்பார்வை குழுவின் விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹைத்தியில் 231 பெண்களிடம் கடந்த வருடம் மேற்பார்வைக் குழு வினர் ஆய்வில் ஈடுபட்டதில் இந்த விபரம் அம்பலமானது. அதனை "தி அசோசியேட் பிரஸ்" செய்தி நிறுவனம் தற்போது வெளியிட்டுள்ளது.

இந்தச் செயல் எந்த சமயத்தில் நடந்தது, அதில் ஈடுப்பட்ட குழுவினரது விபரங்கள் என எதுவும் தெரியாத நிலையில் இது குறித்து பேச ஐ.நா. அதிகாரிகள் மறுத்துவிட்டனர். ஆனால், இந்த அதிர்ச்சித் தகவல் தொடர்பான அறிக்கையை ஒரு சில மாதங்களில் ஐ.நா. வெளியிடும் என்று எதிர்பார்ப்பதாக அந்தச் செய்தி நிறுவனம்

# பெண்களால் தொல்லை விஞ்ஞானி பதவிவிலகல்

இங்கிலாந்தைச் சேர்ந்தவர் டிம் ஹன்ட் (72). உயிரி வேதியியல் நிபுணரான இவர் 2001 ஆம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு வென்றார். இவர் இங்கிலாந்தில் உள்ள லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் கௌரவ பேராசிரியராகப் பதவி வகித்து வந்தார்.

இவர்கடந்த 9ஆம்திகதிதென்கொரிய தலைநகர் சியோலில் நடைபெற்ற உலகளவிலான அறிவியல் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது, பெண்களுடன் இணைந்து பணியாற்றுவதில் எனக்குப் பிரச்சினையுள்ளது. அவர்கள் ஆய்வகங்களில் இருந்தால் மூன்று விடயங்கள் நடக்கும். ஒன்று, நீங்கள் அவர்களிடத்தில் காதலில் விழுவீர்கள். இரண்டு, அவர்கள் உங்களிடததில் காதலில் விழுவார்கள். மூன்று, நீங்கள் அவர்களை விமர்சித்தால் அதற்காக அவர்கள் அழுவார்கள். அதனால் ஆண் விஞ்ஞானிகள் அனைவரும் பெண்களே இல்லாத தனி ஆய்வகம் ஒன்றில் பணியாற்ற வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த கருத்துக்காக பல்வேறு தரப்பினரிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியது. இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு தான் கூறிய கருத்துக்காக பொறுப்பேற்று பேராசிரியர் பதவியில் இருந்து விலகுவதாகக் கூறி டிம் ஹன்ட் இராஜினாமா செய்துள்ளார் என்று பல்கலைக்கழக இணையத்தளத்தில் அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

இதற்கிடையே டிம் ஹன்ட் செய்தியாளர்களிடம் கூறியபோது, அந்தக் கருத்தை நான் நகைச்சுவைக்காகத்தான் கூறினேன். எனினும், எனக்குப் பெண்களுடன் இணைந்து பணியாற்றுவதில் பிரச்சினை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மெர்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## 122பேர் இனம் காணப்பட்டனர்

(சியோல்)

தென் கொரியாவில் பரவி வரும் மெர்ஸ் (மிடில் ஈஸ்ட் ரெஸ்பிரேட்டரி சிண்ட்ரோம்) வைரஸால் மேலும் 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்த நாட்டில் மெர்ஸ் வைரஸ் தாக்குதலுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை 122 ஆக உயர்ந்துள்ளது.

வியாழக்கிழமை மெர்ஸ் வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்ட 14 பேரில் ஒருவர் கர்ப்பிணி என அதிகாரிகள் தெரிவித்தனர். அவரது உடல் நிலை தற்போது ஸ்திரமாக இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

தென் கொரியாவில், சவுதி அரேபியா சென்று திரும்பிய 68 வயது நபரை மெர்ஸ் வைரஸ் தாக்கியிருப்பது கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் முறையாகக் கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் மூலம் அந்த வைரஸ் பரவியிருக்கலாம் என்ற சந்தேகத்துக்குரிய 3,500 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வைரஸுக்கு தென் கொரியாவில் இதுவரை 10 பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)




# வோக்கிங் போகும் இராட்சத ஆமை

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள சுகிஷிமா வீதிகளில் செல்லும் மக்கள் அங்கு தினமும் வோக்கிங் செல்லும் இராட்சத ஆமையைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்துள்ளனர். சிலர் கரட், முட்டைகோஸ் என அதற்கு பிடித்தமான உணவையும் வாங்கி கொடுக்கின்றனர்.

உலகில் மிகவும் மெதுவாக நடக்கும் மனிதர் ஹிசோ மிதானி. போன்சான் என்ற தனது ஆபிரிக்க முள் ஆமையுடன் (3 மீற்றர் நீளமும் 70 கிலோ எடையும் கொண்டது) தினமும் சுகிஷிமா வீதியில் வோககிங்(ஊர்ந்து) செல்கிறார். 20 வருடத்திற்கு முன்பாக அவரது மனைவி பிராணிகளை விற்பனை செய்யும் கடையில் போன்சானை வாங்கினார்.

அன்று முதல் இன்று வரை தனது மனைவியைப் பார்த்துக் கொள்வதைப் போல், அந்த ஆமையையும் பத்திரமாக பார்த்துக் கொள்கிறார் மிதானி. (இ-5)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தென்கொரிய பௌத்த பிக்குகள் ஜனாதிபதியுடன் சந்தித்துப்பேச்சு



தென்கொரியாவின் யோரே ஓடர் யக்சாசா பௌத்த விகாரையின்மாநாயக்க தேரர் உட்பட கொரிய பௌத்த பிக்குகள் சிலர் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது செயலகத்தில் சந்தித்துள்ளனர்.

கொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நீண்டகால தொடர்புகள் குறித்து இதன் போது நினைவுகூர்ந்துள்ள ஜனாதிபதி, கொரிய அரசாங்கம் இலங்கையின் அபிவிருத்திக்காக வழங்கிய ஒத்துழைப்புகள் பெறுமதியானது என தெரிவித்தார்.

அத்துடன் இரண்டு நாடுகளின் பௌத்த பிக்குகள் இணைந்து பௌத்த மதத்தை பரப்புவதற்காக மேற்கொண்டு வரும் சேவைகளையும் ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

கொரிய பௌத்த விகாரை இலங்கையின் பௌத்த தலங்களின் கட்டடங்களின் அபிவிருத்தி மற்றும் பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்கி வருகிறது. (இ-5)

# ஊடகச் செய்தியில் உண்மை இல்லை!

## இராணுவப் பேச்சாளர் மறுப்பு



**(கொழும்பு) கொக்காவில் இராணுவ முகாமுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட ஆயுதத் தொகை நவீனரகமானவை எனவும் புதிய திட்டமொன்றை ஆரம்பிக்கும் நோக்கில் அவை அங்கே புதைத்து வைக்கப்பட்டன என்றும் ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தியில் எவ்வித மான உண்மையும் இல்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

செய்திகளை வெளியிடும் போது ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். தவறான தகவல்களை வெளியிடுவதனால்தேவையில்லா பிரச்சினைகள் ஏற்படும். எமது முதலாவது நோக்கம் தேசிய பாதுகாப்பு- அதன் பின்னர் தான் ஏனையவை. கொக்காவில் இராணுவமுகாமுக்கு அருகில் கிடைத்த ஆயுதங்கள் மிகவும் பழையவை. அதுவும் ஒரே இடத்தில் ஒரு தொகை மீட்கப்படவில்லை. ஆங்காங்கே சிறு ரவைகள் - ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

வடக்கில் 5 பேருக்கு ஒரு இராணுவவீரர் உள்ளார் என்று கூறப்படுகிறது. ஆனால் அங்கு எத்தனை பேர் உள்ளனர் என்ற உண்மையான தகவலை கூறுவது சாத்தியமில்லை. இராணுவ இரகசியங்களை பேணவேண்டியது எமது கடமை. தெரிவிக்க வேண்டிய விடயங்களும் உள்ளன. மறைக்க வேண்டியவைகளும் உள்ளன. எத்தனை பேர் அங்கு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர் என்ற தகவலை கூறமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மகிந்தவுக்கு பாதுகாப்பு வழங்கியது ஓய்வாக வீட்டில் இருப்பதற்குத்தான்

(கொழும்பு)

அரசியல் செய்வதற்காக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. வீட்டில் ஓய்வாக இருக்கவே பாதுகாப்பு வழங்கப்படுவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

சந்தி, சந்தியாக கூட்டம் போடாமல் வீட்டில் ஓய்வாக இருந்தால் எந்தப் பிரச்சினையும் வராது. ஓய்வாக நற்கருமங்களில் ஈடுபடத்தான் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சர் சம்பிக்க எதிர்ப்பு

(கொழும்பு)

காயமடைந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்கும் அமைச்சரவை பத்திரத்திற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த யோசனைக்கு தாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் காயமடைந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவது குறித்த அமைச்சரவை பத்திரமொன்றை சில அமைச்சர்கள் முன்வைத்தனர்.

எனினும், இந்த யோசனைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் யோசனை வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென கோரினேன்.

புலம்பெயர் மக்களுக்கான விழாவினையும் எமது கட்சி கடுமையாக எதிர்க்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் இனவாதத்தையும் பயங்கரவாதத்தையும் ஊக்குவிக்கும்.

தடை செய்யப்பட்ட இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் புலம்பெயர் அமைப்புக்கள் தடை செய்யப்பட்டன.

தமிழ் புலம்பெயர் சமூகம் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டுமென சம்பிக்க ரணவக்க நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ-5)

## கணனிகள் கொள்வனவு குறித்து அரசு விசாரணைகளை நடத்தும்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சுக்காக 60 ஆயிரம் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டதில் பெரும் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பாக விசாரணை நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் அகில விராஜ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இது குறித்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கணனி ஒன்றை சாதரணமாக 40 ஆயிரம் ரூபாவுக்கும் 50 ஆயிரம் ரூபாவுக்கும் இடையில் வாங்க முடியும்.

ஆனால் கல்வி அமைச்சுக்காக வாங்கப்பட்ட கணனி ஒன்று ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கப்பட்டதாக கணக்குக் காட்டப்பட்டுள்ளது.

வாங்கப்பட்ட கணனிகள் ஆய்வகங்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. கணனிகளை அதிக விலைக்கு வாங்குவது மோசடி அல்ல. ஆனால் பெறுமதி குறைந்த கணனிகளே விலைக்கு வாங்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மகாநாயக்க தேரர்களும் சிறைக்குச்செல்ல நேரிடும்

### தியவதன நிலமே எச்சரிக்கை

தலதா மாளிகை கணக்கு பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவது அஸ்கிரிய மகாநாயக்க தேரர் கையொப்பமிட்ட பின்பாகும். தேரர்களுக்கு அழுத்தம் கொடுத்து நான் கையொப்பம் பெறவில்லை. எனவே தலதா மாளிகை கணக்கு குறித்து தேரர்களுக்கு பொறுப்புள்ளது.

அந்த பொறுப்பு முழுக்க எனக்கு இல்லை. நான் தவறு செய்திருந்தால் தேரர்கள் என்னை திருத்தியிருக்க வேண்டும். ஆனால் தலைமை பிக்குகள் இருவரும் கணக்கு சரி என்றே கையெழுத்திட்டுள்ளனர்.


என்னிடம் கேட்டதுபோல தேரர்களிடமும் விசாரணை நடத்த வேண்டும் என தலதாமாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல பண்டார தெரிவித்துள்ளார்.

அண்மையில் காலமான அஸ்கிரிய மகாநாயக்க உடுகம ஸ்ரீ புத்தரக்பித தேரர் சுகயீனமுற்றிருந்த காலத்தில் அவருக்கு பதிலாக கணக்குகளில் தற்போதை அஸ்கிரிய மகாநாயக்க கலகம அத்தஸ்ஸி தேரர கையொப்பமிட்டதாக அவர் கூறியுள்ளார்.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய மகாநாயக்க தேரரை சந்திக்கச் சென்ற போது தலதா மாளிகை தியவதனநிலமே பொலிஸ் நிதி மோசடி பிரிவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்க இதுவே காரணமாகும். மகாநாயக்க தேரர்களுக்கு கணக்கு பகுதியில் உள்ள அறியா நிலையை பயன்படுத்தி சூட்சுமமான முறையில் கையெழுத்து பெற்று தியவதன நிலமே நிதி மோசடி செய்துள்ளதாக தெரியவருகிறது.

பிரதமர் அலுவலகம் மேற்கொண்ட விசாரணையில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு குற்றச்சாட்டு உள்ள தற்போதைய தியவதன நிலமே மீண்டும் அப்பதவிக்கு போட்டியிடுவது பதவியை அவமரியாதை செய்யும் செயல் என பௌத்த ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (இ-5)


## பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி. பொன்னம்பலம் ஞானேஸ்வரி**

காரைநகர் அறுகம்புலத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட பொன்னம் பலம் ஞானேஸ்வரி நேற்று முன்தினம் வியாழக் கிழமை அன்று கனடாவில் காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை6 மணி தொடக்கம் 8 மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Wood bine Ave, Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**வேலாயுதம் கந்தையா**

அனலைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் கந்தையா கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் St.John's Dixie Cemetery & Crematorium,737 Dundas St E,Mississauga,ON L4Y 2B5,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**சின்னையா கிரஷ்ணகுமார்**

கொழும்பைபிறப்பிடமாகவும் லண்டன் Morden ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கிருஷ்ணகுமார் கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப11 மணிவரை Oshwal Mahajanwadi Hall,1 Campbell Road,Croydon,Greater London,CRO 2SQ,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**கதிர்காமு சின்னத்துரை**

(முன்னாள் தமிழரசுக் கட்சித் தலைவர்)

ஆவரங்கால் சிவதலத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு சின்னத்துரை கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆவரங்காலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஆவரங்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகளின் வாரிசுகளுக்கு மருத்துவப்படிப்பில் இடஒதுக்கீடு

## விருப்பம் உள்ளதா என மத்திய அரசிடம் உயர் நீதிமன்றம் கேள்வி

(சென்னை)

**இலங்கை அகதிகளின் வாரிசுக ளுக்கு மருத்துவப் படிப்பில் இட ஒதுக் கீடு செய்ய விருப்பம் உள்ளதா என்று மத்திய அரசுக்கு சென்னை உயர்நீதி மன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.**

இது தொடர்பாக சென்னை அம் பத்தூரைச் சேர்ந்த சட்டத்தரணி ஆர்.பிரியா என்பவர் உயர் நீதிமன் றத்தில் தாக்கல் செய்துள்ள பொது நல மனுவில் கூறியிருப்பதா வது,

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதி பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அதில், இலங்கை தமிழ் அகதி என்ற காரணத்தால் ஆர்.நந்தினி என்ற மாணவி மருத் துவ கலந்தாய்வில் பங்கேற்க அனு மதிக்கப்படவில்லை என்று குறிப் பிடப்பட்டிருந்தது. நந்தினியின் தந்தை டி.ராஜா கடந்த 1990 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகா மில் தஞ்சம் அடைந்தார்.

நந்தினி அம்மாவட்டத்தில் உள்ள தனியார் மெட்ரிகுலேஷன் கல்லூரியில் படித்து ஆயிரத்து 200 இற்கு ஆயிரத்து 170 மதிப்பெண கள் பெற்றுள்ளார்.

மருத்துவக் கலந்தாய்வில் பங் கேற்பதற்கான அவரது கட் ஆஃப் மதிப்பெண் 197.5. ஆனால், அவ ரது விணணப்பம் நிராகரிக்கப்பட்டுள் ளது.

எனவே, இலங்கை தமிழ் அகதி நந்தினியை எம்.பி.பி.எஸ். மருத்து வக் கலந்தாய்வில் பங்கேற்பதற்கு அனுமதிக்க வேண்டும். மேலும், அவருக்காக ஒரு எம்.பி.பி.எஸ். இடத்தை ஒதுக்கவேண்டும்.

இவ்வாறு மனுவில் குறிப்பிடப் பட்டிருந்தது.

இம்மனு உயர்நீதிமன்றதலைமை நீதிபதி சஞ்ஜய் கிஷன் கவுல், நீதி பதி டி.எஸ்.சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதன்மை அமர்வு முனபு நேற்றுமுன்தினம் விசாரணை க்கு வந்தது. விசாரணையின் போது, மத்திய அரசின் கூடுதல் சொலி சிட்டர் ஜெனரல் ஜி.ராஜகோபாலன் ஆஜராகி மத்திய அரசின் வெளியு றவுத்துறை, உள்துறை, மனித வள மேம்பாட்டு துறைக்கு அனுப்பிய கடிதத்தை தாக்கல் செய்தார்.

அதில், இலங்கை உட்பட நட்பு றவு நாடுகளுக்கென மருத்துவப் படிப்பின் சுய நிதித் திட்டத்தின் கீழ் சில இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. ஆனால், அந்த இடஒதுக்கீட்டில் அகதிகளின் வாரிசுகள் படிப்பதற்கு உரிமை இல்லை என தெரிவிக்கப் பட்டிருந்தது.

இதையடுத்து, இலங்கை அகதி களின் வாரிசுகளுக்கு மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு ஏதேனும் இடஒதுக்கீடு வழங்க மத்திய அரசு க்கு விருப்பம் உள்ளதா என்பது குறித்து கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் விளக்கம் கேட்டு தெரி விக்க வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து, வழக்குவிசாரணை இம்மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்பது குறிப்பி டத்தக்கது. (இ-5)

# தொழிலாளர்களுடன் ராகுல் போராட்டம்



டில்லியில் போதிய ஊதியம் வழுங்கக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள துப்புரவு தொழிலா ளர்களுக்கு ஆதரவாக காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி போராட்டத்தில் இணைந்திருந்தார்.

கிழக்கு டில்லி மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியா ளர்கள் கடந்த சில மாதங்களாக தங்களுக்கான ஊதியம் வழங் கப்படவில்லை என்று போராட்டம் நடத்தி வருகின்றனர்.


டில்லியில் கடந்த 2 ஆம் திகதி முதல் அவர்கள் தங்களது கோரிக் கையை முன்வைத்து போராட்டம் நடத்தி வரும் நிலையில், நேற்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

கிழக்கு டில்லி மாநகராட்சி அலுவலகம் எதிரே சாலையில் அமர்ந்து, துப்புரவு தொழிலாளர்க ளின் குறைகளை கேட்டறிந்த அவர், டில்லி ஆம் ஆத்மி மற்றும் மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராக அவர் கோஷம் எழுப்பினார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, "அரசிடம் கோரிக்கை விடுப்பதனால் எந்தப் பலனும் இல்லை. அவர்களுக்கு நமது வலிமையைக் காட்ட வேண் டும். உங்களுடன் நான் தற்போது மட்டுமல்ல, 10 மணி நேரத்துக்கு கூட தர்ணாவில் ஈடுபட தயாராக உள்ளேன்" என்றார்.

• ராகுல் காந்தியின் போராட்டம் வெறும் அரசியல் விளையாட்டு என்று டில்லி பா.ஜ.க. தலைவர் சதீஷ் உபாத்யாய தெரிவித்துள் ளார். (இ-5)

# சனியின் மிகபிரமாண்ட வளையம் கண்டுபிடிப்பு



சனிக்கிரகத்தை விடவும் சுமார் 7 ஆயிரம் மடங்கு பெரிதான அதனது பிரமாண்ட வளையத்தை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள் ளனர்.

"சனி கிரகத்திற்கு மிகப்பெரிய வளையம் இருப்பது எமக்கு தெரி யும். ஆனால் நாம் கண்டுபிடித் திருப்பது அதனை விடவும் பிர மாண்டமானது" என்று குறித்த ஆய்வை மேற்கொண்ட மேரிலா ன்ட் பல்கலைக்கழகத்தின் கிரக ங்கள் தொடர்பான விஞ்ஞானி யான டக்லஸ் ஹமில்டன் தெரிவித் துள்ளார்.

2009 ஆம் ஆண்டு சனிக் கிரகத்தின் பிரமாண்ட ஒரு வெளி வட்டு வளையம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

புலப்படாத தூசுகளைக் கொண்டு இந்த வளையம் அமைந் துள்ளது.

போப் வளையம் என்று அழை க்கப்படும் இந்த வளையத்தின் புதிய தரவுகளை ஆராய்ந்த போது அது முன்னர் நம்பப்பட்டதை விடவும் பெரிதானது என்பது கண்டறியப் பட்டுள்ளது.

இதன்படி குறித்த வளையம் சனிக்கிரகத்தில் இருந்து சுமார் 3.75 மைல்கள் தூரம் கொண்ட தாகவும் 6 மில்லியன் மைல்கள் அகலம் கொண்டதாகவும் அமைந் துள்ளது.

இங்கு மனித முடியை விடவும் மிகச்சிறிய கண்ணுக்குத் தெரியாத இருண்ட தூசு துகள்களால் இந்த வளையம் அமைந்திருப்பதாக குறித்த ஆய்வில் கண்டறியப்பட் டுள்ளது.

இந்தக்கண்டுபிடிப்பை உலக நாடுகள் வெகுவாக பாராட்டியுள்ள அதேவேளை சனிக்கிரகம் தொடர் பான விஞ்ஞானிகளின் தேடலை மேலும் அதிகரித்துள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

# எபோலா வைரஸ் தொற்றுக்கெதிராக போராடி மக்களை பாதுகாத்த 3000 பேருக்கு பதக்கம்

மேற்கு ஆபிரிக்காவில் எபோலா வைரஸ் நோய் தீவிரமாக பரவி வந்த நேரத்தில் எபோலா நோய்க்கு எதிராக போராடி மக்களை பாதுகா த்த தைரியசாலிகள், நல் உள்ளம் கொண்டவர்களை பாராட்டி கௌர விப்பதற்கென பிரிட்டன் புதிய தொரு விருது வழங்கல் முறையை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் எபோலாவுக்கு எதிராக போராடிய 3 ஆயிரத்துக்கும் அதிகமானோரு க்கு பிரிட்டன் விருதுகளும் பதக்க மும் வழங்கி கௌரவிக்கவுள்ளது எனவும் நேற்று அறிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் வைர ஸ் வேகமாக பரவி வந்த காலத்தில் தமது உயிரையும் துச்சமாக மதித்து பிரிட்டனிலிருந்து மேற்கு ஆபி ரிக்கா வுக்கு புறப்பட்டு அங்கு பணி புரிந்துள் ளனர். மனிதர்களுக்கான நெருக் கடி களில் மனிதாபிமான முறை யில் தம்மை ஈடுபடுத்தி பணிபுரிந்து வந்தவர்களுக்கு கௌரவப்படுத் தும் விதமாக விசேட பதக்கங்கள் உருவாக்கப்படுவது இதுவே முதன் முறையாகும் என பிரிட்டன் தகவ ல்கள் தெரிவிக்கின்றன.

சிறந்த செதுக்கல் கலை நிபுண ரும் கலைஞருமான ஜோன் பேர்க் டால் என்பவரால் உருவாக்கப்பட்ட இந்தப் பதக்கம் ரோயல் மின்ட் ஆலோசனை குழுவினரால் நடத் தப்பட்ட போட்டியில் சிறந்தது என தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இராணுவத்தினர், பொதுமக் கள், வைத்தியர்கள், மருத்துவ தாதி கள், சுகாதார உத்தியோகத்தர்கள், ஆய்வு கூட ஆலோசகர்கள், எனப் பலருக்கும் இந்த பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. அதற்குரிய முதலாவது விருதும் பதக்கமும் கூடிய விரைவில் தயாரிக்கப்பட்டு உரியவர்களுக்கு விரைவில் அனு ப்பி வைக்கப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-5)


# முன்னாள் தேசிய பாதுகாப்புத்துறைத் தலைவருக்கு சீனாவில் ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

சீனாவில் ஊழல் குற்றச்சாட் டுக்கு உள்ளான முன்னாள் தேசிய பாதுகாப்புத் துறைத் தலைவர் ஜூ யோங்காங்குக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கி ழமை தீர்ப்பளித்துள்ளது.

ஹூ ஜிண்டாவோ ஜனாதிபதி பதவி வகித்தபோது, தேசிய பாது காப்புத் துறைத் தலைவராக இருந் தவர் ஜூ யோங்காங் (73). இவர் மீது இலஞ்சம், அதிகார துஷ்பிரயோகம், அரசு இரகசியங்களை வெளியிட்டது உள்ளிட்டவை தொடர்பாக சீன கம்யூனிஸ்ட் கட்சி புகார் அளித்தது.

இதையடுத்து அவர் மீது பல் வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. இது தொடர்பான விசாரணை கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றது.

அரசு இரகசியங்கள் தொடர்பான வழக்கு என்பதால் வழக்கமான



நீதிமன்றத்தில் விசாரணை நடை பெறவில்லை.

விசாரணையின்போது, தன் மீதான குற்றச்சாட்டுகளை யோங் காங் ஒப்புக்கொண்டார்.

முறைகேடான வழியில் அவர் 21.3 மில்லியன் டொலர் (சுமார் 134 கோடி ரூபா) ஈட்டினார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புத் துறையின் தலை வர் என்கிற முறையில், சீன கம்யூனி ஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் களைக் கூட கண்காணிக்கும் அதி காரம் பெற்றவராக ஜூ யோங் காங் இருந்தார். அவர் பதவி வகித்த காலத்தில், அவரது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, ஏராளமான சொத்துகளைக் குவித்தார் என்ப தும், பெரும் தொகையைச் சேர்த் தார் என்பதும் தகுந்த சாட்சியங்க ளுடன் நிரூபணம் ஆகியுள்ள தால், அவருக்கு ஆயுட்கால சிறைத்தண் டனை விதிக்கப்படுவதாகத் தீர்ப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர் ப்பு குறித்து சீன அரசுத் தொலை க்கா ட்சி விரிவான செய்தி வெளியிட்டது.

ஊழல் ஒழிப்பு தொடர்பாக, தற் போதைய ஜனாதிபதி ஜீ ஜின்பிங் கடுமையான நடவடிக்கைகளை மேற கொண்டு வருகிறார். இதில் பல முன் னாள் அதிகாரிகள் சிக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமையும் (2015.06.13), நாளை ஞாயிற்றுக்கிழமையும் (2015.06.14) காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30மணி வரை வடமாகாணத்தில் உள்ள சில பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

13.06.2015 யாழ்.பிரதேசத்தில் இராமநாதன் வீதி,அரசடி வீதி, வைமன் வீதி,கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, ஆஸ்பத்திரி வீதியில் (மார்டின் வீதி சந்தியிலிருந்து A9 வீதி வரை) நல்லூர் கோவிலடி, நக்கா வீதி, மருதடி வீதி, சுண்டிக்குளி, பஸ்ரி யன் சந்தியில் பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ். மாவட்ட செயலாளர் அலுவல கம், பெனிசுலா புறப்பர்ட்டி டெவலப் பர்ஸ் பிறைவேற் லிமிட்டட் (துளசி மகால்), யாழ்.பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞானபீடம், நக்கா வீதி பிரிட்டிஸ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம் சுன்னாகம், கொத்தியாலடி, மயி லணி, ஐயனார் கோவிலடி, வலியப புலம், கல்லாரை, மல்லாகம், ஏழாலை, அலுக்கை, அளவெட்டி, கேணிக்கரை, அம்பனை, பன்னாலை, சிறுவி ளான், தெல்லிப்பழை, மாவிட்ட புரம், கொல்லன்க லட்டி, கீரிமலை, நகுலேஸ்வரம், பரமேஸ்வராச் சந்தியிலிருந்து இராமநாதன் வீதி புகையிரதக்கடவை வரை, சுன்னாகம் கார் கில்ஸ் பி.எல்.சி, மல்லாகம் நீதிமன்றக் கட்டடத்தொகுதி, சுன் னாகம் மக்கள் வங்கி, தெல்லிப் பழை புற்று நோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலை ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி பிரதேசத்தில் அனிச்சியங்குளம், மல்லாவி, பாரதி நகர், மல்லாவி நீர்ப்பாசனசபை, திருநகர், யோகபுரம், ஆலன்குளம், துணுக்காய், கல்விளான், தென்னியங்குளம், உயிலங்குளம் ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் இரட்டைப்பெரியகுளம், இராணுவமுகாம், BOO ஓயா வவுனியா நகரப் பிரதேசம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, சூசைப்பிள்ளையார் குளம் சந்தி, வவுனியா பஜார், கந்தசாமி கோவில் வீதி, மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, விமானப்படை முகாம், இராணுவமுகாம், Hid ramany ஆடைத்தொழிற்சாலை, Kowloon ஆடைத்தொழிற்சாலை, நாகேந்திரம் அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை, S.V. அரிசி ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா ஹற்றன்நஷனல்வங்கி, வவுனியா வைத்தியசாலை, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, வவுனியா மாவட்ட செயலகம் ஆகிய இடங்களிலும்,

மன்னார் பிரதேசத்தில் கற்கிடந்தகுளம், நீராவிபுரம் ஆகிய பிரதேசங்களிலும்,

14.06.2015 ஞாயிறு யாழ்.பிரதேசத்தில் அளவெட்டி, உயரப்புலம், இளவாலை பொலிஸ்நிலையப் பிரதேசம், மாரீசன்கூடல், கல்லூரி வீதி, சேந்தாங்குளம், மெய்கண்டான், சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டுச் சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ்லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறாடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, நெடுந்தீவு பிரதேசம் முழுவதும் பாரதி லேன், புங்கன் குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதி மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங் குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, குருநகர் Cey-Nor பவுண்டேஷன் லிமிற்ரெட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN) ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி பிரதேசத்தில் அனிச்சியங்குளம், மல்லாவி, பாரதிநகர், மல்லாவி நீர்ப்பாசனசபை, திருநகர், யோகபுரம், ஆலன்குளம், துணுக்காய், கல்விளான், தென்னியங்குளம், உயிலங்குளம், கிளிநொசசி வைத்தியசாலை, கிளிநொச்சி இலங்கைத் தொடர்பு நிலையம், மலையாள்புரம், பாரதிபுரம், கிருஷ்ணபுரம் ஆகிய இடங்களிலும

வவுனியா பிரதேசத்தில் வவுனியா நகரப் பிரதேசம், கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, சூசைப்பிள்ளையார்குளம் சந்தி, வவுனியா பஜார், கந்தசாமி கோவில வீதி, மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன் மடு, ராணி அரிசி ஆலை, நாகேந்திரம் அரிசி ஆலை, S.V. அரிசி ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்படும். (இ-9)

# இரட்டைக் குடியுரிமை கோரி 3 ஆயிரம் பேர் விண்ணப்பம்

இலங்கையில் இரட்டைக் குடியுரிமை கோரி 3 ஆயிரம் பேர் விணணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசாங்கம் இரட்டைக்குடியுரிமை வழங்கும் நடைமுறையை மீள ஆரம்பித்ததனைத் தொடர்ந்து சுமார் மூவாயிரம் பேர் இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்.நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை வழங்குவது தொடர்பில் புதிய நிர்வாக முறைமையொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

கடந்த அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது.

புதிய அரசாங்கம் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையை ஆரம்பித்துள்ளது.

விண்ணப்பம் செய்தவர்களில 600 பேர் வரையில் இரட்டைக் குடியுரிமை பெற்றுக்கொண்டுள்ளதாக அவர் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் 150 பேருக்கு வெளிவிவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் வைத்து இரட்டைக் குடியுரிமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# செல்ஃபி

கிழக்கே போகும் ரயில்...



ச.நிர்மலன், சித்தன்கேணி.

எங்கேயும் எப்போதும் செல்பி...



ரெக்னோ ஆதி, கொக்குவில்.

வண்டி கிளம்ப முன்னதா சின்னதா ஒரு செல்பி...



ஆர். ஜெயபரன்

வடைபோச்சே...



நகுலன். தொட்டிலடி.

வெள்ளை நிறத்திலோர் 'ஜானி' எங்கள் வீட்டில் வளருது கேளீர்...



நிரோசன்ஜிம்மி

நண்பேன்டா...



ஜெயந்

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூற... அல்லது ...யமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயல்க.
உண்மையாயிருக்க மட்டுமே உழைத்திடுக.
- ஹேராம்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## இரட்டைக் குடியுரிமை வாய்ப்பை புலம்பெயர் தமிழர் நழுவவிடக் கூடாது

நாடு என்றால் என்ன? என்பதற்கு வள்ளுவர் வரைவிலக்கணம் கூறுகின்றார். நாடு என்ற அதிகாரத்தின் கீழ் நாட்டின் சிறப்புகள், இயல்புகள் எத்தன்மையாக இருக்க வேண்டும் என்பதை வரையறுத்த வள்ளுவன் ஒரு நாட்டில் என்ன இருக்க வேண்டும் எனக் கூறுகையில்,

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு**

என்றார்.

ஒரு நாளும் குறையாத விளைச்சல், சான்றாண்மைமிக்க மக்கள், குறைவிலாச் செல்வம் படைத்தவர்கள் ஒன்றுசேர வாழ்கின்ற இடமே நாடு.

நாட்டில் என்னென்ன இருக்கவேண்டும் என்பதைக் காட்டிய வள்ளுவர், ஒரு நாட்டில் என்னென்ன இருக்கக் கூடாது என்பதையும் சுட்டி நிற்கின்றார்.

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு**

ஒரு நாட்டில் மிகுந்த பசியும்; தீராத நோயும்; எந்நேரமும் பகைவர் தாக்குவர் என்ற அச்ச நிலையும் இல்லாதிருப்பதே நாடு என்பது வள்ளுவர் கண்ட நாடு.

இந்த அடிப்படையில் குறைவில்லா விளைச்சல், தக்க சான்றோர்கள், செல்வம் படைத்த பரோபகாரிகள் நாட்டில் இருக்கும்போதுதான் பசியும் பிணியும் பகையும் இல்லாமல் போகும்.

எங்கள் நாடென்று இலங்கையை-அதற்குள் அடங்கக்கூடிய தமிழர் தாயகத்தை எடுத்துக் கொண்டால், யுத்த சூழலால் ஏற்பட்ட புலம்பெயர்வு காரணமாக எங்கள் மண் தக்கசான்றோர்களையும் செல்வந்தர்களையும் இழந்து போயிற்று.

கூடவே உணவுக்குரிய விளைச்சலைப் பெருக்கக் கூடியவர்களும் குறைந்து போயினர்.

எனவே இத்தகைய நிலைமைகளால் தமிழர் தாயகம் பல்வேறு துன்பங்களை அனுபவித்துவருகிறது. இத்துன்பங்களை நீக்குவதற்கு மிக நீண்ட காலம் எடுக்கலாம்.

அதாவது சந்ததி இடைவெளி கொண்ட காலம் இதற்குத் தேவைப்படலாம். சிலவேளை இந்தக் குறையை எங்கள் காலத்தில் நிவர்த்திக்க முடியாது என்றொரு நிலைமையும் உருவாகலாம்.

இவை வாழ்கின்ற மக்களை வேதனைப்படுத்தும். இதனால் நாட்டில் எதெது இருக்கக்கூடாது என்று வள்ளுவர் கூறினாரோ; அதெல்லாம் தானாக வந்து சூழும். இந் நிலைமையைத் தவிர்த்து, வள்ளுவன் கண்ட நாட்டை விரைவாக கட்டியமைக்க வேண்டுமாயின் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையின் பிரஜைகளாக தங்களைப் பதிவு செய்ய வேண்டும். தங்கள் நாட்டுக்கு தாமும் தங்கள் பிள்ளைகளும் வந்து போகின்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்

இது எனது தாய் மண் என்ற உணர்வோடு புலம்பெயர் தமிழர் நாட்டுக்கு வந்து போகும் போது, தமிழர் தாயகத்தில் நிறைந்த மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்படும்.

ஆகவே இரட்டைக்குடியுரிமை என்ற சந்தர்ப்பத்தை புலம்பெயர் தமிழர்கள் பயன்படுத்திக் கொண்டு, வெளிநாட்டில் வாழ்ந்தாலும் எங்கள் தமிழர் தாயகத்திற்கு அடிக்கடி வந்து போகின்றவர்கள் என்ற நிலைமையை உருவாக்குவது அவசியம். இதன்மூலம் எங்கள் தமிழ் மண் அபிவிருத்தி அடைவதுடன் புலம்பெயர் தமிழர்களும் எங்கள் சனத்தொகை எண்ணிக்கைக்கு முண்டு கொடுக்க முடியும் என்பதுடன் தமிழ்மொழியை, தமிழ்ப் பண்பாட்டை புலம்பெயர் தமிழர்களின் பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும் கற்றறியவும் வாய்ப்பு உருவாகும்.

இல்லையேல் என்னோடு என் தமிழ்வாழ்வு முடியும் என்ற தீராக்கவலை புலம்பெயர்ந் தவர்களுக்கு ஏற்படுவது திண்ணம் என்பதால், அனைத்துப் புலம்பெயர் தமிழர்களும் இரட்டைக் குடியுரிமையில் இணைவது கட்டாயமானதாகும்.

# பாடசாலைச் சேவை வாகனங்கள் நேற்று திடீர்ச் சோதனை!

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களது போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுகின்ற வாகனங்களது இயந்திரம் உட்பட அனைத்து விடயங்களும் ஒழுங்கான முறையில் காணப்படவேண்டும் என யாழ் மாவட்ட போக்குவரத்து திணைக்கள பரிசோதகர் பொ.மதிவண்ணண் தெரிவித்துள்ளார்.

யாழில் பாடசாலை மாணவர்களுக்கான சேவையில் ஈடுபடும் வாகனங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கை நேற்று இடம் பெற்றது. குறித்த நடவடிக்கை தொடர்பாக ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்கள் சிறுவர்கள். அவர்களை பூவைப்போல பாதுகாக்க வேண்டும். இந் நிலையில் அவர்களை பாடசாலைக்கு அழைத்து செல்கின்ற வாகன சாரதிகள் அளவுக்கு அதிகமாக மாணவர்களை வாகனங்களில் ஏற்றி செல்கின்றனர். இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே இனிவருங்காலங்களில் அவ்வாறு அளவுக்கு அதிகமான மாணவர்களை ஏற்றக்கூடாது.

அத்துடன் வாகனங்களில் முன் கண்ணாடிகளில் தேவையற்ற பூமாலைகளோ வேறு ஏதேனும் தேவையற்ற பொருள்களையும் வைத்திருக்க கூடாது. ஏனெனில் அவ்வாறு வைத்திருப்பதனால் வாகன ஓட்டுநருக்கு வீதி தெளிவாக தெரியாது. இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இவற்றை சாரதிகள் தவிர்க்க வேண்டும் எனவும் அல்லாத பட்சத்தில் அவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வாகனங்களது இயந்திரப் பகுதிகள் அனைத்தும் சரியான முறையில் காணப்பட வேண்டும். இல்லாத பட்சத்தில் வாகன சாரதிகளுக்கு எதிராகவும் உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இவற்றை நாமும் போக்குவரத்து பொலிஸாரும் தொடர்ந்தும் அவதானிப்போம் என மாவட்ட போக்குவரத்து திணைக்கள பரிசோதகர் தெரிவித்தார். (எ-11)

## நாமலிடம் விசாரணை!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் சுமார் நான்கரை மணி நேரம் விசாரணை நடத்தியு ள்ளனர்.

நாமல் ராஜபக்ச நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன் அவரிடம் காலை 9 மணியில் இருந்து மதியம் 1.45 மணி வரை விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணைகளுக்கு தான் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக நாமல் ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்குனுகொலபெலஸ்ஸ நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது, நாமல் ராஜபக்சவின் பாதுகாப்பு அதிகாரி துப்பாக்கியை எடுத்துச் சென்றமை, தென் மாகாண அமைச்சர் டி.வி. உபுல்நிதிமோசடி விசாரணை பிரிவின் அதிகாரிகளை கல்லெறிந்து கொலை செய்ய போவதாக கூறிய சம்பவம் ஆகியன குறித்து நாமல் ராஜபக்சவிடம் விசாரணை நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## வலுவூட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சிகள் ஊடாக பெண்களை வலுவூட்டும் கருத்தரங்குகள் நாளை 14.06.2015 ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரியிலும் பிற்பகல் ஒரு மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் நடைபெறவுள்ளன.

மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஆலாசனைக்கமைய மகளிர் விவகார அமைச்சு ஏற்பாடு செய்துள்ள இந் நிகழ்வில் சேவா என்றழைக்கப்படுகின்ற இந்திய சுயதொழில் ஊக்குவிப்பு நிறுவனத்தின் பிரதிநிதி மேகா தேசாய் சிறப்புரையாற்றுகின்றார்.

ஏற்கெனவே சேவா அமைப்பு கிழக்கு மாகாணத்தில் பெண்கள் அமைப்புகள் உருவாக்கி பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் சுயதொழில் செதிகள் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (எ)

## இலவச செயற்கை கை பொருத்தும் நிகழ்வு நாளை

(கிளிநொச்சி)

அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருக்கும் றோட்டரி அமைப்பை சேர்ந்த செயற்கை கை பொருத்தும் மருத்துவ குழுவினர் கிளிநொச்சி நகர றோட்டரி கழகத்துடன் இணைந்து கை இழந்து அங்கவீனமானவர்களுக்கு நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட செயற்கை கையினை இலவசமாக பொருத்த உள்ளனர்.

இந்நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் (பழைய கிளிநொச்சி வைத்தியசாலை) உள்ள செயற்கை அவயம் பொருத்தும் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

போர் மற்றும் விபத்துக்களால் தமது கைகளை இழந்த அனைவரும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட கைகளை இலவசமாக பொருத்தி பயன்பெற்றுக் கொள்ளலாம் என கிளிநொச்சி நகர றோட்டரிக் கழக செயலாளர் றோட்றோரியன் வைத்தியர் எம். ரமணன் அறிவித்துள்ளார். (எ)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



குறிக்கோள் உடையவனின் வாழ்க்கையானது கடவுளினால் வழிநடத்தப்படும். அருள் அவனுடைய வாழ்க்கையில் நிறைந்திருக்கும்.

குறிக்கோள்கள் அற்றவர்கள் சவால்களைச் சந்திக்கப் பயப்படுவார்கள். தண்டனைகளைக் காணும்போது நாம் தோல்வியடைந்துவிடுவோமோ என்று எண்ணிப் பயப்படுவார்கள்.

ஆனால் குறிக்கோள் உள்ள மனிதனோ தம் வாழ்வில் தடைகள் ஏற்படும் போதெல்லாம் அவற்றை ஒரு சந்தர்ப்பமாகவே கருதுவார்கள்.

ஆகவே நாம் எமது வாழ்வில் குறிக்கோளை ஏற்படுத்திக்கொண்டு எப்படியும் வாழலாமென்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழவேண்டும்.

குழப்பாக இருந்தால் தீர்மானமெடுக்க முடியவில்லையென்றால் எனக்குச் சரியானதை தேர்ந்தெடுத்துக்கொடுங்கள் என்று அவரைக் கேட்கலாம். நாம் முயற்சியெடுத்தால் இறையருள் நிச்சயம் கிடைக்கும்.

ஆகவே குறிக்கோள் உள்ளவனின் வாழ்வில் இயற்கையாகவே முன்னேற்றம் இருக்கும். வாழ்வில் பூரண திருப்தி இருக்கும். ஆக்கபூர்வமாகவும் புத்திக் கூர்மை உள்ளவனாகவும் இருப்பான். மக்கள் இயல்பாகவே அவருடன் சேர்வார்கள். அவர் மேல் நம்பிக்கையுடையவர்களாகவும் இருப்பார்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



நன்மை செய்வது வாழ்வு, பிறருக்கு நன்மை செய்யாமல் இருப்பது சாவு.

இறைவனின் திருவடிகளில் உங்கள் அந்தராத மாவைச் சமர்ப்பியுங்கள். அப்போது ஆற்றல் வரும், உதவி வரும், குறையாத ஊக்கம் வரும், பாடுபடுங்கள், பாடுபடுங்கள். பாடுபடுங்கள் இதையே இன்னும் சொல்கிறேன் என்னைச் சுற்றிலும் இருளாக இருந்த போதும் பாடுபடுங்கள் என்றேன். இப்போது ஒளிவருகின்ற வேளையிலும் பாடுபடுங்கள் என்று அதையே சொல்கிறேன்.

பொறுங்கள்; பணத்தால் பயனில்லை, பெயரால் பயனில்லை, புகழால் பயனில்லை, கல்வியால் பயனில்லை, அன்பு ஒன்றே பயன்தருவது, துளைக்கமுடியாத சுவர்களையெல்லாம் துளைத்து முன்னேறக்கூடியது ஒழுக்கம் ஒன்றுதான்.


என் குழந்தைகளே பயம் வேண்டாம். நட்சத்திரங்கள் மின்னுகின்ற அந்தப் பரந்த வானம் இடிந்து வீழ்ந்து உங்களை நசுக்கிவிடுமோ என்று பயத்துடன் அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு நிற்காதீர்கள். கொஞ்சம் பொறுங்கள், இன்னும் சில மணித்துளிகள்தான், அந்த வானம் உங்கள் காலடியில் கிடக்கும்.

இங்கே ஒரு பிடி சோறு கொடுக்கமாட்டாராம், சொர்க்கத்தில் நித்தியானந்தத்தைத் தருவாராம். இத்தகைய ஒரு கடவுளில் எனக்கு நம்பிக்கை இல்லை.

இருக்கட்டுமே அதற்கு ஏன் பயப்படவேண்டும். உண்மையான துணிவோடு தொடங்கப்படும் நல்ல காரியங்களுக்குஏற்படும் எதிர்ப்புகள் அதை ஆரம்பிப்பவர்களின் ஆற்றலைத்தான் அதிகமாக்கும். தடைகளையோ எதிர்ப்புக்களையோ சந்திக்காத காரியங்கள், மனிதர்களை மரணத்தின் பாதைக்கே அழைத்துச் செல்லும். போராட்டம்தான் வாழ்க்கையின் அடையாளம், புரிகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து பல்கலைக்கிடையிலான வீதியோட்டம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மூன்றாமிடம்






யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் முதன்முறையாக நடத்தப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வீதியோட்ட சுற்றுப்போட்டியில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் பணிப்பாளர் க.கணேசநாதன் தெரிவித்தார்.

இந்த வீதியோட்ட நிகழ்வில் 12 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 78 போட்டியாளர்கள் பங்குபற்றினர். புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி பலாலி வீதியூடாக திருநெல்வேலி சந்தியை அடைந்து ஆடிய பாதம் வீதி, வளாக வீதியூடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானம் வரையில் வீதியோட்டம் நடைபெற்றது.

இந்த வீதியோட்டப் போட்டியில் முதலிடத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டபிள்யு.பி.ஜி.பி. விஜயசிங்க தட்டிச்சென்றார். சப்ரகமுவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த என்.எம்.சி.சி.நவசிங்க இரண்டாமிடத்தையும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆர்.எம்.சி.எஸ்.ரத்நாயக்க மூன்றாமிடத்தையும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டி.எம்.பி.சாந்தரூவன் நான்காமிடத்தையும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எம்.வி.எஸ்.எல்.பிரியங்கார ஐந்தாமிடத்தையும் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணப் பல்கலைகழத்தைச் சேர்ந்த ஏ.ஜே.எட்வின் ஜோசப் 6ஆவது இடத்தையும் எஸ்.யோகராஜ் 10ஆவது இடத்தையும் பெற்றனர்.

வீதியோட்டத்தில் வெற்றி பெற்றவர்களை பல்கலைக்கழக வரிசையில் பார்க்கும் போது, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம் முதலாமிடத்தைப் பெற்றது. பேராதனைப் பல்கலைக்கழகம் இரண்டாமிடத்தையும், யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகம் மூன்றா மிடத்தையும் பெற்றன.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஸ்ட விரிவுரையாளரும இலங்கைப்பல்கலைக்கழக விளை யாட்டுச் சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு ஆலோசனை சபையின் தலைவருமாகிய வைத்திய கலாநிதி செ.கண்ணதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

## இன்றைய போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கத்தின் 2015ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இச்சுற்றுப்போட்டியில் இன்று உதயதாரகை விளையாட்டுக்கழத்தை எதிர்த்து கீரிமலை விளையாட்டுக்கழகமும் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இருபாலை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)

## கரணவாய் கொலின்ஸ் வி.கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

### திக்கம் இளைஞர் அணி வெற்றி

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத்தொடரில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் 4:3 என்ற கோல் கணக்கில் ஞானகலா அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு தகுதியானது திக்கம் இளைஞர் அணி.

ஆட்டத்தின் நான்காவது நிமிடத்தில் திக்கம் அணியின் முன்கள வீரர் அரிகரன் அசத்தலான கோல் ஒன்றைப் போட திக்கத்தின் ஆதிக்கம் ஆரம்பமானது.

திக்கம் அணியினர் குறுகிய நிமிட இடைவெளிக்குள் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடிக்க ஆட்டத்தின் முதல் பாதியில் திக்கம் இளைஞர் அணி 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் இரண்டவாது பாதியில் இயலுமானவரை போராடுவது என்ற முடிவுடன் களமிறங்கியது ஞானகலா. முயற்சிக்கு பயனாக ஆட்டத்தின் 19ஆவது மற்றும் 20 ஆவது நிமிடங்களில் லக்ஸனும் கபிலனும் கோல் போட நிலைமை இறுக்கமடைந்தது. ஆட்டத்தில் என்ன வேண்டுமென்றாலும் நடக்கலாம் என்ற நிலைமை இரு அணியின் பக்கமும் மாறிமாறி வீசி வெற்றிக் காற்றை திக்கம் இளைஞர் அணியின் பக்கமாக வீசச் செய்தார் பிரகலாதன். தற்பொழுது நிலைமை 4:2 இருந்த போதிலும் போராட்டத்தைக் கைவிடவில்லை ஞானகலா. இறுதி வரை போராடி மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்தது. ஆனபோதிலும் ஆட்டத்தை சமநிலையில் முடிக்கவோ அல்லது வெற்றிபெறவோ ஞானகலாவால் முடியவில்லை. முடிவில் திக்கம் இளைஞர் அணி 4:3 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (க)

## கராத்தே சுற்றுப்போட்டி-2015 யாழ்.பல்கலை.வீரன் 2ஆம் இடம்



2015 ஆம் ஆண்டிற்கான அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டியானது ஆனி மாதம் 5,6ஆம் திகதிகளில் சப்ரகமுவா பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப்போட்டியில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக அணியைச் சேரந்த ஏ. எம். டினேஸ் சரத் சந்திர என்பவர் 50கி.கி. பிரிவிற்கு உட்பட்ட குமிற்தே போட்டியில் 2ஆம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவருடன் பயிற்றுனர் ஏ. ஆர். சைலேந்திரகுமார் மற்றும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியர் எஸ். றஞ்சித் குமார் நிற்பதனை படத்தில் காணலாம். (க)



வட மாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ருமித்தே கராத்தே போட்டியில் தங்கப்பதக்கத்தினை பெற்றுக் கொண்ட யாழ். இந்துக்கல்லூரி மாணவன் இ.செந்தூரன் தனது பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுவிப்பாளருடன் நிற்பதனை படத்தில் காணலாம்.

### பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட்

## நெல்லியடி மத்திய கல்லூரியை வென்றது தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி




இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் சிங்கர் வெற்றிக் கிண்ணத்துக்காக பாடசாலைகளில் 15 வயதுப் பிரிவு 3 அணிகளுக்கிடையில் நடத்தி வரும் 50 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் போட்டியொன்றில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி 89 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் மகாஜனாக்கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜ னாக் கல்லூரி அணி என்.சர்மிலன் பெற்ற 105 ஓட்டங்களின் உதவியுடன் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் என்.சர்மிலன் 105, எஸ்.ரிசாந்த் 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 43 ஓட்டங்கள் பெறப்பட்டன. பந்துவீச்சில் நெல்லியடி மத்திய கல்லூரி சார்பாக ரி.விஜிபன் 3, ஸ்ரீ.கிருஸ்ணா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய அணி 39.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 176 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் எஸ்.தர்சிகன் 60, கி.அபிரதன் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்த னர். உதிரிகளாக 38 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் மகாஜனாக் கல்லூரி அணி சார்பாக [illegible] 3, எஸ்.நிசாந்த் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தமிழரசு க.சின்னத்துரை JP (ஆவரங்கால்)



மலர்வு
28 - 05 - 1926

உதிர்வு
10 - 06 - 2015

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட க.சின்னத்துரை JP (தமிழரசு) 10.06.2015 புதன்கிழமை அன்று அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் திரு.திருமதி கதிர்காமு அவர்களின் அன்பு மகனும், அமரர் திரு மதி நல்லபிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மலிங்கம், இராசலிங்கம் மற்றும் பாலசுந்தரம், செல்லப்பாக்கியம், பரமேஸ்வரி, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கதிரிப்பிள்ளை, சண்முகநாதன் (UK), ஜெகதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சிறிவசந்தமல்லிகா, சிறிவசந் தேஸ்வரன், சிறிவசந்தமாலா, சிறிவசந்தறோசா, சிறிவசந்தநிலா, சிறி சிவதர்ஷினி, தர்மேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 14.06.2015 முற்பகல் 11.00 மணிக்கு அஞ்சலிக்காக ஆவரங்கால் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தமிழரசி வாசா**
**வன்னியசிங்கம் வீதி,**
**ஆவரங்கால்.**

**தகவல்:-குடும்பத்தினர்**
**0770476598**

(739)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும்
சிறந்த சமூக சேவையாளரும்



## சிவதலம் சிந்தனையாளர்
அமரர் தமிழரசு
## க.சின்னத்துரை (J.P)
ஆவரங்கால்

மலர்வு
28.05.1926

உதிர்வு
10.06.2015

**இளைஞர் அணி**
இலங்கை தமிழ் அரசு கட்சி
யாழ் மாவட்டம்

(739)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது திருத்தத்துக்கு...

றத்துக்கு தொகுதிவாரியாக 125 உறுப்பினர்களும், மாவட்ட அடிப்படையில் விகிதாசார முறைப்படி 75 பேரும், தேசியப்பட்டியல் மூலம் 25 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஆனால், இந்த யோசனைக்கு சிறுபான்மையின மற்றும் சிறிய கட்சிகளுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மற்றொரு யோசனைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி தேர்தல் தொகுதி வாரியாக 145 பேரும் மாவட்ட மட்ட விகிதாசார அடிப்படையில் 55 பேரும் தேசியப் பட்டியலின் மூலம் 37 பேரும் உறுப்பினர்களாக தெரிவு செய்யும் வகையில் இந்த திருத்தம் அமைவதாக அமைச்சரொருவர் கூறினார்.

கடந்த அமைச்சரவயில் எதிர்ப்புகளை வெளியிட்ட சிறுபான்மை இன கட்சிகளின் அமைச்சர்களால் இதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

புதிய நாடாளுமன்ற தேர்தல் முறை தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு நேற்று நள்ளிரவு வெளியாகும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

தறபோது 225 உறுப்பினரகளை கொண்ட நாடாளுமன்றத்தில் தொகுதிவாரி பிரதிநிதித்துவம் இல்லை.

விகிதாசார அடிப்படையில், மாவட்ட ரீதியாக 196 பேரும் தேசி யப் பட்டியல் மூலம் 29 பேரும் அங்கத்துவம் பெற்றுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# நீதிமன்றத் தாக்குதல்...

வான் பொ.சிவகுமார், திறந்த பல்கலைக்கழக சட்ட பீட மாணவர் ஒருவரை 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்பிணைகளில் செல்லவும் அனுமதியளித்தார்.

யாழ். நீதிமன்றத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டமை, யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காண்காணிப் பகத்தை தாக்கியமை, வீதிகளில் ரயர் எரித்தமை மற்றும் வீதிச் சமிக்ஞை விளக்கை சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் 130 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில், நீதிமன்ற கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டமை, சிறைச்சாலை வாகனங் களை அடித்து சேதமாக்கியமை, கடமையிலிருந்த பொலிஸாரை காயப்படுத்தியமை, ஆகிய மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 43 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்றையதினம வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்படி குற்றத்துடன் தொடர்புடையவர்கள் என 54 பேரை ஆஜர்ப்படுத்தப்படுத்தினர். இவர்களின் 12பேர் வீடியோ ஆதாரங்களை வைத்து கடந்த சில நாட்களில் விசேட குற்றத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள்.

விசாரணையின் போது, பிணை வழங்கப்பட்ட 14 பேரின் பெயர்களை மன்றில் குறிப்பிட்ட பொலிஸார் இவர்கள் குற்றஞ் செய்தமை தொடர்பாக வீடியோ ஆதாரங்கள் மற்றும் ஏனைய விசாரணைகள் தொடர்பில் ஆதாரங்கள் இல்லையெனவும், இவர்களை வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு ஆட்சேபனை இல்லை யென தெரிவித்தனர்.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணைக்கு, நீதிமன்றம் அழைப்பு விடுக்கும் பட்சத்தில் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனையில் அடிப்படையில் 14 பேருக்கும் நீதவான் பிணை வழங்கினார். ஏனைய 39 பேரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (எ-4)

# அதிகாரம் கொண்ட...

ரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே ஜனநாயக கட்சியின் மூத்த செனட்டரான பற்றிக் லேஹி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் தெரிவிக்கையில், இலங்கையின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை சுதந்திரமானதாகவும், நம்பகமானதாகவும் இருக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் அதன் உள்நோக்கம் குறித்து கேள்வியை எழுப்புகின்றன.

உதாரணமாக படைத்தரப்பின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் சட்டத்துக்குப் புறம்பாக கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை, படைத்தரப்பின் ஆட்டிலறி தாக்குதலில் பெருமளவான பொது மக்கள் கொல்லப்பட்டமை உள்ளிட்ட பரந்தளவிலான மீறல்கள் இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் பங்கெடுத்த படைப்பிரிவுகளில் ஒன்றுக்குத் தலைமை தாங்கியவர்.

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால குற்றங்களுக்கு தீர்வு காண்பதில் புதிய அரசாங்கம் கரிசனையாக இருக்குமானால், மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் போன்ற மூத்த படை அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

மூத்த படைத் தளபதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறினால், குறிப்பாக இன்னமும் சேவையில் உள்ள அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறினால், அரசாங்கத்தின் நம்பகத்தன் மையை மோசமாகப் பலவீனப்படுத்தும்.

இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்புகூறுவதற்கு தனியே உள்நாட்டுப் பொறிமுறையை அமைப்பது மட்டும் போதுமானதல்ல. அது நம்பகமானதாகவும், சுதந்திரமானதாகவும் இருக்க வேண்டும்.

02ஆம் பக்கம் பார்க்க....

**Public Speaking - English**

கொழும்பில் மிகவும் பிரபல்யமான
கற்கை நெறியான public speaking
என்ற ஆங்கில கற்கை நெறியானது
**முதன் முறையாக**
யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகிறது.
அச்சமின்றி தன்னம்பிக்கையுடன்
ஆங்கிலத்தில் கதைப்பதற்கும்
leadership தகைமைகளை
வளர்த்துக் கொள்வதற்குமான
சிறந்த சந்தர்ப்பம்
(741)
திகதி :- June 20 மற்றும் 21 ம் திகதி
ஆசனப்பதிவுகளுக்கு .....
Student Success Centre
320, main street, Jaffna
0776169470

# நாடாளுமன்றம்...

கூறியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, பயபடாமல் பதவிகளை ஏற்குமாறும் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் தன்னிடமே இருப்பதாகவும் கூறியுள்ளார்.

அனைத்து மாவட்டங்களுக்கும் அமைச்சர்களை நியமித்து கட்சியை கீழ் மட்டத்தில் இருந்து வலுப்படுத்திய பின்னரே நாடாளுமன்றத்தை கலைத்து விட்டு தேர்தல் நடத்தப்படும்.

சில நேரம் வருட இறுதி வரை நாடாளுமன்றம் கலைக்கப்படாது எனவும் இதனால், அமைச்சு பதவிகளை பெற்று தமக்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பதிலால் திருப்தியடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் ஜயசூரிய, திலங்க சுமதிபால உள்ளிட்ட 4 பேர் பிரதியமைச்சர் பதவிகளை பெற சம்மதித்துள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் மங்கள சமரவீர மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரை பலவீனப்படுத்தும் நோக்கில் சனத் ஜயசூரியாவும், விஜய தஹநாயக்கவும் பிரதியமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் நல்லிணக்கத்திற்கான அடிப்படையை உருவாக்க முடியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நல்ல பண்புகள் மற்றும் செயற்திறனுடைய பிரஜைகள் நாட்டின் அபிவிருத்திக்கு அவசியப்படுகின்றனர்.

தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்தின் ஊடாக புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இவற்றுடன் ஒப்பீடு செய்யும் போது மனிதனின் ஒழுக்கம் மற்றும் பண்புகள் விருத்தியடைந்துள்ளனவா என்பது கேள்விக்குறியேயாகும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியின் 75-ம் ஆண்டு நிறைவு நிகழ்வில் நேற்று முற்பகல் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட டுள்ளார். நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, பொது மக்கள் பாதுகாப்பு அமைசசர் ஜோன அமரதுங்க உள்ளிட்ட தரப்பினரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)



மீண்டும் O/L உடன்
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
**Business & Hotel Management**
யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!
விளக்கக் கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்
20-06-2015 காலை 10 மணி சிகரம் கேட்போர் கூடம்
முற்பதிவுகளுக்கு: 0777 32 4004
வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.
**அனுமதி முற்றிலும் இலவசம்**
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11
(C-1253)

# பாசையூரில்...

கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த இடத்தில் 30 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை சிறு தொகை டைனமைட் மருந்துடன் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் டைனமைட் மருந்துகளை நிலத்துக்கு அடியல் மறைத்து வைத்திருப்பதாக அவர் வழங்கிய தகவலை அடுத்து நேற்று மாலை அப் பகுதியில் ஒரு கிலோ டைனமைட் மருந்தை பொலிஸார் மீட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக வசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-9)

**மே மாதம் மட்டும் 22 விசா!**
15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
**எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...**
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA
கனடா Express Entry Visa
தொழில்வாய்ப்புடன் குடியுரிமை (PR)
Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
Student VISA
UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia
FREE Assessment
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
**www.sikaram.lk**
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11
(C-1252)

**காணி விற்பனைக்குண்டு**
மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு
(738)
தொடர்புகளுக்கு : 077-9863089 021-5616110

# புலிகளுக்கு...

மொஹமுட் சபார் உல் ஹக் குற்றம சுமத்தியுள்ளார்.

இலங்கையின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் வகையில் இந்தியா, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவிகளை வழங்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குஜராத்தில் 2000 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதாகவும், இது குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி எவ்வித அனுதாபமும் வெளியிடவில்லை என அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் சார்க் மற்றும் பிற சர்வதேச அமைப்புக்களை அணுகி இந்தியாவின் தலைமைத்துவத்தை பற்றி அம்பலப்படுத்த வேண்டும். இந்தியா பொறுப்பற்ற மாநிலம் என இதன் ஊடாக நிரூபித்துள்ளது.

சர்வதேச சமூகம் மோடியின் ஆத்திரமூட்டும் அறிக்கை தொடர்பில் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என சையத் முசாபர் ஹுசைன் ஷா வலியுறுத்தியுள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் உறவுகள் சம நிலையில் நிறுவப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஆயுதப் படைகள், உள்துறை அமைச்சகம் மற்றும் இந்திய அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சிற்கு அவர் பாராட்டியுள்ளார்.

சையத் முசாபர் ஹுசைன் ஷா பாகிஸ்தான் அமைதியான நாடு எனவும் எந்தவொரு தரப்பு மீதும் கோபப்படப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். தீவரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக பாகிஸ்தான் பதில் தாக்குதல் நடத்தலாம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# 2 பில்லியன்...

ரவி கருணாநாயக்க தெரவித்துள்ளார்.

இன்னும் ஒரு சில நாட்களில் ஒரு பில்லியன் டொலர்களை கடனாக பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும், எதிர்காலத்தில் இது இரண்டு பில்லியன்களாக அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வருமானத்தை மிகைப்படுத்தி, திட்டமிட்டு செலவினங்களை குறைப்பதற்கு முன்னைய அரசாங்கம் செயற்படவில்லை.

முன்னைய அரசாங்கம் அதிக வட்டிக்கு வெளிநாட்டில் கடன்களை பெற்றுக் கொண்டதாகவும், தற்போதைய அரசாங்கம் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம மக்கள் நலன சார் செலவுகளை அதிகரித்துள்ளதோடு, எரிபொருள் விலைகளை குறைத்துள்ளதாக அமைச்சர் சுட்டிககாட்டியுள்ளார். (எ-11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org